வார இதழ்

ஆதவன்

ராவய வெளியீடு

ATHAVAN ஆதவன்

தொகுதி: 24
26.11.2000
விலை ரூபா 12.00
Registered as a Newspaper in Sri Lanka



மாவீரர் உரை!

சமத்துவத்துடன் வாழ, சமாதானத்தின் குரலாய் திகழட்டும்!

வாசகர் குரல்

ஆதவன் இதழ் 19ல் பிரசுரமாகியிருந்த அக்கரைப் பற்றில் ஒரு காட்டுத் தர்பார்.... எனும் செய்தி குறித்து வாசகர் ஒருவர் தனது சந்தேகத்தையும் அதிருப்தியினையும் இதழ் 21இன் வாசகர் பகுதியில் தெரிவித்திருந்தார். அந்த வாசகரின் மடலுக்கான பதிலாக இது அமைகிறது.

குறித்த வாசகர், அச்செய்தி பிழையானது என்பதை நிரூபிப்பதற்காக தனது பக்கத்திலிருந்து சில ஆதாரங்களை முன்வைத்திருந்தார். அவைகளில் ஒன்று சம்பவதினம் பள்ளி வாயில் தலைவர், சிலரால் பலாத்காரமாக அழைத்து வரப்பட்டார். அதன் பின்னரே அதான் சொல்லப்பட்டது என்பது. இரண்டாவது பள்ளி வாசல் தொடர்ந்து மூடப்படவில்லை சம்பவதினத்துக்கு மறுநாளே பள்ளிவாசலினுள் அஸர் தொழுகை இடம் பெற்றது என்பது.

இவ்விடயம் சம்பந்தமாக அக்கரைப் பற்று அனைத்துப் பள்ளிவாயில்கள் சம்மேளனத் தலைவர் அஸீஸ் அதிபர் அவர்களை நாம் சந்தித்து இம்மறுப்புச் செய்தி பற்றிக் கேட்டபோது "தான் அவ்வாறு எவராலும் பலாத்காரமாக அழைத்துச் செல்லப்படவில்லை எனவும், ஊரில் அவ்வாறு ஒரு பிரச்சினை ஏற்படும் போது குறித்த இடத்துக்குச் சென்று தீர்வு முயற்சிகளில் ஈடுபடுவது பள்ளி வாயில் தலைவர் என்ற முறையில் தனது கடமை என்றும் தெரிவித்தார்.

அக்கரைப் பற்றில் ஒரு காட்டுத்தர்பார்... மறுப்புச் செய்திக்கு ஒரு விளக்கம்

அதே வேளை சம்பவத்துக்கு மறுதினம் பள்ளிவாயிலின் உள்ளே எந்த விதமான தொழுகை நடவடிக்கைகளும் இடம் பெறவில்லை என்றும் பள்ளிவாயில் வளவினுள் அமைந்துள்ள வேறொரு மத்ரஸா கட்டடத்துனுள்ளேயே தொழுகை நடைபெற்ற தாகவும் பள்ளிவாயல் தலைவர் அஸீஸ் மேலும் தெரிவித்தார்.

ஆக, குறித்த மறுப்புச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்த விடயங்களில் எந்தவிதமான உண்மைகளும் இல்லை என்பதையும், அதை எழுதியவர் ஒரு குறுங்குழுவாதச் சிந்தனையுடன் அம்மடலை வரைந்திருக்கிறார் என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறோம்.

எனவே, எமது செய்திகளின் உண்மைத் தன்மையில் எவரும் சந்தேகிக்கத் தேவையில்லை.

யுயெல் மப்றூக்.

தீயினில் எரியாத தீபங்கள்!

பொங்கு வேள்வியில் குதித்த மானிடர்
ஓங்கி நின்றனர் தியாகத் தீயுமாய்!
தாங்கி நின்றிடும் தாயக மண்ணதும்
தேங்கிக் கிடக்குது துயர்களைச் சுமந்துமே!

கார்த்திகை என்றதும் "தீப" நாளது
கண்ணினில் கூடியே "சுடரை" ஏற்றிடும்!
கனவுகள் கண்ட கல்லறை நாயகர்
காப்பரண் ஆனதும் மனங்களில் மீண்டிடும்!

அடிமுடி தேடிய "மாயவன்" கதையும்
விடிவது தேடிய "மாவீர" க் கனவும்
கூடிய நினைவினால் மனங்களில் நின்றுமே
வாடிய வதனமாய் எங்களை மாற்றிடும்!

பல்துளை சுடுகுழல் குண்டுகள் பொழிந்ததால்
கல்லுடை உண்டதாய் சிதறின வீடுகள்! - சுடு
காடுமாய் மாறிய எங்களின் நிலங்களும்
தேடுவார் இன்றிப் பிணங்களால் மலிந்தன!

சீறிடும் பேய்களும் வெருண்டுமே ஓடிட!
தேறிய மனங்களில் அமைதி பூண்டிட!
நாயகர் சாவுகள் காவியம் ஆகிட!
தீபங்கள் ஏற்றியே தாபங்கள் போக்குவோம்!

-தாவை.லோ.துளஷி-

சென்ற வாரத் தொடர்ச்சி...

நெஞ்சோடு நெஞ்சம்

ஒலிரும் ஒசையும் இயல்பின் மொழியுமாய் விரியும் அமரதாஸ் கவிதைகள்

ஈழத்தின் நவீன கவிதைப் பண்பு அநேகமாக சமூக இயக்கத்தின் புறவெளிப்பாடுகளையே வெளிப்படுத்தி வந்திருக்கின்றது. இதையே படைப்பாளிகளும் விமர்சகர்களும் தடைப்பிடித்தும் வலியுறுத்தியும் வந்திருக்கின்றார்கள். ஒரு மெலிதான நெகிழ்ச்சியின் மூலம் இதிலிருந்து சற்று விலகி மகாகவி, நீலாவணன், சண்முகம் சிவலிங்கம், மு.பொ., சு.வி, உட்பட வெகு சிலர், அக உணர்வின் தரிசனத்தையும் கவிதையாக்கியுள்ளனர். இந்தப் பண்பு நிலையிலேயே அமரதாஸும் தனித்துவத்துடன் இயங்குகின்றார்.

ஈழத்துக் கவிதை இரண்டு போக்குகளைக் கொண்டே இயங்கி வந்திருக்கின்றது. ஆர்ப்பாட்டமும், வேகமும் உள்ள கவிதைகள் ஒன்று. அமைதியும், நிதானமும், தீவிரமும் இணைந்த போக்கு மற்றையது. அமரதாஸ் இந்த இரண்டாவது பண்பிலேயே இயங்குகின்றார். தமிழ் வாசகர்களைப் பொறுத்தவரையில் அவர்கள், ஆர்ப்பாட்டமும் வேகமும் உள்ள கவிதைகளுடனேயே அதிகம் பரிச்சயம் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். அவர்களின் எதிர்பார்க்கையும் இவ்வாறான கவிதைகளையே கோருகின்றது. இதனால், நெகிழ்ச்சியும், நிதானமும், தீவிரமும் கொண்ட கவிதைகள் மிகப் பிந்தியே வாசகரிடத்தே அறிமுகமாகின்றன. இதுவே மஹாகவி, நீலாவணன் போன்றோருக்கும் நிகழ்ந்தது, இந்நிலையே இன்றும் தொடருகின்றது, காலம் பிந்திய கவனிப்பாகவும் கவனிக்கத் தவறிய தணிப்பாகவும் இந்நிலை பராமரிக்கப்படுகிறது. இந்தத் துயரநிலையைத் தகர்ப்பது வாசகரிடத்துள்ள முக்கிய பொறுப்பாகும்.

ஏற்கனவே பரிச்சயங்கொண்ட வாசிப்பு முறையினூடாக ஒரு புதிய கவிதையை அணுகமுடியுமென எதிர்பார்ப்பது முற்றிலும் பொருத்தமானதல்ல. இங்கே அமரதாஸ் தன் கவிதைகளுடனான உறவை வாசகன் கொள்வதற்குப் புதிய விரிந்த அனுபவத்தை வாசகனிடத்தே கோருகின்றார். சுருங்கிய வட்டத்துள் உறவைக் கொண்டிருக்கும் ஒரு வாசகன் அமரதாஸின் இந்தக் கவிதைகளை உணரமுடியாமல் தவறிவிடுவான். இந்தத் தொகுதியில் புத்தகம் பற்றி என்ற கவிதை மிக முக்கியமான சவால்களை வாசகனிடத்தே எழுப்புகின்றன. வாசகன் தன் அனுபவங்களுடனும் சிந்தனையுடனும் இக் கவிதையினை எதிர்கொள்ள வேண்டியதாகிறது. இந்தத் தொகுதியிலுள்ள சில கவிதைகள் நெடுங்கவிதைகளுக்கான அடையாளக் கூறுகளைக் காட்டுகின்றன. அதே வேளையில் இவற்றின் பல பகுதிகள் தனித்தனிக் கவிதைகளாகவும் சேர்த்துப் பார்க்கையில் முழுக் கவிதையின் வடிவத்தோடும் இணைந்திருக்கின்றன. இவற்றில் புத்தகம் பற்றி என்ற கவிதை கொண்டுள்ள தீவிரம் நம்மிடையே எழுப்பும் உணர்வும் சிந்தனையும் சாரம் நிறைந்தது ஆழமானது வலுவானது நுட்பமானது.

அமரதாஸ் தனக்கும் சமூகத்துக்குமான உறவையும் இடைவெளியையும் தன் கவிதைகளின் மூலமாகத் தாட்டியுள்ளார். தன்னில் தான் வாழ்தல் என்பதே இவர் கவிதைகளில் தொனிக்கும் சாரம். இந்தத் தொனிப்பே மெய்யாகவும் மனிதனின் உண்மை முகமாகவும் இருக்கின்றது.

இன்றைய கவிஞன் (கவிஞன் மட்டுமல்ல சகலருந்தான்) மொழியை, அது உணர்த்தி வந்த பொருளில் கையாளமுடியாத அவலத்துக்குத் தள்ளப்பட்டிருக்கின்றான். உண்மை என்ற சொல்லை அது உணர்த்தும் பொருளில் மெய்ப்பிக்க நிறுவிக் கொள்ள எவ்வளவோ பாடுபட வேண்டியிருக்கின்றது. நன்றி என்ற வார்த்தை வெறுமனே சம்பிரதாயமாகப் பயன்படுத்தப்படுகின்றது, அன்பு என்ற சொல் பாசாங்குத்தனமாக உச்சரிக்கப்படுகின்றது. இது போலவே ஜனநாயகம் என்பதும் நீதி என்பதும் சமாதானம் என்பதும் இன்னும் பலவும். இந்நிலையில் கவிஞன் இருக்கும் சொற்களை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்? அவன் புதிய சொற்களைக் கண்டறிய வேண்டியிருக்கின்றது புதிய உணர்த்து முறைமையைக் கையாள அவசியமேற்படுகின்றது. அமரதாஸ் தன் கவிதைகளில் புதிய உணர்த்து முறைமையினையும் புதிய சொற்களையும் கையாண்டிருக்கின்றார். இவ்வாறு புதிய திசையில் எல்லாவற்றையும் பயணிக்க வைக்க முயல்கின்றார்.

திரும்பத்திரும்ப வாசிக்கக் கோரும் இந்தக் கவிதைகள், ஒவ்வொரு வாசிப்பிலும் சுவாரஸ்யத்தைத் தளர்த்தியபடியே புதுப்பது அனுபவங்களையும் சிந்தனையையும் விரிக்கும் இயல்புடனிருக்கின்றன. மறுபடியும் மறுபடியும் வாசிக்கத் தூண்டும் ஆவல், கவிதைகள் வாசக மனதில் ஏற்படுத்தும் பதிவை வலுவாக்குகின்றன. இத்தன்மைகள் மூலம் அமரதாஸ் தன் கவிதைகளைக் காலத்தில் பரப்பி விடுகின்றார் மிக இயல்பாகவும் நுட்பமாகவும்.

ஒலிரும் ஒசையும் இயல்பின் மொழியுமாய்க் கூடி விளைந்திருக்கும் இந்தக்கவிதைகள் குறித்துக் காலம் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கும், இது மகிழ்ச்சியை அளிக்கின்றது.

கருணாகரன்.

நன்றி இயல்பினை அவாவுதல்.

கிழக்கில் பெருவெள்ளம்!

எம்.பி.க்கள் கொழும்பில்..

அரச அதிகாரிகள் அலுவலகங்களில்..

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் கடந்த சில தினங்களாகப் பெய்து வந்த மழையினால் பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டு, 80 ஆயிரம் குடும்பங்கள் தொடர்புகளேதுமற்றுத் துண்டிக்கப்பட்டுள்ளன. மழை ஓய்ந்த போதிலும் பாதைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வெள்ளம் வடிந்து யாவும் சீராகி பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்ட பிறகே எம்.பி.க்கள் இங்கு செல்வார்கள் என்று கூறப்படுகின்றது. அதிகாரிகளும் இந்த நிலைமைக்குப் பிறகே இந்த இடங்களுக்குச் சென்று விபரம் சேகரிக்க முடியுமென்று கூறியுள்ளனர்.

வெள்ளத்துள் அகப்பட்ட மக்களுக்கு மூன்று நாட்களுக்கு மட்டுமே உலர் உணவு வழங்கப்பட்டிருந்தது. அதுவும் சரியாக இல்லையாம்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் குளத்தின் அணைக்கட்டுகள் உடைந்து வெள்ளம் பெருகியதால் மக்கள் மிகுந்த தொல்லைப்படுகின்றனர். ஐ.சி.ஆர்.சியின் நடமாடும் கிளினிக் இவர்களுக்கு மருத்துவ வசதியளித்துவருகின்றது. இம்மக்கள் தங்குவதற்குரிய வசதிகளையும், இரவு உணவையும் செஞ்சிலுவைச் சங்கம் ஏற்படுத்திக் கொடுத்தது.

ஐ.சி.ஆர்.சி. அதிகாரிகளும், சொஞ்சிலுவைச் சங்கத்தினரும் தொண்டர்களும் சேதத்தில் சிக்குண்ட மக்களுக்கு உதவி செய்வதோடு, வெள்ள நிலவர மதிப்பீடுகளையும் கணக்கெடுத்து வருகிறார்கள். இதைவிட இப்பகுதியில் தொற்று நோய் பரவும் அபாயமும் அதிகரித்துள்ளது.

மந்திரிகளும், பிரதியமைச்சர்களும் தமது வீட்டு, வாகன வசதிகளைப் பெற்றுக் கொள்ள இங்கே அலைந்து திரிவதனால் அவர்களோடு தொடர்பு கொள்ள முடியவில்லை என்று மட்டக்களப்பு கட்சி அமைப்பாளர் ஒருவர் அலுத்துக் கொள்கிறார்.

ஐந்து அமைச்சர்களுக்கு எதிராக குற்றச் சாட்டு

வழக்கறிஞர் குழுவொன்று நீதிமன்றம் செல்கின்றனர்

பொதுசன ஐக்கிய முன்னணி அரசின் அமைச்சரவை அமைச்சர்களான எஸ்.பீ. திசாநாயக்கா, அனுருத்த ரத்வத்த, மகீபால கேவித் என்ற அமைச்சர்கள் மூவருக்கு எதிராகவும், த.மு.தஸநாயக்கா ஜனக பண்டார தென்னகோன் பிரதியமைச்சர்கள் இருவருக்கும் எதிராகவும் வட மத்திய மாகாண முதலமைச்சர் பர்டி பிரேமலால் திசாநாயக்காவுக்கு எதிராகவும் சென்ற பொதுத் தேர்தலின் போது அந்தந்தப் பிரதேசங்களில் ஏற்பட்ட வன்முறைகள், சட்டவிரோத நடவடிக்கைகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு வெவ்வேறாக வழக்குகளைத் தாக்கல் செய்ய வழக்கறிஞர்கள் குழுவொன்று நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான வழக்குகள் தேர்தல் மனுக்களை விட வித்தியாசமானவைகளாகும். தேர்தல் சட்டம் 83, 84, 85, 86, 87, என்ற சட்ட விதிகளின் படி தேர்தலின் போது இடம் பெறும் சட்ட விரோத நடவடிக்கைகளுக்கெதிராகவும், அதில் ஈடுபட்டவர்களுக்கெதிரான உயர்நீதிமன்றத்தில் வழக்குகளைத் தாக்கல் செய்ய முடியும். இருந்தாலும் அவ்வாறான வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கு சட்ட மா அதிபரின் அனுமதியைப் பெற வேண்டிவருவதோடு, அதற்காக நியாயமான காரணங்கள் இருந்தும் வழக்குகளைத் தாக்கல் செய்வதற்காக சட்ட மா அதிபரிடமிருந்து அனுமதி கிடைக்காத வேளையில் அந்த அனுமதியைப் பெறுவதற்காக நீதி மன்ற உத்தரவொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இருந்தாலும் இதுபோன்ற குற்ற வழக்கொன்றின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் குற்றவாளியாக காணப்படும் போது அவரது பாராளுமன்ற அங்கத்துவத்தை இல்லாமல் செய்வதோ, சிறைத் தண்டனை வழங்குவதோ அவரது பிரஜா உரிமையை இல்லாதொழிக்கவும் முடியும்.

எதிர்காலத்தில் நடைபெறும் தேர்தல்களின் போது அரசியல் வாதிகள் மேற்கொள்ளும் வன்முறைகளையும் ஊழல், மோசடிகளையும் கட்டுப்படுத்துவதற்காக தேர்தல் மனுக்களோடு மட்டும் நின்று விடாது இதுபோன்ற வழக்குகளை அவர்களுக்கு எதிராகத் தொடுப்பதன் மூலம் குற்றவாளிகளுக்குத் தண்டனைகளைப் பெற்றுக் கொடுக்கும் கொள்கையொன்றை உறுதிப்படுத்திக் கொள்வது அத்தியாவசியமாகின்ற தென்பதை இவ் வழக்கறிஞர்களின் கருத்தாக இருக்கின்றது.

நாம் அவர்களுக்கு கை கொடுப்போம்



நிவேதா, நிவானி, நிலக்ஷனா இவர்கள் நிமலராஜனின் பிள்ளைகள் யாழ்ப்பாணத்தின் உண்மைச் சம்பவங்களை எங்களுக்கு எடுத்துக் கூற உயிரைப் பணயம் வைத்து அவர் எழுப்பிய குரல் அவர்களை விழிப்படையச் செய்த மதுரக் குரலாகும். வடக்கிலிருந்து கொண்டு அவர் எமக்கு நீட்டிய நேசக் கரங்கள் அவரது குழந்தைகளையும் அரவணைத்தது. அரவணைத்த அந்தக் கரங்களுக்கு பதிலாக எமது கரங்களை இனி நாங்கள் அவர்களுக்காக நீட்டுவோம். படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் நிமலராஜனின் குழந்தைகளினதும் குடும்பத்தினரினதும் எதிர்கால வாழ்க்கைக்காக ஆதவன் ராவய பத்திரிகைகளின் பெயரில் மஹரகம மக்கள் **வங்கியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 107-004591-8** இலக்கக் கணக்கிற்கு உங்களது நன்கொடைகளையும் அனுப்பி வையுங்கள். மேற்கொள்ளப்பட்ட எண்களைக் குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்படும் காசோலையாகவோ அல்லது எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையின் ஊடாகவும் இதற்கு உங்களது ஒத்துழைப்பை வழங்கலாம்.

தொடர்புகள் : ஆதவன்
83, பிலியந்தல வீதி, மஹரகம, தொ.பேசி – 851672-73

நமது கலாச்சாரத்தை மேன்மைப்படுத்துவோம்

எம்.எச்.எம்.பைசர்

இளந்தலைமுறையை நமது கலாசார அடிப்படையில் வளர்ப்பதின் மூலமே சிறந்த எதிர்காலத்தினைக் கட்டியெழுப்ப முடியும். இந்த அடிப்படையிலேயே எம்.டி. குணசேன நிறுவனம், ஓயசிஸ் சர்வதேசப் பள்ளிக் கூடத்தை நிறுவுகிறது. ஆங்கில மொழி மூலம் 5ம் வகுப்புவரை கற்பிக்கப்படும். அவரவர் சமய போதனையும் இரண்டாம் வகுப்பிலிருந்து இளஞ்சிறார்களுக்கு கணனிப்பயிசியும் வழங்கப்படும். இவ்வாறு எம்.டி.குணசேனவின் பத்திரிகையாளர் மகாநாட்டில் அதன் பிரதம நிறைவேற்று அதிகாரியாகிய எம்.எச்.எம். பைசர் குறிப்பிட்டார்.

உலக வங்கியின் ஆசோசனைப்படி இலங்கையில் நடைமுறைப்படுத்தப் போகும் பொருளாதார திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பு கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள இலங்கைக் கிளையின் முன்னால் மக்கள் விடுதலை முன்னணியினர் நடத்திய ஆர்ப்பாட்டம்.

படம் : அஜித் செனவிரத்ன

வாசகர் கவனத்திற்கு

பத்திரிகை தாள்கள் இறக்குமதியில் சற்று தாமதம் ஏற்பட்டதால் ஆதவன் இதழ் கையிருப்பிலுள்ள, சிறியளவிலான தாளில் அச்சிடப்பட்டு வெளியாகிறது. சில வாரங்களுக்கு மட்டும் இந்த நிலை தொடரும். வாசகர்கள் பொறுத்தருள்க.

ஆசிரியர்

சமாதான பேச்சுக்கள் நடைபெற்றாலும் போரின் தீவிரம் குறையாது

களநிலைவரம்

கௌதமன்

யாழ் குடாநாட்டு போர் முனைப்பில்மீண்டும் மோதல்கள் வெடித்துள்ளன. தரைவழி விநியோகப் பாதைக்கான போராகவே இது அமைந்துள்ளது. புலிகள் கடல்வழி விநியோகப் பாதையை தடைசெய்யும் தாக்குதல்களை ஆரம் பித்துள்ள நிலையில் யாழ் நகருக்கும் சாவகச்சேரிக்குமிடையிலான சுமார் 15 கி.மீ தூர தரைவழிப் பாதையை புலிகளிடமிருந்து மீட்கும் தாக்குதலை படையினர் ஆரம்பித்துள்ளனர். தென்ம ராட்சியில் நிலைகொண்டுள்ள படையினருக்கும் யாழ் நகருக்குமிடையில் கடந்த மே மாதத்துடன் தரைவழித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. தற்போது, வரணி ஊடாக கொடிகாமம் நெல்லியடிப் பாதையூடாகவே தென்ம ராட்சிப் படையினருக்கான சகல விநியோகங்களும் போக்குவரத்துக்களும் மேற்கொள்ளப்படுகின்றன. கிளாலி எழுதுமட்டுவாள் மற்றும் நாகர்கோவில் படைத்தளங்கள் மீதான தாக்குதலை புலிகள் ஆரம்பித்து முன்னேறிய போது எழுதுமட்டுவாள் ஊடான நாகர்கோ விலுக்கான தரைவழி விநியோகம் துண்டிக்கப்பட்டதுடன் தென் மராட்சியில் நிலைகொண்டுள்ள படையினரின் விநியோகப் பாதைக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அதுவும் குடாநாட்டில் மாரிமழை ஆரம்பித்துள்ள நிலையில் தென்மராட்சிக்கான வேறு தரைவழிப் பாதைகள் இல்லாததால் கொடிகாமம் நெல்லியடிப் பாதையை தக்க வைப்பதுடன் சாவகச்சேரி யாழ்ப்பாணத்திற்கிடையிலான கண்டி வீதியையும் கைப்பற்ற வேண்டிய கட்டாய சூழ்நிலை தோன்றியுள்ளது.

தென்மராட்சியில் வரணி ஊடான கொடிகாமம் பாதையை தங்கள் கட்டுப்பாட்டினுள் கொண்டுவர முயலும் புலிகள் வடமராட்சி கிழக்கில் நாகர்கோவில் முகாம் மீதும் தாக்கு தல்களை தொடுத்து வருகின்றனர். அதேநேரம் குடாநாட்டில் நிலை கொண்டுள்ள படையினரின் பிரதான விநியோகப் பாதையாக கடல்வழிப் பாதையை துண்டிக்கவும் புலிகள் முயல்கின்றனர். வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் அடிக்கடி கடற் படையினர் மீது தாக்குதல்களை நடத்தி வந்த கடற்புலிகள் ஒரு படி தாண்டிச் சென்று திருமலைத் துறைமுக கடற்படைத் தளத்தில் தாக்குதல் நடத்தி படையினர் மத்தியில் பேரதிர்வை ஏற்படுத்தினர். இத்தாக்குதலானது, புலிகள் தரைவழி விநியோகத்தை மட்டுமன்றி கடல்வழி விநியோகப் பாதையிலும் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்ட முயல்வதை உணர்த்தியுள்ளது. இந்த நிலையில் யுத்த நிறுத்தமின்றியே பேச்சுக்கள் ஏதும் நடைபெற வேண்டுமென்று படையினரும் வற்புறுத்தி வருவதால் யுத்த நிலைமை மேலும் மோசமடையலாமென எதிர்பார்க்கப்பட்டது. இதனை உறுதிப்படுத்தும் விதத்தில் தென்மர ாட்சிப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை படையினர் கினிகிர - 4 படைநட வடிக்கையை ஆரம்பித்தனர். சாவகச்சேரி நகரில் நிலைகொண்டுள்ள படையினர் கண்டி வீதி ஊடாக நுணாவில் பகுதியை நோக்கி பலத்த தாக்குதல்களை நடத்தியவாறு முன்னேற முற்பட்டபோது கடும் சமர் வெடித்தது. யாழ் நகரின் புறநகர்ப் பகுதிகளிலிருந்து மும்முனைகளில் செம்மணி மற்றும் நாவற்குழி பகுதிகளை நோக்கியும் இதன் போது முன்னேற முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பிரதான இலக்காக சாவகச்சேரியிலிருந்து நுணாவிலை நோக்கி நகர்வதாகவே அமைந்திருந்தது.

சனிக்கிழமை முழுநாளும் அரியாலை கிழக்கு செம்மணி கைதடி மற்றும் நாவற்குழி பகுதிகளில் விமானக் குண்டு வீச்சுக்கள் ஆட்லறி செல்தாக்குதல்கள் மற்றும் பல குழல் றொக்கட் குண்டுகளை ஏவி பலமணிநேரம் புலிகளின் நிலைகளைத் தாக்கி படையினர் நாவற்குழி கைதடிப் பகுதிகளை இலக்கு வைத்தே நகர்வொன்றை மேற்கொள்ளவுள்ளது போன்றதொரு தோற்றத்தை ஏற்படுத்திவிட்டு சாவகச் சேரி நகரிலிருந்தும் மட்டுவில் பகுதியிலிருந்தும் நுணாவிலை நோக்கி நகர முற்பட்டனர். எனினும் புலிகள், படையினரின் தந்திரத்தை அறிந்து அதற்கேற்ப தங்கள் தாக்குதல் அணிகளை நிறுத்தி, யாழ் நகரின் புற நகர்ப் பகுதியிலிலிருந்து முன்னேறிய படையணிகள் மீதும் சாவகச்சேரி நகரிலிருந்தும் மட்டுவிலிலிருந்தும் முன்னேறிய படையணிகள் மீதும் கடுமையான எதிர்த் தாக்குதலை தொடுத்தனர். இதனால் இவ்விரு பகுதிகளிலும் பலமுனைகளிலும் கடும் சமர் வெடித்தது. சுமார் நான்கு மணிநேர மோதலின் பின்னர் படையினர் தாக்குதலை முடிவுக்கு கொண்டு வந்தபோது படைநடவடிக்கையின் விளைவு குறித்து இராணுவப் பேச்சாளரும் பாதுகாப்பு அமைச்சும் முரண்பட்ட விதமாகத் தெரிவித்தன. இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரட்ன படையினர் சாவகச்சேரி நகரிலிருந்து பிரதான விநியோகப் பாதையான கண்டி வீதி (ஏ9) ஊடாக முன்னேறி சுமார் மூன்று கி.மீ. தூரம் சென்று நுணாவில் பகுதியை கைப்பற்றியுள்ளதாகக் கூறினார். எனினும் பாதுகாப்பு அமைச்சின் தகவலோ படையினர் மட்டுவிலுக்கு தெற்கே கண்டி வீதிக்கு வடக்கே 6 சதுர கி.மீ. பிர தேசத்தை கைப்பற்றியதாகக் கூறியது. இதன் மூலம் சாவகச்சேரி முதல் நுணாவில் வரையான கண்டி வீதியை படையினர் கைப்பற்றியதாக பிரிகேடியர் சனத் கருணாரட்ன கூறியது கேள்விக் குறியானது.

குடாநாட்டில் மாரி மழை கடுமையாகப் பொழிவதற்கு முன்னர் சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணத் துக்குமிடையிலான கண்டி வீதியை எப்படியாவது கைபற்றி விட வேண்டு மென் படையினர் முயல்கின்றனர். இதனை எப்படியாவது தடுத்து நிறுத்தி விட வேண்டுமென முயன்றுவரும் புலிகள் இதற்கிடையில் எழுதுமட்டுவாள் முகாமை கைப்பற்றி கொடிகாமம் சந்திக்கு வந்துவிட வேண்டும் அல்லது நாகர் கோவில் படைத்தளத்தை தாக்கியழிப்பதன் மூலம் கொடிகாமம்-நெல்லியடிப் பாதையை அண்மித்து விட வேண்டுமென முயல்கின்றனர். இரு தரப்பும் தற்போது தரைவழி விநியோகப் பாதைக்கான தந்திரோபாயத் தாக்குதலை மேற்கொள்வதிலேயே தீவிர கவனம் செலுத்தி வருகின்றன. இதனால் குடாநாட்டில் கடும் மழை பொழிவ தற்கு முன்னர் பாரிய மோதல்கள் பல பகுதிகளிலும் வெடிக்கும் சாத்தியங்கள் நிலவுகின்றன. இந்த மோதல்களின் வெற்றி தோல்விகள் குடாநாட்டில் இருதரப்பினரதும் இருப்பின் தன்மையை உறுதிப்படுத்தி விடுமென்பதால் வரப் போகும் மோதல்களை இருதரப்பும் மிக உக்கிரமாகவே நடத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மோதல்களில் படையினரைவிட புலிகளே கடுமையான சவால்களை சந்திக்க வேண்டியிருக்குமெனவும் கருதப்படுகிறது.

படையினரைப் பொறுத்த தவரை தென்மராட்சிக்கான வர ணியூடான விநியோகப் பாதையை புலிகளின் கடுமையான தாக்கு தலிலிருந்து பாதுகாத்து தக்க வைத்திருக்கும் அதேநேரம் சாவகச்சேரிக்கும் யாழ்ப்பா ணத்துக்கு மிடையில் புலிகள் வசமிருக்கும் கண்டி வீதியையும் கைப் பற்றி விடவேண்டிய தேவையுள்ளது. இந்த வீதியை கைப்பற்றி விட்டால் வர ணியூடான கொடிகாமம் நெல்லியடி வீதிக்கான தேவை பெருமளவில் குறைந்து விடும். இந்த வீதி இதன் பின் புலிகள் வசம் சென்றாலும் பாரதூரமான பாதிப்பேதும் படையினருக்கு ஏற்படாது. ஏனெனில் யாழ்ப்பாணம் முதல் செல்லும் முக்கிய பிரதேசங்களையும் புலிகள் தக்கவைத்திருக்க வேண்டிய அதேநேரம் வரணிப் பாதையை எப்படியாவது படையினரிடமிருந்து கைப்பற்றவும் வேண்டிய தேவை யுமுள்ளது.

நோர்வேயின் அனுசரணையூடான பேச்சுக்கள் ஆரம்பமாகலாமென எதிர்பார்க்கப்படும் நேரத்தில் படையினர் தென்மராட்சிப் பகுதியில் கினிகிர-4 படை நடவடிக் கையை மேற்கொண்டனர். இதன் மூலம் புலிகளின் அடுத்த பாரிய தாக்குதல் குடாநாட்டில் எவ்வேளையிலும் இடம் பெறலாமென்ற எதிர்பார்ப்பும் அனைத்துத் தரப்பிலும் நிலவுகிறது. மாவீரார் வாரத்தையொட்டி வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதியிலும் பாதுகாப்பு பெருமளவில் பலப்படுத் தப்பட்டுள்ளது. எனினும் புலிகளின் பாரிய தாக்குதலேதும் நடைபெறும் போது இந்த பாதுகாப்பு நடவடிக்கையும் கேள்விக் குறியாகிவிடும் சமாதானப் பேச்சுக்களில் அனைத்துத் தரப்புக்கும் நம்பிக்கையீனமே தென்படுவதாலும் போருக்கான முஸ்தீபுகள் தொடர்ந்தும் மேற்கொள் ளப்படுவதாலும் சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றாலும் போரின் தீவிரம் குறை யாதென்றே கருதப்படுகிறது. விநியோகப் பாதைகளை திறக்கவும் அவற்றை மூடவும் இரு தரப்பும் தந்திரபூர்வமான தாக்குதல் உத்திகளைப் பயன்படுத்தி வருகின்றன. இதன் மூலம் ஏற்ப டப்போகும் விளைவுகளே குடாநட்டின் இராணுவ நிலைமைகளை தீர்மாணிக்கப் போகின்றன. பேச்சுக்களுக்கு முன்னர் குடாநாட்டை புலிகள் கைப்பற்றிவிட்டால் அது பேச்சுவார்த்தைமேசையில் அரசுக்கு பெரும்நெருக்கடிகளை ஏற்படுத்தும் அதேபோல் குடாநாட்டுக்குள்ளிருந்து படையினர் புலிகளை அப்புறப் படுத்திவிட்டால் புலிகளுக்கு நெருக்கடிகள் ஏற்பட்டுவிடும்.

எழுதுமட்டுவாள் வரை நிலை கொண்டிருக்கும் படையினருக்கு கண்டி வீதியூடாக விநியோகங்கள் கிடைக்கும். அதேநேரம் படையினர் வசமிருக்கும் கொடிகாமம் - நெல்லியடி வீதியை கைப்பற்றாவிட்டாலும் யாழ்ப்பாணம் சாவகச்சேரிக்கிடையில் தம்வசமுள்ள கண்டி வீதியை புலிகள் கட்டாயம் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். இல்லையே தென்மராட்சியை இரண் டாகப் பிரித்துச் செல்லும் இந்த வீதி படையினர் வசமாகிவிட்டால் கண்டி வீதிக்கு வடக்கே நிலைகொண்டுள்ள புலிகள் முற்றாகவே வெளித் தொடர்புகள் கிடைக்காது தனிமைப்படுத்தப்பட்டு விடுவதுடன் இந்த வீதிக்கு தெற்கேயுள்ள தனங்கிப்பு கோயிலாக்கண்டி மற்றும் மற வன் புலோ பகுதிகளையும் படையினரின் கடுமையான நெருக்குதலிலிருந்து காக்க வேண்டிய தேவையும் ஏற்படும். எனினும் இது எவ்வளவு தூரம் சாத்தியப்ப டுமென்பது கேள்விக்குரிய விடயமே. அத்துடன் தென்மராட்சியில் எழுதுமட்டு வாளுக்கு அப்பால் சென்று விட வேண்டிய சூழ்நிலையும் தோன்றிவிடும். இதனால் யாழ்ப்பாணத்திற்கும் - சாவகச்சேரிக்குமிடையிலான கண்டி வீதியையும் அவ்வீதி ஊடறுத்துச்

ஆதவன்

இல-83, பிலியன்தல வீதி மஹரகம
தொலைபேசி எண் - 851672, 851814
விநியோகப் பிரிவு - 842064
தொலைமடல் - 851814

வாசகர் உரிமை!

தம்மைப் பாதிக்கும் விதத்தில் ஆதவனில் ஏதாவது பிரசுரிக்கப்பட்டதாக நபரொருவர் அல்லது நிறுவனமொன்று கருதும் பட்சத்தில் உரிய கருத்துத் தெரிவிக்கும் உரிமை வாசகருக்குண்டு.

அது தொடர்பாக அந்த நபர் அல்லது நிறுவனம் எழுதி அனுப்பி வைக்கும் கருத்துக்களை வெளியிட "ஆதவன்" கடப்பாடுடையது.

தமிழீழத்திற்கு மாற்றீடான சுயாட்சியே தீர்வுக்கு வழி

இன்று இலங்கையில் நடைபெற்று வரும் கொடூர யுத்தத்தால் நாடே அழிந்து கொண்டிருக்கின்றது. யுத்தத்தின் காரணமாக நாட்டின் பொருளாதாரம் சீரழிந்து போயுள்ளது. சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அகதிகளாகவும், அநாதைகளாகவும் அலைந்து திரிகின்றனர். யுத்தத்தின் கொடுமையால் அழிக்கப்பட்ட உடமைகள் ஏராளம், அழிந்த உயிர்கள் பல்லாயிரம், அங்கவீனமானவர்கள், விதவைகளாக்கப்பட்டவர்கள், பெற்றோர்களை இழந்தவர்கள் ஆயிரக்கணக்கானோர் உள்ளனர். இத்தனை இழப்புகளுக்கு மத்தியில் அடைந்த நன்மை ஒன்றுமில்லை. தொடர்ந்தும் யுத்தம் நடைபெறுகின்றது, கூடவே இழப்புகளும் தொடர்கின்றன.

இரண்டு தசாப்தங்களாக நடைபெறும் இவ் யுத்தத்தை நிறுத்துவதற்கும், யுத்தத்தின் மூல காரணியான தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு சுமூகமான தீர்வினை காண்பதற்கும் முன் முயற்சிகளாக எத்தனையோ பேச்சுவார்த்தைகள் நடாத்தி பயனற்றதாக முடிந்து போயுள்ளது. யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வருவதற்கு மேற்கொள்ளப்பட்ட வட்டமேசை மகாநாடுகள், சர்வகட்சி மகா நாடுகள், அரசியல் யாப்பு மறுசீரமைப்புகள், அதற்கு முன்வைக்கப்பட்ட சீர்திருத்தங்கள், அத்தனையும் வீண்பேச்சாகவே முடிந்துள்ளன. யுத்த கார் மேகத்தை கலைத்து தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைக்கு தீர்வாக இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட மாகாணசபை முறையும் வடக்கு கிழக்கு மக்களுக்கு எவ்வித நன்மையுமின்றி அவர்களின் பிரச்சினைகளுக்கு வழிகாணாது வெறும் அதிகாரிகளின் கைகளில் முடங்கிப் போயுள்ளது.

இவை அனைத்துக்கும் மத்தியில் யுத்தம் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. யுத்தத்தால் அரசியல் இலாபம் தேடுபவர்களும், வயிறு வளர்ப்பவர்களும் வளர்ந்து வருகின்றனர், யுத்தத்தின் கோரப் பிடியில் சிக்கி அப்பாவி பொது மக்கள் மடிகின்றனர், துன்பப்படுகின்றனர்.

எனவே இந்த கொடிய யுத்தத்திற்கு முடிவு காண வேண்டுமேயானால் இதற்கு மூல காரணியான தேசிய இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வினைக் காண வேண்டும். அதற்கு யுத்தத்தின் முக்கிய பங்குதாரரான தமிழீழ விடுதலைப் புலிகளை சமாதான வழிக்கு திருப்ப வேண்டும். விடுதலைப் புலிகள் சமாதான வழிக்கு வர தமிழீழத்திற்கு பதிலாக சுயாட்சியை எதிர்பார்க்கின்றனர் என இன்றைய யுத்தத்திற்கு விடிவுகாண முயலும் பிரிட்டிஷ், நோர்வே ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யார் எதைக் கூறினாலும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் வாயால் இச் செய்தி வெளிவர வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். அதற்கான சந்தர்ப்பமாக விடுதலைப்புலிகள் தலைவரின் மாவீரர் தின உரையை மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

யுத்தத்திற்கான தீர்வு சமாதானம், சமாதானத்திற்கு வழி நாடு பிளவுபடாத "சுயாட்சி", இதுவே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு. இந்த வகையிலேயே விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சமத்துவத்துடன் வாழ சமாதானத்திற்கான உரையாய் மாவீரர் தின உரை அமைய வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஆசிரியர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவரின் மாவீரர் தின உரையும் அரசியல் தாக்கமும்

செந்தணலோன்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இவ்வாரம் பல்வேறு எதிர்வுகளையும், உச்சநிலைப் பாதுகாப்புகளையும் அரசியல் நோக்கொன்றிற்கான எதிர்ப்பார்ப்புகளையும் கொண்டதாகவேஅரசியல் அவதானிகளால் எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் உயிர்நீத்த போராளிகளின் நினைவாகவே நவம்பர் மாம் 21ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை மாவீரர் வாரம் கொண்டாடப்படுகிறது. இக்காலப் பகுதியில் உயிர்நீத்த போராளிகளின் கல்லறைகளுக்கு சுடர் ஏற்றுவது போராட்ட வரலாற்றை நினைவு கூறும் கலைநிகழ்ச்சிகள், சிரமதானம் உட்பட பல்வேறு நிகழ்வுகள் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் நடாத்தப்படுகின்றன.

இதற்கெல்லாம் அப்பால் மாவீரர் வாரத்தில் கடந்தகாலங்களில் பல்வேறு பாரிய தாக்குதல் நடவடிக்கைகளிலும் புலிகள் ஈடுபடுவது வழமையாகும் இதனையொட்டியே வடக்கு கிழக்கிலுள்ள படைமுகாம்கள் மட்டுமன்றி தலைநகர் கொழும்பிலும் இக்காலப் பகுதியில் 24 மணிநேர இராணுவ உச்சநிலை உசார் நடவடிக்கையில் படையினர் ஈடுபடுவது வழமையாகும்.

இம்முறை படையினரின் உசார் நடவடிக்கைக்கு அப்பால் உள்ளூரிலும் சர்வதேச ரீதியாகவும் எதிர்பார்க்கப்படும் முக்கிய விடயம் யாதெனில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மாவீரர் தின உரையின் உள்ளார்ந்த அம்சம் எதை நோக்கியதாக இருக்குமென்பதேயாகும்.

கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மாவீரர் தின உரைகளில் பேச்சுவார்த்தை சமாதானம் என்பதற்கு அப்பால் விடுதலைப் போராட்டத்தின் அவசியம் அதற்கான முன்னெடுப்புக்கள் தொடர்பான அம்சங்களையும் புலிகளின் வீரம் தனித்துவம் என்பன தொடர்பாகவே கூடுதலான தொனி காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் இம்முறை மாவீரர் தின உரை

பேச்சுவார்த்தை தொடர்பான அரசியல் அழுத்தங்களுக்கு அதிக அக்கறை கொடுக்கப்படுமென்றே பரவலாக நம்பப்படுகிறது. இலங்கையின் இன நெருக்கடி விவகாரம் தொடர்பாக சர்வதேச ரீதியாக இன்று எழுந்துள்ள நிர்ப்பந்தம் இலங்கை அரசுக்கு மாத்திரமன்றி விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் அரசியல் தீர்வொன்றிற்கான அவசியத்தை நாட வேண்டிய அல்லது அந்தப் பாதையை நோக்கியதான நிகழ்வொன்றிற்கான அவசியத்தை உணர்த்தியுள்ளதாகவே அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதைவிட இலங்கை அரசையும் விடுதலைப்புலிகளையும் ஒரே மேசையின் கீழ் இருந்து பேசக்கூடிய சூழல் ஒன்றினை உருவாக்குவதற்கான சமாதான முன்னெடுப்புகளில் தீவிர அக்கறை காட்டிவரும் நோர்வேயின் விசேட தூதுவர் சொல்ஹெய்ம் தலைமையிலான குழுவினரின் வன்னிக்கான திடீர் விஜம் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடனான நேரடிப் பேச்சுவார்த்தைகள் என்பனவும் புலிகளின் அரசியல் தேவைகளையொட்டிய நகர்வொன்றிற்கான அவசியத்தை உணர்த்துகின்றன.

இது இவ்வாறிருக்க மாவீரர் தினத்தையொட்டி விடுதலைப் புலிகளின் தலைவர் உரையாற்றவுள்ள இன்றைய தருணத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் பிரிட்டிஷ் துணை வெளிவிவகார அமைச்சர் பீட்டர் ஹெய்னின் வருகையானது வெறுமனே ஒரு தற்செயல் நிகழ்வாக கருதமுடியாத ஒன்றாகும்.

பிரிட்டிஷ் அரசாங்கம் சர்வதேச பயங்கரவாத அமைப்புகளின் விபரப்பட்டியலொன்றை சேகரித்து வருவதாகவும் அதனை ஆய்வொன்றிற்குட்படுத்தி சில அமைப்புகளின் செயற்பாடுகளுக்கு தமது நாட்டில் தடையொன்றைக் கொண்டு வர உத்தேசித்து வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ள அரசியல் விமர்சகர்கள் இவ்வாறான செயற்பாடுகள் கூட விடுதலைப்புலிகளை நோக்கிய சமாதான அழுத்தங்களுக்கு மேலும் நெருக்குதல்களை கொடுக்கலாமென்றும், அதன் வெளிப்பாடுகள் மாவீரர்தின உரையில் தென்படலாமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை கடந்த ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக பிரிவினைவாத ஐரிஸ் போராளிகளுடன் இராணுவ அரசியல் நெருக்கடிகளை எதிர்கொள்வதில் நிறையவே அனுபவங்களைக் கொண்ட பிரிட்டனின் இலங்கையின் இன நெருக்கடிக்கான சமாதான முயற்சிகளுக்கு கணிசமான பங்களிப்பை



நல்குமென்றே எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் பிரிட்டனின் சமாதான முன்முயற்சிகள் நோர்வேயின் சமாதான முன்னெடுப்புகளுக்கு ஒரு போதும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதொன்றல்ல என்றும் நோர்வேயின் முயற்சிகளுக்கு வலுச்சேர்க்கும் ஒன்றாகுமென்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் கருத்து தெரிவித்துள்ளனர். அதேநேரம் நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு அளித்துவரும் ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய பங்காளி பிரிட்டன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட பிரிட்டிஷ் துறை வெளிவிவகார அமைச்சர் பீட்டர் ஹெய்ன் இனநெருக்கடி விவகாரத்திற்கு ஒத்துழைப்பு வழங்கப்போவதில் பிரிட்டன் ஒரு போதும் பின்னிற்கப் போவதில்லையென்றும் சிறுபான்மை இனங்களுக்கெதிரான கொடுமைகளுக்கெதிராக தாம் குரல் கொடுக்கப் போவதில் எப்போதும் பின்நிற்கப் போவதில்லையென தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பீட்டர் ஹெய்ன் உடனான சந்திப்பில் கலந்து கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் என்பவற்றின் பிரதிநிதிகள் புலிகளுடன் மட்டுமே பேசுவதன் மூலமே இனநெருக்கடி விவகாரத்திற்கு தீர்வொன்றைக் காண முடியுமென வலியுறுத்தியுள்ளனர். அதேநேரம் புலிகள், சர்வதேச நிர்ப்பந்தம் காரணமாகவே பேச்சுவார்த்தை, சமாதானம் என்பவற்றில் தற்போது அக்கறை காட்டுவதாக தெரிவித்துள்ளதுடன் சகல தமிழ்க்கட்சிகளுடனும் பேச வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளனர்.

அதேநேரம் நோர்வே, பிரிட்டன் ஆகிய நாடுகளின் சமாதான முன்னெடுப்புகளை குழப்பியடித்து இனநெருக்கடி விவகாரத்தை மேலும் மோசமாக்குவதற்கான முன்னெடுப்புகளில் ஈடுபடும் நடவடிக்கைகளில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி), சிஹல உறுமய போன்ற கட்சிகள் தீவிர அக்கறை காட்டி வருகின்றமை வெளிப்படையாக தெரிகின்ற போதிலும் அரசு ஐக்கிய தேசிய கட்சி என்பவற்றின் உள்நோக்கங்களும் எதிர்மறையான போக்குகளையே வெளிக்காட்டி நிற்கின்றன.

எது எப்படியிருப்பினும் இம்முறை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மாவீரர்தின உரையானது அரசின் நிகழ்வுகளில் தாக்கமொன்றை ஏற்படுத்தும் என்பது மட்டும் உண்மையாகும்.

உலகத் தமிழ் இலக்கிய வரலாறு: இலங்கை பற்றி எழுதுவது யார்?

- கவிஞர் : ஏ.இக்பால்

கவிஞர் ஏ.இக்பால் இலங்கை இந்திய இதழ்களில் தொகுப்பு நூல்களில் கதை, உருவகக்கதை, கவிதை, கட்டுரை, திறனாய்வுக் கட்டுரை என்பன எழுதி வருபவர்.

பாடநூல் தயாரிப்பில் அறிஞர் பல நூல்கள் இத்துறையில் எழுதிவருபவர். கல்வித்துறை நிறுவனங்களில் அங்கம் பெற்று வரும் கல்வியாளர்.

ஊடகங்கள் யாவிலும் பங்கேற்று வருபவர். தான் சார்ந்த கருத்தில் உறுதி; தேடுதலில் ஆர்வம்; தேர்ந்து தெளிந்ததின் பின்னர் கருத்துக் கூறும் தகைமை என்பன இவரின் ஆளுமை ஆகும்.

ஆறு வரலாற்றுநூல்கள், சிறுகதைத் தொகுதி ஒன்று, மூன்று கவிதைத் தொகுதிகளின் சொந்தக்காரர்.

இலக்கியமணி, கலைமணி, கலாபூஷணம் என்பன தமிழால் பெற்ற கௌரவங்கள்.

பெரிய நூலகம் சொந்தமாக படிப்பாளி விரல் நுணியில் இலக்கிய, கல்வித்தகவல்கள்.

கல்வித்துறை சார்ந்த படைப்பாளியாகிய நீங்கள் இன்றையபடைப்பிலக்கியத்தில் திறனாய்வாளர்களின் பங்கு குறித்து என்ன சொல்லுகிறீர்கள்?

திறனாய்வாளர்களுக்கு உண்மையில் திறனிருக்க வேண்டும். திறன் என்பது அகடமிக் கல்வித்தரமல்ல, ஓர் ஆக்கத்தை சூழ்ந்து சுற்கும் திறன், அதனால் ஏற்படும் சுருத்துச் செறிவு, மச்களுடையும் நன்மை தீமைகளை உரசியறியும் மனப்பாங்கை எடுத்துச்சொல்லும் திறன் என்பவைகளை அடக்கும். முறைசார்ந்த கல்வி பெற்றோரும், முறைசாராக் கல்வி பெற்றோரும் திறனாய்வுக்கு வரும் போது வித்தியாசப்படுவர். இவர்களது சுற்றல்களிலெல்லாம் அறிதல் மட்டுந்தான் இருக்கும். அநுபவித்தல், வாழ்க்கையோடு இணைதல், பயனடைதல் என்பனவற்றைத் தெரியாதவர்கள் இன்று திறனாய்வாளர்களாக இருக்கின்றார்கள். அதனால்தான் திறமையுள்ள ஆக்க இலக்கியங்கள் இத்திறனாய்வாளர்களால் சிலகாலம் அமுங்கி நிற்கின்றன. படைப்பிலக்கியங்களைப் பக்குவமாக நோக்குபவர்கள் அவ்விலக்கியம் எழுந்தகாலம், சூழல், தாச்சம் என்பனவற்றையும் அவை தரும் பொருளையும், பொருளின் பொருளையும் அறியக்கூடிய திறமுடையோராகவிருக்க வேண்டும். ஒரு படைப்பிலக்கியத்திற்கு மத்தியஸ்தம் வகிப்பவர்கூட படைப்பிலக்கியக்காரராயிருக்க வேண்டிய அவசியமில்லை. அப்படியிருந்தாலும், திறனாய்வாளராகயிருக்க வேண்டும். படைப்பாளிகள்

செய்யும் மத்தியஸ்தத்தால் திறனாய்வற்றுப் படைப்புகள் பின்தள்ளப்பட்டுள்ளதை தற்காலக் கணக்கெடுப்புகளில் கண்டுள்ளோம். ஆய்வுக்கட்டுரைகள் எழுதி விஷேடதரப்பட்டம் பெற்றவர்கள் கூடத் தங்களைத் திறனாய்வாளர்கள் என மயங்குவதையும் நாங்கள் காண்கின்றோம். படைப்பிலக்கியத்தில் தோல்வியடைந்து கட்டுரைகள் மட்டும் தொனிப்பொருளால் எழுதுபவர்கள் கூடத் திறனாய்வாளராகப் பவனி வருவதையும் காண்கின்றோம். திறனாய்வு என்பது ஒரு படைப்பை மிக நுணுக்கமாக நிறுத்தல் என்பதை மனதில் எடுத்தல் அவசியம். இதற்குப் பின் நவீனத்துவம் உதவியளிக்கும். அதாவது, படைப்பாளியை முற்றிலும் மறந்து படைப்பு வாசகனை அணுகப் போகின்றது என்பதை மட்டும் மனதில் எடுக்க வேண்டும். அப்போதுதான் திறன் வெளிவரும். இந்த வழியில் இன்று திறனாய்வாளர்கள் மிகக் குறைவு. ஆகையால், மேற்சொன்ன வைகளைக் கரிசனையுடன் கவனததில் எடுப்பது முக்கியம் என நான் கருதுகிறேன்.

ஆசிரியராகவும் படைப்பாளியாகவும் செயற்பட்ட நீங்கள் பல படைப்பாளிகள் செம்மையாக உருவாக உதவியிருக்கிறீர்கள், இதுபற்றி.....

நான் 06.05.57லிருந்து தமிழ் உபாத்தியாயர். அக்காலத்திற்கு இரு வருடங்களுக்கு முன் இலக்கிய நுகர்வு, எழுத்தார்வம் தொடங்கி விட்டன. மிகவும் மனதை இலயிக்கக் கூடிய விதத்தில் ஆழமான விமர்சனக் கட்டுரைகள் எனது தகுதிக்கேற்ப எழுதுவேன். இப்பழக்கத்தை சற்பிக்கும் மாணவர்களுக்கும் ஏற்படுத்துவேன். இதனால், இலக்கிய ஆர்வம், எழுத்தார்வமுள்ள மாணவர்கள் என்னை அணுகுவர். முற்றிலும் அறிவதற்காகக் சுற்றல்தான் அக்காலக் கல்விக் கொள்கை. ஏனைய முயற்சிகள் ஆசிரியர்களின் ஆர்வத்திற்கு இடைவெளி வேலையாக நடக்கும். நான வகுப்பு வாசிகசாலையை உண்டாக்குவேன். வகுப்பில் ஒவ்வொரு மாணவரிடத்தும் ஒரு ரூபா வீதம் அறவிட்டுப் புத்தகங்கள் வாங்கிச் சுழற்சி முறையில் வாசிக்க வைத்து அவற்றை விலை குறித்து மாணவர்களுக்கே விற்று மீண்டும் ஒரு ரூபா அறவிட்டு முன்பிலும் அதிக புத்தகங்கள் வாங்கிச் சுழற்சி முறையினால் வாசிக்க வைத்து.... இவ்விதம் வாசிப்பை மிக ஆழமாக்குவேன். மாணவர்கள் இணைந்து உதவி தேடிவந்தார் எழுத வைப்பேன். இந்த முறையில், அநே எழுத்தார்வமுள்ளவர்களைக் கண்டு பிடிக்க முடியும். பதுளை முஸ்லிம் மஹாவித்தியாலயத்தில் "சிந்தனை" மாளிகாஹேன முஸ்லிம் மஹா வித்தியாலத்தில் "மாளிகை" வெலிப்பன்ன முஸ்லிம் மஹா வித்தியாலத்தில் "விளக்கு" தர்கா நகர் ஸாஹிரா கல்லூரியில் "சுவை" களுத்துறை முஸ்லிம் மகளிர் கல்லூரியில் "துறை" ஆகிய கையெழுத்துப் பத்திரிகைகளை ஏற்படுத்தி ஆழமாக எழுதும் மாணவர்களை வழிப்படுத்தியுள்ளேன். இப்பத்திரிகைகள் சில இன்றும் நின்று நிலைக்கின்றன. திக்வல்லை கமால், ஏ.எல்.எம்.ஸகரியா, ஏ.ஜி.எச். இஸ்மாயில், எம்.எல்.ஏ. அப்துல் அஸனா, அரும்பு ஹாபிஸ், தர்கா நகர். ஸபா, இன்னும் பலர் இப்பத்திரிகைகளால் எழுத்தாளர்களானவர்கள். கலாநிதி ஏ.ஜி.எச் இஸ்மாயில் நான் சுற்பித்த பாடம் ஒன்றை ஆசிரியரான பின், அக்கரைப்பற்று மத்திய கல்லூரியில் அவர் சுற்பிக்கும்போது, என்னைக் குறிப்பிட்டே, எனதூரில் சுற்பித்திருக்கின்றார் என்றால், நான் கவர்ச்சியாக அதைச் செய்திருக்கிறேன் என்பதை உணர்கிறேன். நீள்கரைகு நம்பி, ஜவாத்மரைக்கார், அக்கரையூரான் இன்னும் பலரைச் சிபாரிசின் பேரில் வழிப்படுத்தியுள்ளேன். "விண்மதிப் பதிப்பகம்" "பேசும் பேனா" "படிப்பு வட்டம்" "அல் கலம்" பதிப்பகங்களை உருவாக்க உதவியுள்ளேன். நாவலாசிரியர் எம்.டி.எம். இம்தியாஸ் ஆய்வாளர் ஏ.எச்.றஜபுலிஸா, சிறுதை, நாவலாசிரியர் ஸலீறா காலிதீன், அக்கரையூர் அப்துல் குத்தூஸ், கவிஞர் றூகா இன்னும் பலரை நூல் வெளியிடுதவற்கு வழிகாட்டியுள்ளேன். எழுத்தார்வமுள்ள எவர் என்னை அண்டிய போதும், முழுமையாக எனக்குத் தொரிந்த அத்தனை கலை இலக்கிய முறைமைகளைஅவர்களுக்கு சுற்பித்து விடுவதே எனது நோக்கம். இவ்வழியில் வந்து உயர்ந்தவர்கள் நான் மறந்தபோதும், என்னைப் பற்றிக்கூறும் போது, எழும் இன்பம் அலாதியானது. இவ்வனுபவத்துக்கு முற்றிலும் உபாத்தியாயர் தொழிலே காரணமானது.

முற்போக்கு அணியில் தீவிரமாகச் செயற்பட்ட நீங்கள் இன்றையச் சூழ்நிலையில் என்ன உணர்வோடு இருக்கின்றீர்கள்?

மட்டக்களப்புத் தெற்கிற்கும் மட்டக்களப்பு வடக்கிற்கும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை 1956களில்

எடுத்து வந்து அறிமுகப்படுத்தியவர் எச்.எம்.பி முஹிதீன்தான். எழுத்து இலக்கியம், கலை கலைக்காகவா? மக்களுக்காகவா? என்பவற்றுக்கு விளக்கத்தையெல்லாம் தந்தது முற்போக்கு எழுத்தாளர் சங்கம்தான். மட்டக்களப்புத் தெற்கு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராக நானிருந்து செயற்பட்டேன். பிரமாண்டமான கண்காட்சி ஒன்றைக் காட்டினோம். "சிற்பியின் வஞ்சம்" எனும் மேடை நாடகத்தை மேடையேற்றினோம். வருடா வருடம் இலக்கிய

இலங்கையில் அனேகமாகப் பிறப்புச் சாட்சிப் பத்திரத்திலேயே கவிஞர் என்று ஒருபகுதியில் எழுதிவிடலாம் போலிருக்கின்றது. அந்தளவு கவிதை தெரிந்ததோ இல்லையோ கவிஞர்கள் இருக்கின்றார்கள்

விழாவெடுத்தோம். அ.ஸ.அப்துஸ்ஸமதுவின் நூல்களை வெளியிட்டோம். கே.சாந்தலிங்கம், தெய்வானப்பிள்ளை, அக்கரைமாணிக்கம், முதல்வனார் ஆதம்லெவ்வை, யுவன், ஏ.ஆர்.எம்.ஸலீம், அ.ஸ., முத்துமீரான், எம்.ஏ.ய. வெல்வை, வை.பி.அகமது லெவ்வை, அபுல்ஹஸன், எம். ஏ. முகைதீன் இன்னும் பலர் இதில் அங்கம் வகித்து இலக்கிய சாதனைகள் புரிந்தனர். பிற்காலத்தில் மு.போ.எச.வின் வரலாறு எழுதிய இளங்கீரன் அப்படியே இவற்றை இருட்டடிப்புச் செய்தார். இச்சங்கத்தின் ஆயுள்காலச் செயலாளராக பிரேம்ஜி இருப்பதை நாங்கள் எதிர்த்தவர்கள். அ.ந. கந்தசாமி, க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, கே கணேஷ் இப்படிப் பட்டவர்களின் முற்போக்குச் சிந்தனைகள் பிற்காலம் எழும்பவில்லை. இவற்றினால் தீவிரம் கெட்டுச் சாதாரண பார்வையாளராக இருக்க நேர்ந்தது. இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் முற்போக்கு எழுத்தாளர்களின் அச்சங்கத்தின் சாதனைகள் எவராலும் மறுத்தவிட முடியாதவைகள். ஆனால், இக்காலம் ஒட்டுறவு இல்லாமலாகிவிட்டது. இதுபற்றி வரலாற்று ரீதியில் நீண்ட கட்டுரை ஏன் ஒரு புத்தகமே எழுதலாம்.

தமிழில் சிறுதை, கவிதை, திறனாய்வு, வாழ்க்கை வரலாறு ஆகிய துறைகளில் தடம் பதித்தவர்கள் வெகு சிலரிலே நீங்கள் ஒருவர். உலகத் தமிழ் இலக்கிய வரலாற்றை மூடுண்ட கதவினுள் கேள்விச் செவியரான சில இலங்கைப் பேராசிரியர்கள் எழுதும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அறிய முடிகிறது. இது பற்றி உங்கள் அபிப்பிராயம் ....

உலகத்தின் இலக்கிய வளர்ச்சி பல்கலைக்கழகங்களுக்குட்பட்டதல்ல. பல்கலைக்கழகங்கள், உலக இலக்கியங்களைக் கணக்கிட்டு வகைப்படுத்தியுள்ளன. உலகத்தமிழ் இலக்கிய வரலாறு எழுதப்போவதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறின. இலங்கையில் அதற்காகப் பங்கு பற்றுவோர் பல்கலைக்கழகப் பேராசிரியர்களாம். ஏனைய நாடுகளில் படைப்பிலக்கிய கர்த்தாக்கள், விமர்சகர்களும் இணைகின்றனர். இலங்கையில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மட்டும் என்பது பெரும் விந்தையாகவிருக்கின்றது. அப்படி ஓர் ஆய்வு இவர்களுள் நடந்தால் துரைமனோகரனின், "இலங்கையில் தமிழிலக்கிய வளர்ச்சி" எனும் சந்தைக்குரிய நூற் போல்தானிருக்கும். இப்படியான சந்தர்ப்பங்களில் முழு இலங்கையின் தமிழ் இலக்கிய வரலாற்றைத் தான் சேர்ந்த சார்ந்த கொள்கையை விட்டுவிட்டுக் கணக்கெடுத்து ஆய்வு செய்ய வேண்டிய ஒரு நிலைப்பாடு முழு இலக்கிய ஆர்வலர்களுக்குமுண்டு. இப்பணியைத் தனிமையில் நின்று பல்கலைக்கழகப் பேராசிரியர்களால் மட்டும் நிலைநாட்டமுடியாது. யாழ்ப்பாணத்தை மட்டும் கணக்கெடுத்து நின்ற சில பேராசிரியர்கள் மட்டக்களப்புப் பிராந்திய இலக்கியங்களைக் கண்டு, கேட்டு வியந்த சங்கதியை அண்மையில் அறியக் கூடியதாகவிருந்தது. அதிக வேலைகளுக்கு மத்தியில் நிற்கும் பேராசிரியர்கள், வாய்ப்பேச்சில் யாராவது இவர் நன்றாக சிறுதை எழுதுகிறார், அவர் நன்றாகக் கவிதை எழுதுகிறார் என்பதை மட்டும் கேட்டு அதை வைத்துப் பிரமாதப்படுத்திய கதைகளையும் அறிகிறோம். பொறுப்புடன் இக்காரியத்தைப் பலரும் சேர்ந்து முயற்சிப்பது முக்கியம்.

குருடும் குருடும் குருடாட்டம் ஆடும் போக்கில் வார்த்தைச் சிலம்பமாடும் இன்றைய சில கவிஞர்கள் எந்த வாசிப்பும் அற்றவர்களாக இருக்கின்றனர். இதனால், செத்துப் போன சித்தாந்தங்கள் பற்றி புது வியாக்கியானம் செய்கின்றனர். இது பற்றி.....

இலங்கையில் பொதுவாக அநேகமானவர்களின் பிறப்புசாட்சிப் பத்திரத்திலேயே கவிஞர் என்று ஒரு பகுதியில் எழுதிவிடலாம் போலிருக்கின்றது. அந்தளவு கவிதை தெரிந்ததோ இல்லையோ கவிஞர்கள் இருக்கிறார்கள். தமிழ் மேதைகள் என அறியப்படுபவர்கள் கூட, கவிதை எழுதித்தடைப்பட்டு, சிறுகதை எழுதி விடுபட்டு ஆய்வுகளை விமர்சனம் என மயங்கி நிற்பதைக் காண்கின்றோம். இருண்மையாக எழுதுவதே கவிதை எனக்கொண்டு உருவக வாய்ப்பாட்டில் வடிவமாற்றம் செய்து எழுதுபவர்களின் கவிதைத் தொகுதிகளுக்குச் சாகித்தியப் பரிசு கிடைத்திருப்பதையும் காண்கின்றோம். இலக்கிய வரலாற்றில் வடிவங்கள் மாறி மாறிக் கவிதைகள் எழுந்துள்ள போதும், அதை ஆய்வு செய்வோர் பொருளறியாது போற்றி நிற்பதையும் காண்கின்றோம். தற்காலப் போர்ச்சூழலுக்கு முன்ஏகாதிபத்தியச் சிந்தனையை எடுத்தெறிந்து மக்கள் இலக்கியம் படைத்தவர்கள் கூட, மக்கள் உணர்வை மனதிற்கொள்ளாது ஏகாதிபத்தியத்தை வளர்க்கும் தொனியில் கவிதை எழுதியிருப்பதையும் காண்கின்றோம். வெற்றிலைக் காரன் கூவோசைப் பாடல்களும், மருட்சியான இருண்மையுள்ள வசன நடைகளும் கவிதையென மருள்வோரையும் காண்கின்றோம். இத்தனைக்கும் காரணம், தாம் எழுதும் துறை பற்றிய வாசிப்பறிவின்மையே எனலாம். கலையை மட்டும் நின்று பார்க்கும் மக்களை மறந்து சித்தாந்தங்கள் அழிந்தொழிந்த விஷயம் இவர்களுக்குத் தெரியவில்லை. அந்தளவுக்கு வாசிப்பறிவில்லை. சாதாரண கவிஞர் ஒருவர் கல்விக் கோட்பாட்டை விமர்சிக்க வருவதும், முறை சார்ந்த முறைசாராத கல்வி முறை தெரியாமல், கல்வி எனும் ஒரு தலைப்பில் அலட்டிக்கொள்வதும், கல்விகூட நிகழ்ச்சிகளில் கலந்து தெரியாதவற்றைக் கதைக்க முயல்தலும் இப்போதெல்லாம் கவிஞர்களின் வேலையாயிருக்கின்றது. உண்மையில் அறிவாழும் நிறைந்த கவிஞர்கள் நம் நாட்டில் அமைதியாக இருக்கிறார்கள்.

நேர்காணல்:
த.நடராசா
செ.யோகநாதன்

ரணிலின் தேர்தல் காலப்பேச்சும் தமிழ் மக்களின் வாக்கும்...



நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் யானைக்கு வாக்களிக்க வேண்டும் என்று ஓடித்திருந்தவர்கள் இன்று சப்த நாடியும், அடங்கிப்போய் ஒடுங்கி ஒதுங்கியது வேதனைக்குரியது. தேர்தல் காலத்தில் வெற்றியை மட்டும் குறியாகக் கொண்டே வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றன என்பதும் வரலாறாகும். தமிழர் படும் துன்பத்தைக் கண்டு மனம் நொந்து, பதவிக்கு வந்ததும் வட்டமேசை மாநாடு வைப்பேன் என வாக்குறுதி கூறி பின் பெற்று விட்ட பெருவெற்றியால் கூறியதை மறந்து அப்படி தான் சொன்னதை தானே மறந்தவரான ஜே.ஆர். ஜயவர்த்தன முதல் **"உங்கள் துயரம் தீர எங்களுக்கு வாக்களியுங்கள்"** என கஷ்டப்பட்டு தமிழில் பேசி தொலைக்காட்சி மூலம் வாக்குக் கேட்ட ரணில் விக்கிரம சிங்க வரை ஒரு வரலாற்று தடயங்கள் எம் மனதில் ஆழப்பதிந்து விட்டன.

இவர்கள் இருவருக்கும் இடையில் வந்த பிரேமதாசா அவர்கள் "ஈழம் இல்லை மற்ற எல்லாம்" எனக் கூறியபோதும் எதையும் நிறைவேற்றாது இடையில் கொல்லப்பட்டதால் அவரது பூரண செயற்பாட்டை அறிய இயல வில்லை.

அவர் மரணத்தால் பதவிக்கு வந்த டிங்கிரி பண்டா விஜேதுங்க தன் சுயரூபத்தை பட்டவர்த்தனமாக பறை சாற்றி "மரம் அதில் படரும் கொடி" என்ற வியாக்கியானத்தை பகிரங்கமாகக் கூறி வாக்குகளைப் பற்றி மட்டுமல்ல தான் சார்ந்த கட்சியின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கிய பெருமகனாவார். உண்மையில் அவர் ஒருவர் தான் சந்தர்ப்பவசத்தால் பதவிக்கு வந்தாலும் சந்தர்ப்பவாதியாக தமிழ் சமூகத்திற்கு போலி வாக்குறுதிகளை வாரிவழங்காதவர்.

ஆனால் கடந்த பொதுத் தேர்தலில் கட்சிக்கு புதிய இரத்தம் பாய்ச்சுபவராக பழைய கழிப வராக, புதிய நூற்றாண்டின் நாயகனாக தன்னை நிலை நிறுத்த முற்பட்ட ரணில் விக்ரமசிங்க அவர்களின் செயற்பாடு தனிப்பட்ட ரீதியில் அவரது ஆளுமை மீதான சந்தேகங்கள் எழுந்த போதும் அவர் சொன்ன காத்திரமான விடயங் களை கடைசிவரை கைவிட மாட்டார் என்ற நம்பிக்கை பலரது பார்வையை அவர் பக்கம் திருப்பியது என்பது மிக மிக உண்மையான விடயம்.

ஒரு கட்சியை தேர்தல் களத் திற்கு இட்டுச் செல்லக் கூடிய வல்லமையான பேச்சாளராகவோ, அனைவரையும் கவர்ந்திழுக்கக் கூடிய கவர்ச்சிகரமானவராகவோ அவர் காணப்படவில்லை என்பது உண்மை தான்.

இருந்தாலும் அவர் முன்வைத்த பொருளாதார திட்டங்களுக்கப்பால் எரியும் பிரச்சினையாக இன்று இந்நாட்டில் வாழும் அனைத்து சமூகங்களும் முகம் கொடுத்து வரும் கொடூர யுத்தம் சம்பந்தமாக அவர் காட்டிய அக்கறையும், அதற்காக அவர் மேற்கொள்ள இருந்த திட்டங்களும் பலத்த பேரினவாத எதிர்ப்புகளுக்கப்பால் சிறுபான்மையினரில் குறிப்பாக தமிழ் மக்களில் பெரும்பாலான வர்களை ரணில் விக்ரமசிங்கவின் பக்கம் திருப்பியதும் உண்மை தான்.

> **கைதுகள் சித்திரவதைகள், மனித உரிமை மீறல்கள் அனைத்திற்கும் அடிப்படை காரணமான, அவசரகால சட்டத்திற்கான தங்கள் தார்மீக எதிர்ப்பைக் காட்ட உள்ள ஒரே வழி அவசரகால சட்ட பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பது தான் என்ற முடிவிற்கு வந்த ஐ.தே.க. தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் தார்மீக உரிமை கூட தலைமைத்துவத்தால் மறுக்கப்பட்டுள்ளது.**

1994ல் அடித்த சந்திரிகா அலைபோல இல்லாவிட்டாலும் ஒரு மாற்றத்தை வேண்டி நின்ற தமிழ் மக்கள் ரணில் விக்ரம சிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்த அவர் கட்சிக்கு வாக்களித்ததும் உண்மை தான்.

உடனடி யுத்த நிறுத்தம், புலிகளுடன் பேச்சுவார்த்தை, இடைக்கால நிர்வாகம் என அள்ளி வழங்கப்பட்ட வாக்குறுதிகளால் பூரித்துப்போன தமிழ் மக்கள் செய்ய விளைந்த மாபெரும் கைமாறு தான் பல தசாப்தங்களாக யாழ்ப்பாணத்தில் பலர் எண்ணிப் பார்க்க முடியாதிருந்த பிரதிநிதித்துவத்தை பெற்றது.

யுத்த சூழ்நிலைமாறும், இராணுவ கெடுபிடிகள் நீங்கும் என்ற நம்பிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குகள் தான் அவை. அதே போலத் தான் திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை உட்பட கொழும்பு மாவட்டத்திலும் பெரும் தொகையான தமிழ் வாக்குகள் யானைச் சின்னத்திற்கு அளிக்கப் பட்டன. கிடைத்த ஆசனங்கள் அரசை அமைக்கப் போதியதாக இருக்கவில்லைத்தான். ஆனால் கொடுத்த வாக்குறுதிகளை காப் பாற்றாமல் ஏமாற்றியது தான் ஐ.தே.க.வின் அதன் தலைமைத் துவத்தின் வாக்குச்சறுக்கலை வெளிக்காட்டிய வேதனை தான் தமிழ் மக்களுக்கு மிஞ்சியது.

கொழும்பு மாவட்டத்தில் எத் தனையோ சிறுபான்மை கட்சிகள் போட்டியிட்ட போதும் கூட பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை காத்திரமானதாக்க பெரிய கட்சியுடன் இணைவதே சரியென்ற மனோ கணேசன் சில நூறு வாக்குகளால் தோற்ற நிலையில், கட்சி தனக்கிருந்த கடப்பாட்டின் படியும், ஐ.தே.க.வுக்கு வாக்களித்த தமிழ் வாக்காளர்களின் மேல் உள்ள கரிசனையின் படியும், மனோ கணேசனை தேசிய பட்டியல் ஊடாக நியமித்திருக்க முடியும். ஆனால் அப்படிச் செய்யவில்லை.

அம்பாறையில் நேரடியாக மக்களுக்கு வாக்குறுதியளித்த ரணில் விக்ரமசிங்க, கணிசமான தமிழ் வாக்குகள் ஐ.தே.க.வுக்கு கிடைத்தால் அம்பாறை மாவட்ட தமிழர் பிரதிநிதித்துவம் தேசியப் பட்டியல் ஊடாக ஈடு செய்யப்படும், என்ற வாக்குறுதியும் காற்றில் கலந்து போனது தான் உண்மை.

ரங்கநாயகி பத்மநாதன் முதல் தேர்தல் மனு தள்ளுபடியான கூட்டணியின் முதன்மை வேட்பாளர் உட்பட ஐ.தே.க.வின் வெற்றிக்கு வீடு வீடாக, மேடை மேடையாக உழைத் ததோடு ஐ.தே.க. வேட் பாளர் அப்பாசி என்னோடு படித்தவர் அவரை வெற்றி பெறச் செய்யுங்கள் என கூட்டணி யின் யாழ். பிரதி மேயர் ரவிராஜ் பத்திரிகை விளம் பரம் செய்தது வரை ஐ.தே.க.வுக்கு தோள் கொடுக்க தமிழ் வாக்குகளை அதற்கு தாரைவார்த்து அதன் வெற்றிக்கு வாய்ப்புத்தேட வாக்கு வேட்டையில் இறங்கிய அனைவரும் வாயடைத்துப் போய் விட்டனரா?

அம்பாறையில் ஒன்றுபட்ட தமிழர் மகாசபை அணிக்கு அளிக்கப்படாத தமிழ் வாக்குகளை பெற்றுக் கொண்ட ஐ.தே.க.வும், அதன் புது யுகத் தலைவரும் செய்த கைமாறு தான் என்ன? எல்லா வற்றிற்கும் மேலாக வடக்கு கிழக்கில் எந்த ஒரு தமிழ் பிரதிநிதியும் தெரிவு செய்யப்படாத மாவட்டம் என்ற வரலாற்று கறையை பெற்றுவிட்ட திருமலை மாவட்டத்தில் நடந்தது என்ன?

கணிசமான தமிழர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளாத போதும், அளிக்கப்பட்ட வாக்குகளில் கூட குறிப்பிட்டளவை ஐ.தே.க. தான் பெற்றுக் கொண்டதென்பதும் உண்மை. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கூட ரணில் விக்ரம சிங்கவிற்கே பெரும்பாலான தமிழர்கள் வாக்களித்திருந்தனர்.

நட்டாமுட்டியன்

"உங்கள் எதிர்காலத்திற்கு எங்களை வெற்றிபெறச் செய்யுங்கள்" என்று மழலைத் தமிழ் பேசிய ரணில், திருமலைத் தமிழர்களுக்காக தேசியப் பட்டியல் மூலம் ஒருவரை வழங்கும் வாய்ப்பு இருந்ததல்லவா?

இவை எல்லாவற்றிற்கும் மேலாக கடந்த வாரம் நடந்த நிகழ்ச்சிதான் மிகப்பெரிய சம்மட்டி அடியாக ஐ.தே.க.வை நம்பிய, அதன் வாக்குறுதிகளை தேவவாக்காக கொண்டு தேர்தலில் போட்டியிட்டு வென்றவர்களின் தலையைக்கிறுங்க வைத்துள்ளது.

வகைதொகை அற்ற கைதுகள், சித்திரவதைகள், மனிதஉரிமை மீறல்கள் அனைத்திற்கும் அடிப் படைக் காரணமான, அவசரகால சட்டத்திற்கான தங்கள் தார்மீக எதிர்ப்பைக் காட்ட உள்ள ஒரே வழி அவசரகாலச் சட்ட பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பது தான் என்ற முடிவிற்கு வந்த ஐ.தே.க.தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் தார்மீக உரிமை கூட தலைமைத் துவத்தால் மறுக்கப்பட்டுள்ளது.

அவசரகால சட்டத்தை எதிர்த்து பேசுங்கள். ஆனால் வாக்களிப்பில் கலந்து கொள்ள வேண்டாம் என்ற கீதா உபதேசம் கேட்டுக் கிறங்கிப் போன பார்த்தனைப் போல் நம் ஐ.தே.க. தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் நிலை மாறிவிட்டது. பல தசாப் தங்களின் பின் யாழ். மாவட்டத்தில் ஐ.தே.க.வுக்கு உயிர் கொடுத்த மகேஸ்வரன் முதல் செல்லச்சாமி தேவராஜ் உட்பட அண்மையில் பிந்துனுவவ படுகொலைகளை பகிரங்கப்படுத்திக் கண்டனம் தெரிவிக்க விளைந்து, அரசினால் கைது செய்யப்பட்ட சந்திர சேகரன் வரை இந்நிலைப் பாட்டிற்கு என்ன பதில் நடவடிக் கை எடுக்கப் போகிறார்கள்?

ஜனநாயக பண்புகளிலிருந்து விலகிச் செல்லும் இலங்கை அரசு

மக்களாட்சியின் பிரதானமான கூறுகள் ஒவ்வொன்றினையும் நாம் அவதானிக்கும் போது, அவைகளின் தரமும், அந்தஸ்தும் குறைந்து கொண்டு செல்வதையும், அவைகளின் மீதான ஒடுக்கு முறைகள் அதிகரித்துக் கொண்டு செல்வதையுமே காண முடிகிறது.



மக்களை மக்களே ஆளுகின்ற நடைமுறையே ஜனநாயகம் என்று அழைக்கப்படுகிறது. இங்கு தம்மை யார் ஆளவேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்களோ, அப்படியான ஒருவரை தெரிவு செய்யும் ஒரு மாபெரும் உரிமை இந்த ஜனநாயக நாட்டிலுள்ள மக்களுக்கு இருக்கிறது. அந்த வகையில் இலங்கை ஒரு காலத்தில் சொல்லிக் கொள்கிற அளவு ஜனநாயக நாடாக இருந்தது. ஆனால் தற்போதைய நிலை கவலை தருவதாக உள்ளது. ஆம், நமது நாடு ஜனநாயகப் பண்பு மற்றும் மக்களாட்சிக் கூறுகளிலிருந்து மிக மிக தூரத்தே விலகிச் செல்வதை அண்மைக்கால நிகழ்வுகள் பல, மிகத்துல்லியமாக உணர்த்துகின்றன.

மக்களாட்சி ஒன்றின் கூறுகளாக, பின்வரும் விடயங்கள் பிரதானமான வைகளாக வைத்துப் பேசப்படுவதுண்டு. அவைகளாவன-

அரசு ஒன்றின் தலைவர்.
பாராளுமன்றம்.
நீதித்துறை.
பத்திரிகை (தொடர்பு சாதன) துறை

ஆகியனவைகளேயாகும்.

சுடந்த வருடம் நடைபெற்ற, அரசின் தலைவரை தேர்வு செய்வதற்கான ஜனாதிபதித் தேர்தல், மற்றும் கடந்த மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் ஆகியன வன்முறைகள் நிறைந்த கொலைக்களமொன்றை நாட்டுக்குள் ஏற்படுத்தியிருந்தன. நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் முறையற்றதென பல்வேறு அமைப்புக்களும், வேறு பல கட்சிகளும் பகிரங்கமாக தெரிவித்திருந்தமையும், அத்தேர்தலின் போது, பல்வேறு வகையான வன்முறைகள், சொத்து, உயிர் அழிவுகள் இடம் பெற்றமையும் இலங்கையின் ஜனநாயகத் தன்மையை கேள்விக்குட்படுத்தியிருந்தன.

பாராளுமன்றத் தேர்தலின் போது, முக்கிய அமைச்சர்கள் பலர் வன்முறைகளில் ஈடுபட்டதும், அது பற்றி பொ.ஐ.மு. செயலாளர் தி.மு.ஜயரத்ன பகிரங்கமாகக் கண்டித்து அறிக்கை விட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவைகள் எல்லாவற்றுக்கும் மேலாக, ஜனாதிபதியவர்களே பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள ஆளுங்கட்சி உறுப்பினர்களில் பலர் தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்டிருந்ததை மறைமுகமாக ஏற்றுக் கொண்டிருந்தார். அதனால் தானோ என்னவோ அவ்வாறான வன்முறைகளில் ஈடுபட்டவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவித்திருந்தார். (அமைச்சுப் பதவியொன்றை வழங்காமல் விடுவதை ஒரு தண்டனை முறையாக அறிவித்த, உலகின் முதல் நாடு இலங்கையாகத்தான் இருக்க வேண்டும்)

இது இப்படியிருக்க, கலைக்கப்பட்ட பத்தாவது பாராளுமன்றத்தின் அந்திம நாட்களில், அரசாங்கம் உத்தேச அரசியல் யாப்பினை சபைக்கு கொண்டு வந்திருந்த போது, அங்கு பாராளுமன்றம் நடந்து கொண்ட முறையானது மிகவும் கேலிக்குரியதாகவும், சிறுபிள்ளைத் தனமானதாகவுமே அமைந்திருந்தது.

ஆக, மக்களாட்சியின் முதல் இரண்டு கூறுகளான அரசின் தலைவர் தெரிவு, மற்றும் பாராளுமன்ற (உறுப்பினர்கள்) தெரிவு ஆகிய முறைகளிலேயே நமது நாட்டில் ஜனநாயகம் மிகத் துல்லியமாகவே மீறப்பட்டிருக்கிறது. இது எவரும் அறிந்த உண்மையும் கூட.

இவை போலவே, மக்களாட்சியின் ஏனைய கூறுகளான நீதித்துறை, பத்திரிகைத்துறை ஆகியன அச்சுறுத்தலுக்குள்ளாவதும், அவைகள் மீதான சுதந்திரமும், உரிமைகளும், மீறப்படுவதும் அண்மைய காலங்களில் மிகவும் சர்வ சாதாரணமாகி விட்டன.

யூயெல் மப்றூக்

இலங்கையில் நீதித்துறை என்பது இன்று மக்களின் விசனத்துக்கும், கேள்விகளுக்குமுள்ளாகியுள்ளது. உதாரணமாக அண்மைக்காலங்களில் இடம்பெற்ற கிருஷாந்தி, சாரதாம்பாள், கோணேஸ்வரி ஆகியோர் மீதான பாலியல் வன்புணர்வு மற்றும் கொலை வழக்குகள் இதுவரை பூரண தீர்வுகள் காணப்படாமல் இழுத்தடிக்கப்படுவதும், குமார் பொன்னம்பலத்தினது படுகொலை மற்றும் செம்மணி புதைகுழி விவகாரம் ஆகியவற்றுக் கெதிரான நடவடிக்கைகள் கை விடப்பட்டுள்ளமையும், அதில் சம்பந்தப்பட்டவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படாமையும், நீதித்துறை மீது அவநம்பிக்கை ஏற்பட வழியேற்படுத்தி விட்டிருக்கிறது. மேற்படி கொலை, குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்டவர்கள் அரசோடும், அதன் பயங்கரவாதத் தோடும் தொடர்புடையவர்கள் என்பதனால் அவர்கள் மீது நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ள முடியாமல், இன்று நீதித்துறை தனது சுயாதீனத்தை இழந்து கைகட்டி, மௌனித்து நிற்கிறது என்பதே நடுநிலையாளர்களின் கருத்தாக இருக்கிறது.

இவ்வாறே, இன்று பத்திரிகை (தொடர்பு சாதன) துறையும் இலங்கையில் அச்சுறுத்தப்பட்டு, அராஜகக் கரங்கொண்டு நசுக்கப்பட்டு வருகிறது.

இலங்கையின் அரசியலமைப்பு உறுப்புரை 14(1) (அ) வின் படி, ஒரு பிரஜைக்குள்ள வெளியிடுதல், உட்பட, பேச்சு, கருத்துத்தெரிவித்தற் சுதந்திரங்கள் உத்தரவாதம் செய்யப்படுகின்றது. இச் சுதந்திரங்கள் பற்றி நீதியரசர் காடோசோ என்பவர் தெரிவிக்கையில், "மற்றைய சகல சுதந்திரங்களினதும் கருவாகத் திகழ்வது சிந்தனை மற்றும் பேச்சுச் சுதந்திரம்" என்று கூறுகிறார். சுதந்திரமான, ஜனநாயகமான சமூகம் ஒன்று இருப்பதற்கு ஒரு பிரதான அம்சம் என்னவெனில் அச்சமூகத்தில் பேச்சு மற்றும் சிந்தனை வெளிப்பாட்டுச் சுதந்திரம் பாதுகாக்கப்படல் அவசியமாகும். இங்கு பேச்சுச் சுதந்திரம், மற்றும் சிந்தனை வெளிப்பாட்டுச் சுதந்திரம் எனும் போது, இது நாம் விரும்பும் விடயங்களை கேட்பதற்கோ, எழுதுவதற்கோ, வெளிப்படுத்துவதற்கோ உள்ள சுதந்திரத்தை மட்டும் குறிக்கும் என்றில்லை. நாம் விரும்பாத விடயங்களை கேட்பதற்கும், வெளிப்படுத்துவதற்குமான சுதந்திரத்தையும் இது உள்ளடக்கும்.

இவ்வாறான சுதந்திரங்களை தன்னகத்தே உள்ளடக்கி செயற்படுமுனைகின்ற பத்திரிகை மற்றும் தொடர்பு சாதனங்கள் இன்று பல்வேறு வகையான அச்சுறுத்தல்களுக்குள்ளாகின்றன. பத்திரிகை (தொடர்பு சாதன) துறையானது, மக்களாட்சி சிறப்புற தொழிற்பட மிகவும் தாக்கமான பங்களிப்பினை வழங்குகிறது. உண்மையில், ஆட்சியாளர்களை ஆளப்படுபவர்களுக்கு பொறுப்பாகவும், வகை சொல்பவர்களாகவும் வைப்பதற்கு மிகவும் மதிப்பான அத்தியாவசியமான பணியை இது புரிகின்றது. ஆட்சியாளர்களை பொறுப்புக் கூற வைப்பதற்கான தத்துவத்தை அல்லது செல்வாக்கை தொடர்பு சாதனத்துறை கொண்டிருக்கிறது.

இவ்வாறான சிறப்பு மிக்க, மக்களாட்சியின் கூறுகளிலொன்றான பத்திரிகைத்துறையும், அத்துறைக்காகியாக சிந்தையோடு உழைக்கின்ற பத்திரிகையாளர்களும் இன்று அச்சுறுத்தலுக்கும், உயிராபத்துக்கும் முகம் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கியமானதொரு நிலை ஏற்பட்டிருக்கிறது.

இரிதா பெரமுன, சண்டே லீடர், உதயன் பத்திரிகை நிறுவனங்கள் தடை செய்து மூடப்பட்டமை. பத்திரிகையாளர்களும், அவர்களின் வாழ் விடங்களும் தாக்கப்பட்டமை. தமிழ் பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டமை, நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டமை, மற்றும் சட்டன ஆசிரியர் ரோகண குமார இன்னும் நடராஜா அற்புதராஜா, இறுதியாக மயில்வாகனம் நிமலராஜன் ஆகியோர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டமை, என்பன பத்திரிகை (தொடர்பு சாதன) துறைக்கு, அண்மையில் இந்த அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட மிகப் பாரிய அடக்கு முறைகளுக்கு, மிகச் சில உதாரணங்களாகும்.

இவ்வாறு, மக்களாட்சியின் பிரதானமான கூறுகள் ஒவ்வொன்றினையும் நாம் அவதானிக்கும் போது, அவைகளின் தரமும் அந்தஸ்தும் குறைந்து கொண்டு செல்வதையும், அவைகளின் மீதான ஒடுக்குமுறைகள் அதிகரித்துக் கொண்டு செல்வதையும் காண முடிகிறது.

இந்தப் போக்கு இப்படியே தொடருமானால், இறுதியில், நாட்டின் ஜனநாயக பண்புகள் நிறைந்த முகம் மாறுதல்களுக்குள்ளாகி, விகார மடைந்து, பின் சர்வாதிகாரத்தின் கோர முகமொன்றினை கொண்ட இலங்கையை, நாம் விரைவில் தரிசிக்கக் கூடிய நிலையொன்று உருவாவது தவிர்க்க முடியாமலே போய் விடலாம்.

வெண்பாவில் என்னை நீ வென்றாய் - ஷரிபுத்தீன் நண்பாவென் நாமம் உனக்களித்தேன்.

புலவர் மணி ஆ.மு. ஷரிபுத்தீன்



- சஞ்சயன்

தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்த பயிற்சியும், மரபுவழிக்கவிதையில் தேர்ச்சியும் திறனும் கொண்ட சான்றோர்கள் இலங்கையின் கடைசிக் கொழுந்துகளாகக் காணப்படுகின்றார்கள். தமிழ்க் கவிதைப் படைப்புத்துறையின் முதிர்ச்சிகளான இவர்களின் ஆக்கங்கள் இனிவரும் தலைமுறைக்கும் இந்தத்தலைமுறையினருக்கும் வியக்கத்தக்க பொக்கிஷங்களெனக் கொள்ளத்தக்கவை. பொக்கிஷங்களை அடுத்ததலைமுறையிடம் கையளித்து இலக்கியவளர்ச்சியை சங்கிலித் தொடரென ஆக்கிவிட்டுச் சென்றிருக்கின்ற பெருமைக்கும் தகுதிக்கும் உரியவர்கள் இந்தச் சான்றோர்கள். இவர்களில் ஒருவர் புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன். தான் வாழ்ந்த காலத்திலேயே கவிஞனுக்குரிய மதிப்பையும் பெருமையையும் பாராட்டுதல்களையும் தகுதியானவர்களிடமிருந்து பெற்ற பெருமைக்குரியவர் புலவர்மணி.

தமிழ் இலக்கியச் சொல்வளம் பெற்ற மொழி. உலகில் இது போன்ற மொழிகள் சிலவே. இந்த இலக்கியவளத்தை அறியாமலும் பயிலாமலும் வார்த்தைகளைக் கட்டி பேதமைப் பெருமையோடு கவிதைச்சிந்தனை பற்றி அளப்பவர்களிடையே இவற்றையெல்லாம் காணாத போக்கில் தன்னடக்கத்துடன் கவிதை எழுதியவர், செய்யுள் யாத்தவர் புலவர்மணி.

தமது கவிதை விருப்பால், கவிமரபு முறையினைத்தேர்ந்தெடுத்து அதில் வல்லவரான பலரை தமிழ் நன்றாக அறியும். வெண்பாவிற் புகழேந்தி சிந்துக்குத் தந்தை பாரதி என்றாற் போல வெண்பாவுக்கு ஷரிபுத்தீன் ஆனார் கவிஞர்.

விருத்தப்பா, ஆசிரியப்பா என்பனவற்றைப் பாடுவது போல வெண்பா பாடுவது எளிதான திறமையல்ல. புலவர் மணி ஷரிபுத்தீனின் வெண்பாக்களில் சொல்லாட்சியும், ஓசையும், உவமானமும் உயிர்ப்போடும் வனப்போடும் இலங்கும் திரும்பவும் வாசகனைத் தன்னோடு பிணைக்கும் கவித்துவம் இவரது. இலங்கைத் தமிழின் இன்னொரு புலவர்மணியான ஏ. பெரிய தம்பிப்பிள்ளை, ஷரிபுத்தீனின் கவித்துவ ஆற்றலை வியந்து பின்வருமாறு பாடினார்.

வெண்பாவி லென்னை நீ வென்றாய் ஷரிபுத்தீன்
நண்பாவென் நாமமுனக்களித்தேன் - பண்பாளன்
வாழி யுறபுதமி ழுள்ளவும் வாழி நீ
வாழிநம தன்பு மலர்ந்து.

பதிப்பிக்கப்பட்ட ஷரிபுதீனின் உலகியல் விளக்கமும் நம்நாட்டின் நானிலக் காட்சிகளும் முதுமொழி வெண்பாவும் சூறாவளிப் படைப்போரும் என்ற இரண்டு அருமையான நூல்களும் மேலே கூறப்பட்ட கருத்தினை உறுதி செய்கின்றன. தனது 92வது வயதில் இயற்கையெய்திய புலவர் மணி, தனது ஆக்கங்களையும், ஜின்னா ஷரிபுத்தீன் போன்ற கவிதை வழித்தோன்றல்களையும் தமிழுக்கு அருஞ்சொத்தாக விட்டுச் சொன்றிருக்கின்றார்.

பண்டிதமணி ஷரிபுத்தீன் அம்பாறை மாவட்டத்திலுள்ள மருதமுனை என்ற கிராமத் திலே 1909ம் ஆண்டு மேமாதம் 4ம் திகதி பிறந்தார். மருதமுனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலே ஆரம்ப வகுப்புமுதல் மாணவ ஆசிரியர் இறுதி வகுப்பு வரையிலும் கற்றார். வேலுப்பிள்ளை, வைரமுத்து என்ற ஆசிரியர்களிடம் தமிழ் இலக்கண, இலக்கியங்களை துறைபோக ஆழ்ந்து கற்றார். பின்னர் சுவாமி விபுலானந்தரிடம் இலக்கண, இலக்கியங்களையும் சமஸ்கிருத மொழியையும் கற்றார். கற்றலில் காட்டிய ஆர்வத்தால் சுற்றியுள்ளோரை வசீகரித்து, பாராட்டுக்கும் முன் உதாரணத்துக்கும் உரிமை பெற்ற மாணவரா னார்.

கிழக்கிலங்கையின் முதல் முஸ்லீம் ஆசிரியர் என்ற சிறப்பினைப் பெற்றவர் தனது பதினைந்தாவது வயதில் மாணவ ஆசிரியனாகப் பணி தொடங்கினார். ஆசிரியனான போதும் படிப்பே ஆர்வமாக விளங்கிற்று. ஆசிரிய தரா தரப் பட்டம் பெற்று பதினைந்து ஆண்டுகளாக நல்லாசிரியனாகக் கடமையாற்றினார். மாணவர்களின் நேசத்துக்குப் பாத்திர வாளியானார் இவர்.

1942ல் உடத்தலவின்னை மடிகே அரசினர் முஸ்லீம் பாடசாலைக்குத் தலைமை ஆசிரியர ராகினார். பின்னர் அட்டாளைச் சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பத்தொன்பது ஆண்டு கால பாடசாலைத் தலைமை ஆசிரியர் பணியில் அவையத்து முந்தியிருக்கச் செய்யும் பலமாணவர்களை உருவாக்கினார்.

1961ல், சுய மொழிக்கல்வி வித்தியாதிகாரியானார். ஒன்பதாண்டு கால பதவிக்காலம், பின்தங்கிய பகுதி கல்வி வளர்ச்சிக்கு பயனானது. இவ்விதம் கல்வித் துறையில் இவரது பெயர் திருப்திகரமாகப் பதிவும் சிறப்பும் பெற்றது. இக்காலப் பகுதியிலே ஆசிரிய சங்கத்தலைவராக இவர் அற்றியபணி தனித்துவமாய் பெருமைக்குள்ளாக்கப்பட்டது.

இவரது பாட்டனார் புலவர் சின்னாலிமப்பா இவரின் "ஞானரை வென்றான்" ஏட்டுப்பிர தியாக இருந்தது. செல்லரித்த நிலையிலிருந்த இதனைத் தேடி எடுத்து, ஆய்ந்து பிரதிசெய்து நூலாக வெளியிட்டார். சின்னாலிமப்பா இரண்டு நூற்றாண்டுக்கு முன்னர் ஊன்றிய கவிதாவிருட்சம் இன்று மருதமுனையின் கவிமர பாய் செழுமை செறிந்திட நிற்கிறது.

இவர் எழுதிய நபிமொழிநாற்பது 1959ல் இலங்கை சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றது. இதே காலப்பகுதியில் வீராங்கனை சயிதா கவிதை நூலும் வெளியாயிற்று.

தென்னிந்தியப் புலவர் சேகு அப்துல் காதிர் நெய்னார் ஆலிம் இயற்றிய "புதுகுஷ்ஷாம்" என்ற காவியத்துக்கு 1979ம் ஆண்டு உரை எழுதினார். இது நான்காவது இஸ்லாமிய உலகத் தமிழா ராய்ச்சி மகாநாடடில் நான்கு பாகங்களாக வெளியிட்டு வைக்கப்பட்டது.

"இசைவருள்" மாலையும் மக்களுக்கு இதோப்தேசமும் என்பது இன்னொரு குறிப் பிடத்தக்க இவரது நூல் மட்டக்களப்பு நாட்டுப்பாடல்களுடன் கங்க இலச்சியப் பாடல்களுடன் ஒப்பிடும் முறையில் எழுதப்பட்டது "கனிந்த காதல்" 1984ல் இது வெளியாயிற்று.

புலவர் ஆசிரிய மணி, புலவர் மணி, வெண்பாப்புலி, இலக்கிய மாமணி, நூருல் பன்னான் என்ற பட்டங்கள் இவரின் திறமைக்கு அடையாளங்களாச் சூட்டப்பட்டன. மாணவர்களுக்காக இவர் எழுதிய நூல்களும், உரை விளக்கங்களும் மிக ஆழமாகவும், தெளிவாகவும், இலகு நடையிலும் ஆக்கப்பட்டன. இன்றைய பாடநூல் ஆசிரியர்களுக்கு இவை பயிற்சியளிக்கும் தகுதியும் தரமும் நிறந்தவை.

மக்களின் வாழ்வினைப் பாதித்தவையெல்லாம் அவரது வாழ்வினைப் பாதித்து உலுப்பியிருக்கின்றன. செய்யுட்களாகச் செய்ய உந்தியிருக்கின்றன. நெஞ்சார்ந்த பாடல்களை ஆக்கவைத்திருக்கின்றன. இதற்கு சிறந்த உதாரணம் 1987ம் ஆண்டு நவம்பர் 23ல் கிழக்கு மாகாணத்தில் வீசிய புயலினைப் பற்றி இவர் எழுதிய "சூறாவளிப் படைப்போர்" சூறாவளியை ஒரு போர்ப்படையாக உருவகப்படுத்தி அதனால் மக்கள் பட்ட துயரம் அவலம் இழப்பு என்பனவற்றை நெஞ்சை அள்ளும் விதத்தில் சொல்லி இருக்கிறார் புலவர் மணி. இச் செய்யுட்கள் சிறப்பான ஆவணமும் ஆகிவிட்டன.

கிழக்கு மாகாணச் சூறாவளியை அசுரத்தன் மையுள்ளவனாக கவிஞர் சொற்சித்திரமாக்கி நம் எதிரே சூறாவளி வீச்சையே கொண்டு வருகிறார்.

முறித்தனன் திருகினன் மோதினன் மண்ணைப்
பறித்தனன் வீசினன் பரத்தினன் பலபாற்
செறித்தனன் உடைத்தனன் செகுத்தனன் குவித்தே
நெறித்தனன் விழுத்தினன் எதிர்த்தவை அனைத்தும்

கம்பனின் தோழமை புலவர்மணியிடம் அப்படியே கேட்கிறதல்லவா?

படைப்பாளிகளுக்கு பொதுவானதொரு கனவு எப்போதும் இருந்து வருகிறது. மகாகவி பாரதி ஒவ்வொரு வீட்டிலும் தீப்பெட்டி இருப்பது போல தனது தொகுதிகளும் இருக்கவேண்டுமென்ற பேராசை கொண்டிருந்தான், இதே கனவு ஆசை புலவர் மணிக்கு இருந்தது. தனது எழுத்துக்கள் யாவும் நூலாக வேண்டுமென்ற ஆசை தந்தைக்காகவே தனயனான கவிஞர் ஜின்னா அன்னை வெளியீட்டகத்தை தொடக்கினார். அதிலே புலவர் மணியின் எல்லா ஆக்கங்களும் பூக்கள் நூறென மலர்ந்து மணம் கமழட்டும்.

பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவர்கள் படும் கதி!

தங்களுக்கு இந்த நிலை ஏன்? என்கின்றார்கள் மாணவர்கள்

வடக்கு கிழக்குப் பகுதியில் வசிக்கின்ற தமிழ் மாணவர்கள் என்றால், அவர்கள் எல்.டி.டிஐச் சேர்ந்தவர்கள் என்ற ஒரு தவறான கண்ணோட்டம் பெரும்பான்மை இனத்தவர்கள் மத்தியிலும் பாதுகாப்புப்படையினர் மத்தியிலும் நிலவிவருவது ஒரு கவலைக்குரிய விடயமாகக் காணப்படுகிறது. இப்படிப்பட்ட துரதிஷ்டவசமான நோக்கம் பல்கலைக்கழகங்களிலும் கட்டவிழ்த்து விடப்பட்டு தமிழ் மாணவர்கள் துன்புறுத்தப்பட்டு வருகின்றனர். இப்படியான சம்பவம் ஒன்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றுள்ளது.

இப்பல்கலைக்கழகத்துக்கு கிழக்கு மாகாணத் திலிருந்து 1997ல் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எழுதி கலைப் பிரிவுக்கு தெரிவான திருக்கோயிலைச் சேர்ந்த மாணவரான தியாகராஜவும் அவரது நண்பர் இருவரும் கடந்த 21.10.2000ம் திகதி இரவு படித்துக் கொண்டிருக்கும் போது திடீர் என்று விடுதியினுள் நுழைந்த ஒரு கோஷ்டியினரால் தாக்கப்பட்டு பின்னர் பேராதனைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். பொலிஸார் இவர்கள் மீது பொய்யான குற்றம் சுமத்தி நீங்கள் எல்.டி.டி.ஈ உளவாளிகள் தானடா? எங்கடா குண்டு வைக்கப் போறீங்க? நாங்கள் எல்.டி.டி.ஈ தான் என்று இந்தப் புத்தகத்தில் கையொப்பம் இடுங்கடா என்றவாறாக மிரட்டி அவர்களை அடித்து துன்புறுத்தியுள்ளனர். இம்மாணவர்கள் அவர்களது எந்தக் கோரிக்கைகளுக்கும் மசியாமல் போக விஷயம் பல்கலைக்கழக ஏனைய மாணவர்களுக்குத் தெரிந்தால் விபரீதமாகிவிடும். என்ற காரணத்தால் இந்தமாணவர்களிடம் நீங்க கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டதாக யாருக்கும் தெரியக்கூடாது என்று பயமுறுத்தி அப்படி தெரியவந்து ஆர்பாட்டம் என்று ஏதாவது செய்கையில் ஈடுபட்டால் உங்களை கொழும்புக்கு ஏற்றவேண்டி வரும் என்று கூறி இவர்களை விடுதலை செய்துள்ளனர்.

இப்படியான சம்பவங்கள் இங்கு தமிழ் மாணவர்களுக்கு நடைபெற்று கொண்டிருக்கின்றன. அதிலும் வடக்கு கிழக்குப் பகுதியை சேர்ந்தவர்கள் என்ற ால் சொல்லொணாத இன்னல்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. பாதிக்கப்பட்ட மாணவர்கள் கூறு கிறார்கள். நாங்கள் நீறுபூத்த நெருப்பு போல இங்கு நடமாடுகிறோம். இப்போது இருக்கும் சூழ்நிலையின் படி அந்தந்த பிரதேசத்திலுள்ள பல்கலைக்கழகங்களில் கல்வியைக் கற்பதே சிறந்தது. எங்கு கற்றாலும் தரப் போகும் பட்டம் (பி.ஏ) என்ற ஒன்றுதான் அப்படி இருக்கும் போது காலடியில் இருக்கும் பல்கலைக்கழகத்தை விட்டு விட்டு சிங்களப் பகுதியில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு சென்று தமிழன் என்ற ஒரு காரணத்துக்காக துன்பப்படவேண்டிய நிலை எமக்கு வரவேண்டுமா? என்று அழுது கொண்டே கூறுகின்ற ார்கள். இவர்கள் தமக்கு பின் வரும் தமிழ் மாவணவர்கள் சிங்களப் பகுதியில் உள்ள பல்கலைக்கழகங்களை தெரிவு செய்ய வேண்டாம். என்றும் தமக்கு நேர்ந்த இந்தக் கதி அவர்களுக்கும் ஏற்பட வேண்டுமா? என்றும் கூறி அழுகின்றனர். இப்படிப்பட்ட நிகழ்வுகள் அண்மைய காலங்களில் பல பல்கலைக்கழகங்களில் நடைபெற்ற மை குறிப்பிடத்தக்கது. எப்போது தான் தீருமோ தமிழர்கள் மீதான இந்தக் கண்ணோட்டம்!

ஏ. ஜேலீல்
கலைப்பீடம் (முதலாம் வருடம்)
பேராதனைப் பல்கலைக்கழகம்.

இதன் பிரதி, வடக்கு புனர்வாழ்வு, தமிழ் விவகார கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு அனுப்பப்படுகின்றது. இதற்கான பதில் கிடைத்ததும் அதனைப் பிரசுரிப்போம்.

ஆசிரியர்.

தேவதாசிகள் தொடர்பான இவ்வாய்வுக் கட்டுரை கலாநிதி செல்வி திருச்சந்திரனின் தமிழ் வரலாற்றுப் படிமங்களில் ஒரு பெண் நிலை நோக்கு எனும் புத்தகத்திலிருந்து வாசகர்களுக்காக தொடர்சியாக தொகுத்து வழங்கப்படுகிறது.

தொகுப்பாசிரியர்

அரசியல் அதிகாரத்தின் கலாசாரக் குறியீடாக சமூக வரையரையை மீறிய பெண்

பண்டைய காலத்திலிருந்தே எமது சமூக ஆய்வுகளானது பெண்கள் தொடர்பான கருத்துநிலைகளில் முரண்பாடான கருத்துகளையே கொண்டுள்ளன. பெண் சக்தியாகவும் தெய்வமாகவும் மதிக்கப்படுகின்ற அதேவேளை பலவீனத்துக்குரியவளாகவும், தீட்டுக்குரியவளாகவும் பார்க்கப்படுகின்றாள். இவ்வாறே தேவதாசி என்பவள் பற்றிய வரை யறைகளும் வரலாற்று ரீதியாக நோக்கும் போது முரண்பட்ட கருத்துக்களையே கொண்டுள்ளது. தேவரடியாள் என்பவள் கடவுளுக்கு அடிமை என்னும் கருத்தாக்கத்தை கொண்டுள்ளது. அவள் கடவுளை மணந்தவளாகவும் கடவுளுக்கு சேவை செய்பவளாகவும் கருதப்படுகிறாள். இந்தத் தேவரடியாள் பிற்காலத்தில் தூற்றுதலுக்குரியவளாகவும் சமுதாயத்தில் இருந்து விலக்கி வைக்கப்பட்டவளாகவும் ஒரு முர ண்பாடான நிலைமை நிலவி வருகின்றது. சமூக ரீதியாக, ஒதுக்கப்பட்டவள் கடவுளை மணந்தவளாக கொள்ளப்படும் ஒரு முரண் பாடான கருத்தை நாம் அவதானிக்க கூடியதாக உள்ளது இதற்கு சில அரசியல், சமூக, பொருளாதார காரணிகளை நாம் உற்று நோக்க வேண்டும். அதேவேளை அவள் எவ்வாறு கோயிலுக்கு அர்ப்பணிக்கப்பட்டாள் என்பதையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

தேவதாசி என்பவள் அன்றைய காலகட்டத்தில் கோயிலுக்குள் கொண்டுவரப்ப டுவதற்கு பல சடங்கு முறைகள் காணப்பட்டன. ஒரு இளம் தேவதாசி, சடங்குகள் அடங்கிய வைபவ முறையில் கடவுளுக்கு அர்ப்பணிக்கபடுகிறாள். இதில் அடங்கியுள்ள சடங்குமுறைகள் பிராமண கல்யாணச் சடங்கு முறைகளை ஒத்ததாய் உள்ளன. இவள் கோயில் வளாகத்தில் சென்று வசிக்கின்றாள். இவள் அறித்திய வாழ்வுடைய மனிதரை மணக்க அனுமதிக்கப்படுவதில்லை. சாதாரண மனிதனை மணக்க தகுதியற்றவளாகவும் நித்திய ஜீவனுடைய கடவுடையே மணக்க இவளுக்கு தகுதி உள்ளது எனவும் கூறப்படுகின்றது. அவளது திருமணமாகாத நிலை சடங்கு ரீதியாக பிரம்மச் சாரியாக கொள்ளப்படும் நிலைக்கு சமமானதாகும். எனினும் அவளுக்கு பாலுறவு அனுமதிக்கப்பட்டிருந்தது. பிள்ளை பேற்றுக்கும் தடையில்லை. நாட்டியத்திலும் இசையிலும் கூடும் பயிற்சி கொள்வது அவளுக்கு அவசியமாக இருந்தது. அவளது தாயாராலோ, பேர்த்தியாரா லோ அவள் பற்றிய வரவு சமூகத்துக்கு அறிவிக்கப்படுகிறது. ஒரு ஆண் அவளின் காப்பாளராக ஏற்றுக் கொள்ளபடுகிறான். ஆனால் அவன் விவாகஞ் செய்தவளாக இருக்க வேண்டும் என்பது இங்கு மரபாகும். அவளது சமூக அந்தஸ்த்தின் குறியீடாக அவளை கோயிலுக்கு அர்ப்பணித்த தன்மையே சுட்டிக்காட்டுகிறது. எவ்வாறாயினும் அவளுடைய காப்பாளருக்கு ஒரு மனைவியின் ஸ்தானத்தில் வைத்து செய்யப்படும் கடமைகள் எதிர்ப்பார்க்கப்படவில்லை. இல்லற தர்மம் வலியுறுத்தப்படவில்லை. குடும்பம் என்ற ஸ்தாபனம் அவளை அடக்கி ஒடுக்கவில்லை. அவள் தன்னை இசைக்கும் நடனத்துக்கும் அர்பணித்து விடுகிறாள் இவற்றின் மூலம் இவள் கோயிலுக்கு பலவித கடமைகளை செய்ய வேண்டியவளாகின்றாள். விளக்கேற்றல், திருவிழாக் காலங்களில் தெய்வ உருவங்கள் ஊர்வலமாக வரும் போது நடனமாடுதல், சாமரை வீசுதல் போன்றவை அவள் கோயிலுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் சிலவாகும்.

இவற்றை சுருங்கச் சொல்வதானால்

சமூகத்திலிருந்து நிரந்தரமாக ஒதுக்கப்பட்ட ஒரு பெண்பிரிவு கடவுளை மணந்தவளாகவும், ஆடம்பரமான சடங்கு முறைகளின் மூலம்கோயிலுக்கு அர்ப்பணிக்கப்பட்டவளாகவும், இறைவனை மணந்தவளாக நித்திய சுமங்கலி என்னும் பட்டத்தையும் பெற்றுக் கொள்கிறாள். இதற்கு முலகாரணமாக அவளுக்கு துணையாக இருக்கும், இசையும் நடனமும் தூய கலாசாரப் பின்னணியில் ஒரு அம்சமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

இங்கே நாம் ஒன்றை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் ஆதாரமற்றதாக, புனிதமற்றதாக, ஒதுக்கி வைக்கப்பட்ட ஒன்று ஒரு புனிதமானதுக்குள் புகுத்தப்பட்டதன் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளல் வேண்டும். சோழ ராஜ்யத்தின் மகோன்னதம் அதன் அதிகார அமைப்பை கோயில் மூலமாகவே பலப்படுத்திக் கொண்டது. சோழராஜ்யத்தில் அரச அதிகாரத்தின் இருப்பிடமாக அரசியல் மூலமாக கோயிலே காணப்பட்டது. கோயில்கள் கலாசார மகோன்னதத்தை குறிப்ப னவாகவும் அதேவேளை அரசியல் ஐக்கியத்தை குறிப்ப னவாகவும் காணப்பட்டது. தஞ்சாவூரில் கட்டப்பட்ட கோயில் சோழத் தலைநகரின் பெருமையை பேசின. கங்கை கொண்ட சோழபுரம் என்னும் கோயில் (கங்கையை சோழ சாம்ராஜ்யத்தோடு இணைத்ததைக் கூறுவது) அர சியல் கருப்பொருளைக் கொண்ட கலாசாரக் குறியீட்டைக் காட்டுவதாய் உள்ளது. முடி சூட்டு விழவுக்காக கட்டப்பட்ட கோயில்கள், அதேவேளை முடிசூட்டு விழாக்கள் நடைபெற்ற

சமூகத்திலிருந்து விலக்கப்பட்ட ஒதுக்கப்பட்டவள் கடவுளின் துணைவியாகவும், சாதாரண குடும்பப் பெண்ணுக்கில்லாத சுதந்திரங்களைக் கொண்டவளாகவும் பண்டைய கால அரசியலின் மூலமாகவும் புனிதமாகப் போற்றப்படும் கலைகளின் மூலவேர்களாகவும் காணப்பட்ட இவர்கள் சோழர்கால அரசியல் வரலாற்றில் சாதாரண பெண்களைக் காட்டிலும் சமூக அந்தஸ்து உள்ளவர்களாகவே காணப்பட்டனர்

கோயில்களும் உள்ளன. சோழ சாம்ராஜ்யத்தின் அரசசபை கோயிலை ஒத்ததாகவே இருந்தது. கோயில்களுக்கு ஏராழமான பணமும், காணிகளும் இருந்தன கோயிலின் வருமானங்களின் மூலம் வைத்தியசாலைகள், ஆச்சிரமங்கள் கல்லூரிகள் நடத்தப்பட்ட. சோழ அரசனின் அரசியல் கொள்கையும் கோயில்களின் அமைப்போடு நெருங்கிய தொடர்புடையதாய் இருந்தது.

ஒதுக்கப்பட்டு வந்த ஒரு பகுதிப் பெண்களின் உயர்கலைத்திறமை தேவைப்பட்டபோது அரசியலோடு அது கலக்கப்பட்டது. அதனை பின்வருமாறு கூறலாம். கோயிலை ஒத்த அரச பீடம், கலைகளின் பீடமாக கோயில், கோயிலுக்குள் நுழைய வேண்டிய கலைப் பெண்ணாக தேவதாசி காணப்பட்டாள். எனவே கோயிலுக்கு அவள் அர்ப்பணிக்கப்படுதல் அதை அரச ரீதியாக செயல்படுதல் என்பன இங்கு ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டு ஒழுங்கு படுத்தப்பட்ட முறை யில் பின்னிப்பிணைந்துவிட்டன. அதர்மமானது என விலக்கப்பட்ட ஒரு பொருள் தர்மத்துக்குள் கலையம்சத்துடன் புகுத்தப்பட்டு விட்டது. எவ்வாறு அரசர்களின் அரசியல் ஆளுமையும், அதிகாரமும் கோயில்களோடும் அது சம்பந்தமான விழாக்களோடும் சம்பந்தப்பட்டதாக இருந்ததோ அதேபோல் தேவதாசிகளின் ஒழுங்கமைப்பும் அங்கிகாரமும் கோயில் மூலமாகவே பெறப் பட்டு. இவர்களை இதற்குள் நன்றாகவே புகுத்தப்பட்டனர். கோயில் சுற்றாடலில் தேவரடியாளுக்கு தனியுரிமை இருந்தது. தேவரடியாளின் இறுதிச் சடங்குக்காகப் பூக்கள், சந்தனம், மாலை போன்ற வை கோயில் தெய்வ மூர்தத்திலிருந்தே அனுப்பப்பட்டன. கொள்ளி வைப்பதற்குரிய நெருப்பும் கோயில் மடப்பள்ளியிலிருந்து அனுப்பப்பட்டதோடு ஒரு நாள் துடக்கு கோயில் தெய்வத்தால் கடைப்பிடிக்கப்பட்டதோடு பூசைகளும் அன்று நிறுத்தப்பட்டன.

கோயில் வாசிகளான தேவரடியார் களுக்கென பிரத்தியேகமாக பல நடைமுறைகள் கடைபிடிக்கப்பட்டன.

இவர்களுக்குரித்தான,தங்குமிடம், கல்வி போன்ற வை பிரத்தியேகமாகவும் வரவேற்கத்தக்க முறை யிலும் நடைபெற்றன. மேலும் இவர்கள் உயர்சாதிக் குடும்பத்தினரால் வரவேற்று உபசரிக்கப்பட்டமையும் அங்கு நடைபெற்ற திருமண சடங்குகள் வைபவங்களுக்கு சென்று மணமக்களை ஆசீர்வதித்தல் திருமண வைபவங்களில் பாடுதல் என்பனவற்றில் ஈடுபட்டதாக ஆய்வாளர் கூறுகின்றார்.

விலக்கப்பட்ட பெண் அல்லது சமுதாயத்தில் இருந்து தூக்கி எறியப்பட்டவள் என்னும் குறை பாட்டு ரீதியான பரிணாமம் ஒன்று வரலாற்று ரீதியாக மாற்றத்துக்கு உட்பட்டது. சங்ககாலத்தில் அழகியல், கலை என்பவற்றோடு தொடர்புபட்ட இவர்கள், சுதந்திரமான பெண்களாகவும் காணப்பட்டனர். அதற்கு பிற்பட்ட காலத்தில் வெறுக்கப்பட்டு அவர்களது சாதிப்பெயராலேயே சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டனர். இதற்குப் பின்னர் கலாசாரக் குறியீடாக இவர்கள் மாறினர் கோயிலோடு சம்பந்தப்பட்வர்களாகவும் அரசியல் அதிகாரத்தின் கலாசாரக் குறியீடாகவும் இருந்தனர். குடும்பப் பெண்களுக்கு இருக்காத சில உரிமைகள் சுதந்திரங்கள் கூட இவர்களுக்கு காணப்பட்டது.

தாய்வழியுரிமைக்குரியவர்களாகவும், குழந்தை ஒன்றை இந்து முறைப்படி தத்தெடுத்து வளர்க்கும் உரிமை பெற்றவர்களாகவும் இருந்தார்கள். இவை இவர்களது விசேட அம்சமாக சுருதப்பட்டது. எனினும் இவர்களது இச் சுதந்திரமும், சமூகஅந்தஸ்தும் சோழ சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்குப் பின் நிலைகுலையச் செய்தது. இவை ஏற்பட்ட போது இவர்கள் ஆண்களைக் கவர்ந்திழுக்கும் தாசிகளாக மாறி தமது பழைய அந்தஸ்த்தை இழந்தனர். அடுத்து வந்த காலகட்டங்களில் அரச ஆதரவு இன்மையால் இவர்களது நிலை வீழ்ச்சியடைந்தது. வெறும் விபச்சார த்துக்குரியதாக மாற்றமடைந்தது. இவ்வமைப்பு முறை 1947ல் பிரித்தானியரின் வருகைக்கு பின்னர் சட்டரீதியாக அகற்றப்பட்டது.

-சுதர்ஷினி

ஆன்மீக ஜனநாயகத்தினை தமிழ்ச் சூழலுக்கு அறிமுகப்படுத்திய சுவாமி விபுலானந்தர்

தமிழர் அரசியலின் முதலாவது காலகட்டத்தில் யாழ்ப்பாணத்திற்கு வெளியே குறிப்பாக கிழக்கில் இன்னோர் சிந்தனையும் முக்கியத்துவம் பெற்று வந்திருக்கின்றது. இராமகிருஷ்ண மிஷனால் பரப்பப்பட்ட சிந்தனையே அதுவாகும். இச்சிந்தனையை சமூக மட்டத்தில் மிக உயர்ந்த அளவில் ஊடுருவி முன்னெடுத்த பெருமை சுவாமி விபுலானந்தரை சார்ந்ததாகும். இவர் மிஷனின் சிந்தனையை இலங்கைத் தமிழ்ச் சூழலுக்கேற்ப ஒருவகைத் தனித்துவத்துடன் முன்னெடுத்தார். இத் தனித்துவம் சில சந்தர்ப்பங்களில் மிஷனின் சுருத்துகளில் இருந்து கூட விலகிச் சென்றது.

இச் சிந்தனைகளையும் இலங்கைத் தமிழ்ச் சூழலில் அதன் பரம்பலையும், விளைவுகளையும் பார்ப்பதற்கு முன்னர் இந்தியாவில் இச் சிந்தனைகள் தோற்றம் பெற்று வளர்ந்து வந்த வரலாற்றினை பார்ப்பது அவசியமாகும்.

19ம் நூற்றாண்டு இந்தியாவில் ஆட்சி புரிந்த பிரித்தானியர்களால் இந்துப் பாரம் பரியத்திற்கு எதிராக பல சிந்தனைகள் கொண்டு வந்து அறிமுகப்படுத்தப்பட்டன. தாராண்மைவாத சிந்தனைகள் அதில் முக்கியமானதாகும். சட்டத்தின் முன் அனைவரும் சமன் என்ற சிந்தனைகள் அதிலிருந்து எழுந்து வந்தன. கல்கத்தா போன்ற இடங்களில் பலமாக இயங்கிய கிறிஸ்தவ மிஷனறிகள் இச் சிந்தனையைப் பரப்புவதில் முன்நின்றன. ஆட்சியாளர்களும், கிறிஸ்தவ மிஷனறிமாரும், இந்து மத பாரம் பரியத்தில் மிகப் பிற்போக்கான பக்கங்களை எள்ளி நகையாடினர். குறிப்பாக சாதிப் பாகுபாடு, அதனடிப்படையில் அமைந்த, படி நிலைக்கட்டுகளைக் கொண்ட சமூக அமைப்பு, உடன் கட்டை ஏறல், குழந்தை மணம், பலதார மணம், பிற்போக்கான கிரியைகளுடன் கூடிய விக்கிரக வழிபாடு போன்றன தாக்குதலுக்கு உள்ளாகின.

இந்த நிலையில் நவீன கருத்துக்களை, உள்வாங்கி புதிய சூழலுக்கேற்ப இந்து மதத்தினை மீளுருவாக்கம் செய்ய வேண்டிய தேவை இந்து மதம் தொடர்பான விளிப்பு நிலை பெற்றவர்களுக்கு உருவானது. இந்து மதத்தில் தாராண்மைவாதத்தினை உருவாக்க வேண்டிய கட்டாயம்.

இந்த மீளுருவாக்கச் சிந்தனையின், அடிப்படையில் தோன்றிய முதலாவது இயக்கமே ராஜாராம் மோகன்ராஜினால் (1774-1833) உருவாக்கப்பட்ட பிரம்ம சமாஜம் ஆகும். இது 1828ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20ம் திகதி வங்காளத்தில் உருவாக்கப்பட்டது.

1774இல் பிறந்து சிறு வயதிலேயே தாயாரை இழந்த ராஜராம் மோகன்ராய் தனது அண்ணியாரின் அரவணைப்பில் வாழ்ந்தவர். அவரது 11 வயதில் தமையன் இறக்கவே, தன்னை அரவணைத்திருந்த அண்ணியாரை இழுத்துச் சென்று தீயில் போட்டு எரித்ததை நேரடியாகவே கண்டார். அதன் தாக்கத்தில் வீட்டிலிருந்து வெளியேறிய பிரம்ம சமாஜத்தை உருவாக்கினார்.

பிரம்ம சமாஜத்தினூடாக உடன் கட்டை ஏறுதலைத் தடுத்தல், பலதார மணத்தினைத் தடுத்தல், கிரியை முறைகளுடன் கூடிய விக்கிர வழிபாட்டை நிராகரித்தல் போன்றன பிரச் சாரம் செய்யப்பட்டன. சாதிப் பாகுபாடு எதிர்க்கப்பட்டது. பொதுச் சமயக் கோட்பாடு முன்வைக்கப்பட்டது.

பிரம்ம சமாஜத்தை தொடர்ந்து 1867ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் திகதி பம்பாயில் ஆத்மராம் பாண்டுரங்கன் என்பவரினால் பிரார்த்தனை சமாஜம் உருவாக்கப்பட்டது. இந்து மதத்தினை மேலும் தராண்மைக்குட் படுத்தும் பணியில் இவ் அமைப்பு செயற்பட்டது. சாதி வேற்றுமைகளை ஒழித்தல், விதவைகளுக்கு மறுவாழ்வளித்தல், பெண்கள் கல்வி அபிவிருத்தியடையச் செய்தல், பால்ய விவாகத்தை தடைசெய்தல் போன்ற பணிகளை இவ் அமைப்பு முன்னெடுத்தது.

இதனைத் தொடர்ந்து சுவாமி தயானந்தரினால் (1824-1883) ஆரிய சமாஜம் 1875ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ம் திகதி பம்பாயில் தோற்றுவிக்கப்பட்டது. இதுவும் முன்னைய அமைப்புகளைப் போன்றே மகளிர் கல்வி அபிவிருத்தி, சாதிப்பாகுபாட்டு எதிர்ப்பு, பால்ய விவாக எதிர்ப்பு, சுதந்திரப் போராட் டத்திற்கு ஆதரவு என்பவற்றில் கவனத்தினைக் குவித்தது.

இவ்வாறான கருத்து நிலைகளை முன்னெடுப்புகளின் தொடர்ச்சியான ஒருவராகவே சுவாமி இராமகிருஷ்ணர் (1836-1886) முன்னணிக்கு வந்தார். வேதாந்தத்தின் அடிப்படையில், சமயப் பொதுமையினூடாக சிந்தனைப் போக்கினை கைக்கொள்வதன் மூலம் ஒரு மத முறைமையினை தன்னுடைய வாழ்க்கையினூடாக உருவாக்கினார்.

"நாங்கள் உலகத்தை மீட்பதற்குச் சேவை செய்தல் வேண்டும். கடவுளை எந்தச் சமயத்தினாலும் உணரலாம். எல்லாச் சமயங்களும் உண்மையானவை" என இராமகிருஷ்ணர் குறிப்பிட்டார்.

இராமகிருஷ்ணரின் பிரதான சீடராக வெளிவந்தவர் சுவாமி விவேகானந்தர். (1863-1902) ஆவார். கல்கத்தாவில் பிறந்த சுவாமி விவேகானந்தர் இராமகிருஷ்ணரால் நேரடியாகவே உபதேசிக்கப்பட்டவர். 1886இல் இராமகிருஷ்ணர் மரணமடைய அவரின்



சிந்தனைகளை முன்னெடுப்பதில் தீவிரமாக உழைத்தார். 1839ம் ஆண்டு மே மாதம் தனது 31வது வயதில் அமெரிக்கா சென்று சிக்காகோ சர்வ மத மாநாட்டில் பங்கு பற்றினார். அங்கு இந்து மதத்தின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தினார். மற்றைய மதங்களோடு எதிரில்லாமல் சடங்கு நிலைப்படாத இந்து மத கொள்கைகளை செயல் நிலைப்பாட்டுடன் வலியுறுத்துவதாக இவரது சிந்தனை அமைந்தது. இராமகிருஷ்ணர், இந்து மதத்தினுடைய உயிர்ப்பையும், அதற்கு தேவையான புதிய அனுபவங்களையும், வளங்களையும் வழங்குவது பற்றி ஒரு மத உணர்நிலையுடன் தன்னுடைய வாழ்க்கை யினூடாக முயற்சித்தார்.

மற்றைய மதங்களுக்கு எதிராக இல்லாமல் அந்த மத அனுபவங்களையும் உள்வாங்கி அடிப்படையில் வேதாந்த பாரம்பரியச் சைவ வேளாளரின் மேன்மையை உடைக்கக் கூடியது. அனைவரினதும் சமத்துவத்தை வலியுறுத்துவது, சாதிப் பாகுபாட்டைத் தகர்ப்பது என்பதாலேயே இக்கருத்துக்கள் ஊடுருவுவதற்கு அவர்கள் விடவில்லை.

வேதாந்தம் பற்றி சுவாமி விபுலானந்தர் பின்வருமாறு கூறுகின்றார். "வேதாந்தத்தில் ஜனநாயகத்தின் அடிப்படைகளை மனிதன் காண்கின்றான். பிரம்மம் மனிதனிலே உண்டு என்பதனால் சகல மக்களும் தெய்வங்களாகின் றனர். அல்லது தெய்வங்களாகின் ற வாய்ப்பினைப் பெறுகின்றனர். ஆற்றலைத் தம்முன்னே கொண்டவர்களாகின்றனர். இது சகல ஜீவராசிகளுக்கும் பொருந்தும். இது ஒரு ஆன்மீக ஜனநாயகத்திற்கான அடித்தளம்."

பேராசிரியர் கா. சிவத்தம்பி "அடக்கமைவுச் சமூகத்தில் நடைமுறையில் கிடைக்காத ஓர் ஆன்மீக ஜனநாயகத்தை வேதாந்தம் கருத்தளவில் ஒப்புக் கொள் கின்றது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் மிஷனறியால் உருவாக்கப் பட்ட வைத்தீஸ்வராக் கல்லூரியால் நாவலர் வாரிசுகளால் உருவாக்கப்பட்ட இந்து கல்லூரிகளின் மேன்மையையும் உடைக்க முடியவில்லை. அது சாதித்தது யாழ் முஸ்லிம் வட்டாரத்தில் உள்ள முஸ்லீம் மாணவர்களும், வைத்தீஸ்வராக் கல்லூரியை சுற்றி வர இருந்த இந்திய வம்சாவழி மாணவர்களும் ஆங்கில மொழி மூலக் கல்வியை கற்பதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுத்தது மட்டும் தான்.

கிழக்கில் மிஷனின் பணிகள் பரந்தளவில் விரிந்து சென்றன. இதற்கு பிரதான காரணம் நாவலரினால் சமஸ்கிருதமயப்படுத்தப்பட்ட சைவ சித்தாந்தத்தின் பிடிக்குள் கிழக்கு அகப்படாமையே! கிழக்கில் திருக்கோணமலை இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு சிவானந்த கல்லூரி, சிவபுரி குழந்தைகள் இல்லம், காரை தீவு சாரதா வித்தியாலயம் என்பன மிஷனால் உருவாக்கப்பட்டன.

கிழக்கில் மிஷனின் வளர்ச்சியிலும், கல்வி அபிவிருத்தியிலும் சுவாமி விபுலானந்தர் (1892-1947) பங்கு முக்கியமானது. உண்மையில் இலங்கைத் தமிழ்ச் சூழலில் தாக்கம் செலுத்திய

தொடர்ச்சி 17ம் பக்கம்

மத்தியிலும் கல்வி அபிவிருத்தி, பாடசாலைகள் உருவாக்குதல், அநாதை விடுதிகள் உருவாக்கல், வேலைத்தளங்கள், ஆய்வு கூடங்கள் உருவாக்குதல், வைத்திய சாலைகளை உருவாக்குதல், சஞ்சிகைகளை வெளியிடுதல் போன்ற பணிகள் முன்னெடுக் கப்பட்டன.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் இராமகிருஷ்ண மிஷன் கிளைகள் இலங்கையிலும் உருவாக்கப்பட்டன.

கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோண மலை, மட்டக்களப்பு என அதன் பணிகள் விரிவாக்கம் செய்யப்பட்டன. இதனால் முதன் முதலாக உருவாக்கப்பட்ட பாடசாலை வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியாகும்.

யாழ். குடா நாட்டில் நாவலரினால் உருவாக்கப்பட்ட சமஸ்கிருதமயமாக்கலும், சைவ சித்தாந்த மேன்மையும் பலமான அடித்தளத்துடன் இருந்ததால் இராமகிருஷ்ண மிஷனின் வேதாந்த சிந்தனைகள் யாழ். சமூகத்தில் ஊடுருவ முடியவில்லை. குறிப் பாகச் சொல்லப் போனால் ஊடுருவுவதற்கு யாழ்ப்பாணத்தில் நாவலர் மரபு வழி வந்தவர்களும், அவர்களைப் பேணுகின்ற யாழ். சைவ உயர் வேளாளரும் விடவில்லை. மிஷனின் வேதாந்தக் கருத்து குடா நாட்டில்

தமிழ்த் தேசிய அரசியல் அன்றிலிருந்து இன்று வரை

அரசியல் தொடர் 24

- ஆதிசங்கரர்-

வருந்துகின்றேன்

இந்த அரசியல் தொடரை எழுதுவதற்கு பலரின் நூல்களும் கட்டுரைகளும் உசாத்துணைக்கு எடுக்கப்பட்டுள்ளன. பேராசிரியர் கா. சிவத்தம்பி, அ. மார்க்ஸ், பீ.ஏ. காதர், உ.நவரத்தினம், வை. கனகரத்தினம், க. சி. குலரட்ணம், குமாரி ஜெயவர்த்தன, அம்பலவாணர்- சிவராஜா கலாநிதி வி. வித்தியானந்தன் எனப் பலரின் எழுத்துக்கள் அடங்கும். அந்தவரிசையில் சென்ற மூன்று இதழ்களுக்கு நண்பரும், பத்திரிகையாளருமான டி.சிவராமின் சரிநிகரில் வெளிவந்த "இலங்கைத் தமிழ்த் தேசியவாதத்தின் ஆரம்பம் நாவலர் அல்ல" என்ற கட்டுரையிலிருந்து தகவல்கள் எடுக்கப்பட்டன. குறிப்பாக திராவிட கோகிலா, இந்து சாதனம் பாலச்சந்திரன், திராவிட மித்திரன் போன்ற பத்திரிகையில் வந்த தகவல் அக்கட்டுரையிலிருந்தே எடுக்கப்பட்டன. இது ஒரு தொடர் கட்டுரையாக உள்ளமையினால் கட்டுரையின் முடிவிலேயே உசாத்துணைப் பட்டியலைக் கொடுப்பதாக இருந்திருந்தேன்.

ஆனால் நண்பர் சிவராமிற்கு தனது கட்டுரையில் இருந்து எடுக்கப்பட்டமையை குறிப்பிடாதது மிகுந்த கவலையை அளித்துள்ளதாகவே அறிகின்றேன். அவருக்கு கவலையை உருவாக்கியமைக்காக அவரிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கின்றேன்.

இனிமேல் அந்தந்த இதழ்களிலேயே தகவல்களை எடுத்த நூல்கள், கட்டுரைகளை குறிப்பிடலாம் என்று இருக்கின்றேன்.

எந்த ஒருவரின் புலமைப் பங்களிப்பினையும் மறுதலிக்கும் நோக்கம் எனக்கு கிடையாது. இத் தொடருக்கு கூட முழுமையாக உரிமை கொண்டாட நான் விரும்பவில்லை.

என்னுடைய பங்களிப்பு இத் தொடரில் பலருடைய புலமைப் பங்களிப்புகளை ஒரு இலக்கு நோக்கி நகர்த்தியமை மட்டுமே!

விமர்சனம்

தலித் மக்களின் வாழ்வியலையும் உணர்வையும் சொல்லும் "காவியத்தின் மறுபக்கம்"

ஈழத்து தமிழ் இலக்கியப் பரப்பில் தமக்கென தனித்துவமான நிலப்பதிவுகளை ஏற்படுத்திக் கொண்டவர். நாவலாசிரியர் செ.யோகநாதன் அவர்கள். அவரால் எழுதப்பட்ட குறுநாவல் "காவியத்தின் மறுபக்கம்" (1974) ஆசிரியரின் பிறிதொரு நாவலான "தஞ்சம் புகுந்தவர்கள்" (1999) என்ற நாவலில் வரும் பிரதான பாத்திரமான கமலா என்ற பெண் தன் மீது காதல் கொள்ளும் வினோதனுக்கு காவியத்தின் மறுப்பக்கம்- என்ற குறுநாவலை வாசிக்க கொடுக்கின்றான். இதனூடாக இக் குறுநாவல் மேற்குறித்த நாவலிலும் இடம் பெறுகின்றது.

காவியத்தின் மறுபக்கம் என்ற இந்நாவலைப் படித்துக் கொண்டிருந்த போது என் மனம் பல ஆண்டுகள் பின் சென்று நாவலிலக்கியத்தின் தோற்றம், தலித் மக்களின் வாழ்வியலும், உணர்வுகளும், நாவலாகச் சித்திரிக்கும் மாற்றத்தைப் பற்றியும், வரலாற்று முறையில் சிந்திக்க வாய்ப்பளித்ததை உணர்கின்றேன்.

புனைகதை இலக்கியத்தின் தோற்றம் குறித்துப் பேராசிரியர் கா. சிவத்தம்பி தமது ஆய்வில் "ஒவ்வொரு இலக்கிய வகையில் தோற்றத்துக்கும், சமுதாய வரலாற்றுக்கும், நெருங்கிய தொடர்புண்டு. வீரப் பாடல்கள், காவியங்கள் போன்றன ஒவ்வொன்றும், ஒவ்வொரு காலச் சமுதாய அமைப்பினடியாகவே தோன்றின. என்பது இலக்கிய வரலாற்றாசிரியர் யாவருக்கும் ஒப்ப முடிந்த முடிவாகும்.

சிறுகதை, நாவல் ஆகிய இலக்கிய வடிவங்களையும், தன்னுள்ளடக்கி நிற்கும், புனைகதை (FICTION) என்னும் இலக்கிய வகை, ஐரோப்பாவில் அங்கு நிலவிய நிலப் பிரபுத்துவ சமுதாய மைப்பில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவே தோன்றியது என்பர். நிலப்பிரபுத்துவ அமைப்பு மாற்றத்தினால் தோன்றிய மத்தியதர வர்க்கத்தின் அமைப்பு மாற்றத்தினால் தோன்றிய மத்தியதர வர்க்கத்தின் இலக்கிய குரலே புனை கதை என்பதில் எத்தகைய கருத்து வேறுபாடும் கிடையாது என்பர்- எனக் குறிப்பிடுகின்றார்.

புனை கதை இலக்கியமானது மேனாட்டுச் சிந்தனை மரபுகளிலிருந்து எம்மை வந்தடைந்த ஒன்று என்ற போதிலும், அவை நமது சூழலுக்கும், பண்பாட்டுக்கும் ஏற்ப பல தனித்துவ அம்சங்களையும் பெற்று புதியதோர் வடிவமாக திகழ்கின்றது.

இவ்வகையிற் புனைகதை இலக்கியங்களில் ஒன்றான குறுநாவல் குறித்து நோக்குகின்ற போது, "வாழ்வின் ஏதோ ஒரு மையத்தில் கருக்கொண்டு, வெடித்து சிதறுவதன் மூலம் வாழ்க்கைப் பற்றிய தரிசனத்தைத் தருவதாக அமையும் எனலாம். வசதி நிறைந்தவர்களின் காதல் மயக்கம், ஏழைகளைப் படுத்தும் கொடூரத்தைச் சித்திரித்துக் காட்டும். காவியத்தின் மறுபக்கம் என்ற நாவலின் அமைப்பு, பாத்திரப் படைப்பு, கதையோட்டம், என்பவற்றுடன், இரு வேறுபட்ட அந்தஸ்தை, சாதியை உடையவர்களின் காதலை அடிப்படையாக கொண்டு ஏழ்மைப்பட்டு போன தலித் மக்களின் வாழ்க்கையை எடுத்துக் காட்டும் ஒருமைத் தன்மை என்பன குறுநாவலுக்குரிய பண்பினையே உணர்த்தி நிற்கின்றன.

இந்நாவலின் முக்கியத்துவத்தினை நோக்குவதற்கு முன்னர், யாழ்ப்பாண சாதியமைப்பு, அவை நாவலாக்கப்பட்ட பண்புகள், என்பன குறித்துத் தெளிதல் அவசியமானதாகும்.

ஏறத்தாழ 10ம் நூற்றாண்டளவில் தமது அடிமை, குடிமைகளுடன் யாழ்ப்பாணத்தில் வந்து குடியேறிய வேளார்கள், தனி இராஜ்யத்தையே அமைத்து ஆளத் தொடங்கினார்கள். தமிழகத்தில் இறுக்கமடைந்திருந்த சாதியமைப்பானது யாழ்ப்பாண சூழலுக்கும், பண்பாட்டுக்கும் ஏற்ப புதிய பரிமாணத்தை எட்டியது. இங்கு இந்து மதச் செல்வாக்குக் காரணமாக வர்ண வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும், பிராமணர்கள் மத விடயங்களிலும், அவை தொடர்பான சடங்கு முறைகளை மேற்கொள்வதிலுமே முக்கியமான வர்களாக காணப்பட்டனர். வேளாளரே பொருளாதார முக்கியத்துவம் மிக்கவர்களாக காணப்பட்டதுடன், அடக்கி ஆளும் வர்க்கமாகவும் திகழ்ந்தனர். தமக்கு கீழிருந்த தாழ்த்தப்பட்ட மக்களை அடிமை கொண்டதுடன், அவர்களின் உழைப்பை சுரண்டிக் கொடுத்தவர்களாகவும். தமக்கு தேவையான அடிமை. குடிமைகளை தென்னகத்திலிருந்து பெறக் கூடிய வலிமையும், பொருளாதார பலமும் படைத்தவர்களாகவும் காணப்

லெனின் மதிவானம்

பட்டனர். அவ்வகையில் அடக்கி யொடுக்கப்பட்ட மக்களின் எதிர்ப்புணர்வுகளும், கலகங்களும், ஆங்காங்கே சூல் கொண்டு வெடித் தெழுந்த போதிலும், 1960களில் தான் அவை ஓர் வெகுசன இயக்கப் போராட்டமாக முகிழ்ந்தது. தாழ்த்தப்பட்ட மக்கள் தாங்களும், மனிதப் பிறவிகள் தான் என்ற உணர்வுப் பெற்றதுடன், தமக்குரிய சாதாரண உரிமைகளையாவது பெறக் கூடியதாக அமைந்திருந்தது.

தலித் மக்களின் உணர்வுகளும், வாழ்வியலும் வெவ்வேறு அளவில், வெவ்வேறு நிலைப்பாடுகளில் நாவலாக்கப்பட்டுள்ளன. அதைக் குறித்து நோக்கத் தலைப்படுவோம்.

இடைக்காட்டார் எழுதிய நீலகண்டன் ஒரு சாதி வேளாளன் (1925) என்ற நாவல், வேளாள சாதி ஆணுக்கும், தாழ்ந்த சாதிப் பெண்ணுக்கும் பிறக்கின்ற நீலகண்டன், தனது தந்தையின் சொத்துக்களை அடைய முடியாத நிலையேற்படுகின்றது. பின்னர் சகல இடையூறுகளை வென்று நீலகண்டன் வெற்றி கொள்வதாக நாவல் அமைந்து காணப்படுகின்றது.

கலப்பு மணத்தால் அல்லது கலப்பு உறவால் பிறக்கின்ற குழந்தை என்ற சாதி? தந்தையின் சாதியை குறிக்க வேண்டும் என்கின்றது விதிமுறை. இவ்வம்சம் ஆணாதிக்கத்தை மட்டுமன்றி சாதிய ஆதிக்கமிக்க சமூகத்தன்மையையும் குறிப்பதாக அமைகின்றது. இந்த பின்னணியிலே தான் மேற்குறித்த நாவல் தோன்றியிருக்கின்றது. யாழ்பாண சாதியப் பிரச்சினை தொடர்பாக தோன்றிய முதல் நாவல் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கு மறுபுறமாக கலப்பு திருமணம், தாழ்ந்த சாதியினருடனான சமபந்தி போஜனம், தேனீர் அருந்துதல் போன்ற மனிதாபிமான முயற்சிகளின் ஊடாக சாதியப்பிரச்சினையை தீர்த்து விடலாம் என்ற சிந்தனையுடன் நாவல் எழுதினார்கள். எடுத்துக் காட்டாக சொக்கனின் சீதா (1963), செங்கை ஆழியானின் பிரளயம் (1975) தி. ஞானசேகரனின் புதிய சுவடுகள் (1977) ஆகிய நாவல்களை குறிப்பிடலாம். சமூக நிலைப்பேறடைந்துள்ள சாதிய [illegible]ப்பை, அதனுடன் தொடர்புபட்டுள்ள உற்பத்தியமைப்பினதும், தாற்பரியங்களை விஞ்ஞான அடிப்படையில் ஆராய்ந்து பார்க்கும் சிந்தனையற்றவர்களான இந்நாவலாசிரியர்கள், வெறுமனே முரண்பாட்டின் வெளிதோற்றத்தை மட்டும் கண்டு, அதனை மனமாற்றத்தால் தீர்த்து விடலாம் என எண்ணினர். இப்பார்வை இவர்களை "தீமையை எதிர்த்து போராடாதே" என்ற தத்துவப் போதனைக்கு இட்டு சென்றது.

இந்நிலையில் தான் மூன்றாவது பிரிவின் முக்கியத்துவம்மிக்கவர்களாக காணப்படுகின்றனர். சாதியப் பிரச்சினையை வெறுமனே கலாச்சாரப் பிரச்சினையாக மட்டும் நோக்காமல், சமுதாயப் பிரச்சினையாகவும், பொருளாதார பிரச்சினையாகவும் நோக்கினர். இத்தகைய சிந்தனைப் போக்கின் முன்முயற்சியாக அமைவது சுபைர் இளங்கீரனின் "தென்றலும், புயலும்" (1995) என்ற நாவலாகும். தொடர்ந்து செ. கணேசலிங்கனின், நீண்டப் பயணம், போர்க்கோலம், சடங்கு, மண்ணும் மக்களும் முதலிய நாவல்களையும், டானியலின் "இருளின் கதிர்கள்" என்ற குறுநாவல் தவிர்ந்த அனைத்து நாவல்களையும் இப்போக்கிற்கு உதாரணமாக குறிப்பிடலாம். சமுதாய அமைப்பில் சாதியப் பாகுபாடு எவ்வாறெல்லாம் பிரச்சினைகளாக இருக்கின்றது என்பதனை இந்நாவல்கள் மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன. இந்நாவல்களிடையே அரசியல் வேகம், தெளிவு, கலைநயம் என்பன பற்றிய ஏற்றத்தாழ்வுகள் உண்டு என்ற போதிலும் சமுதாய சக்திகளை கூட்டாக எடுத்துக் காட்டுவதிலும், அர்சியலை முதன்மைபடுத்துவதிலும் முக்கியத்துவமிக்கவையாக காணப்படுகின்றன. அவ்வகையில் "காவியத்தின் மறுபக்கம்" என்ற குறுநாவலும் இப்பட்டியலில் சேர்க்க கூடியதாக உள்ளது எனலாம். இம்முடிவு எந்தளவு பொருத்தப்பாடுடையது என்பது சுவாரசியமான வினாவாகும்.

இரு முரண்பட்ட மனிதர்களின் வாழ்க்கை முறையினை கமலா என்ற பாத்திரத்தின் எண்ணவோட்டத்தின் மூலமாக பின்வருமாறு வெளிப்படுத்துகின்றார் நாவலாசிரியர்.

"அவனோடு செல்கின்ற வேளையில் மனம் தனியனாகிற போதிலே பாலசிங்கம் அவளின் மனத்தோடு வந்தான்.... அந்த கனிவான முகம் அவனது வாஞ்சையான குரல் வாழ்வானது காதலினாலே தான் இன்பக் காவியமாகிறது. அந்த இனிய காவியத்திற்காக எந்த வித்தியாசங்களையும், வேறுபாடுகளையும் தள்ளி விடுவோம் என்ற அவனது எழுத்து... ஆனால் பாலசிங்கம் அவளிற்கு எதைக் கொடுத்தான்? சாணிக் கும்பம், திண்ணை, பன்பாய், பற்றைகள், ஒரு நாள் தன்னும் நிம்மதியில்லாத வாழ்வு... பாலசிங்கத்தை இனியும் நினைக்க கூடாது எனக் கமலம் நினைத்தாள். தன் அத்தான் கேஷூடன் இருக்கிற போது அவள் ஒரு உண்மையை தான் அறிந்ததாக நினைத்தான். அவனது ஆசைகள், கனவுகளெல்லாம் கேஷிடம் உண்டென்பது தான் அது. ஏதோ ஒரு மயக்கத்திலே தான் பாலசிங்கத்தை அவள் விரும்பி விட்டாள். அவன் குறைந்த சாதி, ஏழை, அவளோடு எந்த வாதத்திலும் சமமாக முடியாதவன். அவனும், அவளும் இணைவது சரியில்லை என்ற முடிவு அவள் நெஞ்சிலே அரும்பி விட்டது"

இவ்வரிகள் உணர்த்துவது எதனை? காதல் தெய்வீகமானது அது சாதி, வர்க்க வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது என சிலர் தத்துவம் பேசினாலும், கூர்ந்து நோக்கின், அவை மனிதர்களது வர்க்க, சாதி நிலைப்பாடுகளுக்கும் ஏற்பவே அமைந்திருப்பதை அறியலாம். யாழ்பாண சமூக அமைப்பில் உள்ள பல வர்க்கங்களினதும், சாதியினதும், புறவியல்புகளையும், மனவியல்புகளையும் நாவலாசிரியர் மிகத் தெளிவாக உணர்ந்திருந்தமையாலேயே இத்தகைய யதார்த்தப் பின்னணியோடு இந்நாவலினை எழுதமுடிந்துள்ளது எனலாம்.

தொடர்ச்சி 17ம் பக்கம்

வீரப்பன் வேட்டையில் அதிரடிப்படை

கர்நாடக அரசு அவசர நடவடிக்கை!

ராஜ்குமார் விடுவிக்கப்பட்ட கையோடு கர்நாடக மாநில விஷேட பொலிஸ் குழு ஒன்று வீரப்பன் மறைந்துள்ள சத்தியமங்களம் காட்டுப் பகுதியில் மாபெரியளவிலான தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கின்றது. ராஜ்குமார் விடுதலை செய்யப்படும் வரையில் மௌனமாக இருந்த கர்நாடக அரசு, இப்போது அவசரமாக வீரப்பனைப் பிடிக்கும் முயற்சியில் தனது அதிரடிப் படையை ஏவிவிட்டிருக்கின்றது. வீரப்பனைப் பிடிப்பதற்காக படைப் பலத்தைப் பயன்படுத்துவதென்ற முடிவு அரசியலில் பலத்த சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ள போதிலும், கர்நாடக அரசுக்கு இன்றைய நிலையில் இதனைவிட வேறு வழியில்லை என்பது தான் உண்மை. ராஜ்குமார் விவகாரத்தில் கர்நாடக அரசுக்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைக்கும் நோக்கத்துடனேயே இப்போது படையினரை கர்நாடக அரசு ஏவிவிட்டுள்ளது என்பதில் சந்தேகமில்லை.

இப்பிரச்சினையில் தனித்து இறங்குவது ஆபத்தானது என்பது கர்நாடக அரசுக்கும் புரிந்தது தான். அதனால் தான் இது தமிழக அரசுடன் இணைந்த ஒரு நடவடிக்கை என கர்நாடக அரசு அறிவித் திருக்கின்றது. தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியைப் பொறுத்தவரையில் கூட, கர்நாடக அரசின் கோரிக்கையை மறுக்க முடியாத நிலையில் அவர் இருக்கின்றார். படை நடவடிக்கையை நாடக் கூடாது என தமிழ்த் தேசியவாத, தமிழக அரசியல் அமைப்புக்கள் பலவும் கோரிக்கை விடுத்து வருகின்ற போதிலும், வீரப்பனை வளர விடுவது தனது அரசியலுக்கும் ஆபத்தானது என்பதைக் கருணாநிதியும் எச்சரிக்கை உணர்வுடன் புரிந்துகொண் டுள்ளதாகவே தெரிகின்றது. அதனால் தான் வீரப்பனுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு கருணாநிதி மறைமுகமாகப் பச்சைக்கொடி காட்டியிருக் கின்றார்.

காட்டுப் பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ள விஷேட பொலிஸ் குழுவுக்கு கர்நாடகத்தில் பிரபலமான பொலிஸ் அதிகாரி சாங்கிலியானா பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டி ருக்கின்றார். சாங்கிலியானா தனது பொலிஸ் பணி மூலம் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கைப் பெற்றவர். இவரை மையமாக வைத்தே செல்வாக்கை வெளிப்படுத்தப்

இந்திய உபகண்ட அரங்கிலிருந்து

போதுமானது. வீரப்பன் வேட்டையில் தனது செல்வாக்கை இவர் மேலும் ஒரு படி உயர்த்திக்கொள்வார் என கர்நாடக மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். ராஜ்குமார் கடத்தப் பட்டதால் ஏற்பட்டுள்ள அவமானத்தைக் கழுவிக் கொள்வதற்கு இது கர்நாடக அரசுக்கு தவிர்க்க முடியாத தேவையாகி விட்டது.

இப்பிரச்சினை தொடர்பாக செவ்வாய்க் கிழமை மாநில முதல்வர் கிருஷ்ணா சட்ட சபையில் உரையாற்றினார். தனது உரை யில் அவர் தெரிவித்த தகவல்கள் இந்தக் கடத்தல் நாடகத்தால் அவர் எந்தளவுக்கு குழம்பி போயிருக்கின்றார் என்பதைத் தெளிவாகவே உணர்த்தியிருக்கின்றது. "கர்நாடகத்தில் செயற்படும் தீய சக்திகளை ஒடுக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்படும். நாட்டுக்கோ மாநிலத்துக்கோ சட்டம் ஒழுங்கை பாதிக்கும் தீய சக்திகள் கர்நாடக மாநிலத்திலிருந்தாலும் சரி பெங்களூரில் இருந்தாலும் சரி இரும்புக் கரம் கொண்டு அடக்குவோம்" எனக் குறிப்பிட்டார் கர்நாடக முதல்வர் கிருஷ்ணா.

ராஜ்குமாரை மீட்கும் முயற்சியில் ஈடுபட்ட நக்கீரன் கோபால் உள்ளிட்ட அனைவரது பெயரையும் குறிப்பிட்டு நன்றி தெரிவித்த கர்நாடக முதல்வர், இந்த முயற்சியில் இறுதிவரையில் பாடுபட்ட - முக்கிய பங்களிப்பைச் செய்த தமிழ்த் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறனின் பெயரை இறுதி வரையில் குறிப்பிடவில்லை. நெடுமாறன் தீவிரமான ஒரு தமிழ்த் தேசியவாதி என்ற காழ்ப்புணர்ச்சியுடன் கர்நாடக முதல்வர் செயற்பட்டுள்ளார் என்றே நெடுமாறனின் விசுவாசிகள் கருதுகின்றார்கள்.

ராஜ்குமார் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழக- கர்நாடக அரசுகளின் அடுத்த கட்ட நடவடிக்கையாக என்ன இருக்கும் என்ற கேள்விக்குப் பதிலளிப் பதாகவே கர்நாடக அரசின் படை நடவடிக்கை அமைந்திருக்கின்றது. வீரப் பனைப் பிடிப்பதற்காக பல முறை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் தோல்வி யடைந்துள்ள நிலையில், வீரப்பன் பலமாகவுள்ள இன்றைய நிலையில் படைநடவடிக்கைகள் எந்தளவுக்கு வெற்றியளிக்கும் என்பதும் கேள்விக் குறியாகவே இருக்கின்றது. ஜெயலலிதாவின் ஆட்சிக்காலத்தில் தேவாரம் தலைமையில் வீரப்பனைக் கைது செய்வதற்காக அனுப்பப் பட்ட பொலிஸ் படை, அவனது ஆதர வாளர்களுடன் இருபத்தெட்டுத் தடவை மோதியது. ஆனால் வீரப்பனைப் பிடிக்க முடியவில்லை. ஆனால் அவனைப் பலவீனப்படுத்த முடிந்தது.

சத்தியமங்களம் காட்டுப்பகுதியில் வீரப்பனுக்கு பழங்குடி மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கு இருக்கின்றது. அத்துடன் இரண்டு தீவிரவாத தமிழ்த் தேசிய இயக்கங்களையும் தன்னுடன் இணைத்துக் கொண்டு, ஒரு தமிழ்த் தேசியவாதப் போராளியாக வீரப்பன் இப்போது தன்னை வெளிப்படுத்தியிருக்கின்றான். இந்த நிலையில் அவனது பாதுகாப்பும் மக்கள் மத்தியிலான செல்வாக்கும் அதிகரித்திருக்கின்றது என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். அதாவது அவனது "பலம்" இப்போது அதிகரித்திருக் கின்றது. இந்த நிலையில் அதிரடிப்படையி னரால் குறிப்பிட்ட காட்டுப் பகுதிக்குள் பிரவேசிப்பது என்பதோ தாக்குதலை நடத்தி வீரப்பனைப் பிடிப்பது என்பதோ சாத்தியமாகப் போவதில்லை. வெறுமனே ராஜ்குமார் கடத்தலால் அரசியல் ரீதியாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்களைப் பூசிமெழு குவதற்கு இது உதவலாம்.

இந்த நிலையில் ராஜ்குமார் கடத்தல் ஏற்படுத்தியுள்ள அரசியல் விளைவுகள் என்ன என்பதைப் பார்ப்போம்.

இந்தக் கடத்தல் நாடகம் அரசியல் மயமானதற்கு வீரப்பன் முன்வைத்த கோரிக்கைகள் தான் பிரதான காரணம். தமிழ்த் தேசியவாதத்தை முன்னெடுக்கும் ஒருவராக வீரப்பனை இக்கடத்தல் நாடகம் தான் மாற்றியது. தனித் தமிழ் நாட்டைக் கோரிப் போராடும் அமைப்புகளுடன் வீரப்பனுக்குள்ள தொடர்புகள் இதன் மூலம் வெளிப்பட்டதும், வீரப்பன் முன்வைத்த கோரிக்கைகளும் தான் அவனை ஒரு தமிழ்த் தேசியவாதியாக வெளிப் படுத்தியது. அரசியல் ரீதியில் ஒரு தாக்கத்தை இச்சம்பவம் ஏற்படுத்துவதற்கும் இது தான் முக்கிய காரணம். ஆனால் கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப் படாமலேயே ராஜ்குமார் விடுவிக்கப்பட்டிருப்பது வீரப் பனுக்கு ஒரு தோல்வியா?

இக்கேள்விக்கான பதிலைப் பார்ப் பதற்கு முன்னர் ராஜ்குமார் விடுதலைக்காக நெடுமாறன் நடத்திய "பேரம்" என்ன என்பதைப் பார்ப்போம். பத்திரிகையாளர் ஒருவர் இதுபற்றிக் கேட்டபோது நெடு மாறன் இப்படிக் கூறினார்-

"பேரம் என்ற வார்த்தை பொருத்த மற்றது. இது ஒரு வணிக ரீதியான பேரமல்ல. மனித உயிர் சம்பந்தப்பட்ட பிரச்சினை. மனித நேய அடிப்படையில் நாங்கள் வீரப்பனை அணுகினோம். இதில் ராஜ்குமார் மற்றும் அவருடன் இருந்த பணயக் கைதிகள் அனைவருக்கும் கடந்த 108 நாட்களாக எவ்வித கொடுமைகளையும் வீரப்பன் நிகழ்த்தவில்லை. காட்டுக்குள் அவர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டிய அதிக பட்ச வசதிகளையும் செய்து கொடுத்துள்ளார்கள். மனித நேய அடிப்படையில் நாங்கள் நடத்திய பேச்சுவார்த்தைகளில் பிரச்சினைக்கான தீர்வுகளைச் சுட்டிக்காட்டியபோது, சில சோரிக்கைகள் தீர்க்கப்படும் என்பதையும், மற்றும் சில கோரிக்கைகளில் சட்ட ரீதியாகவுள்ள பிரச்சினைகளையும் நாங்கள் சுட்டிக்காட்டினோம். சட்டச் சிக்கல்களுக்கு நாங்கள் தார்மீகப் பொறுப்பேற்க வேண்டும் என வீரப்பன் கூறியதை நாங்கள் ஏற்றுக் கொண்டு, தமிழகத்திலுள்ள ஏழு தடா கைதிகள் மற்றும், கர்நாடகத்திலுள்ள 51 தடா கைதிகளையும் விடுதலை செய்ய சட்ட ரீதியாகச் செய்ய வேண்டிய முயற்சிகளைச் செய்கின்றோம் என ஒப்புதல் அளித்ததன் அடிப்படையில் நடிகர் ராஜ்குமாரை வீரப்பன் விடுதலை செய்தார்." இவ்வாறு நெடுமாறன் கூறியிருக்கின்றார்.

வீரப்பனின் கோரிக்கைகளை நிறை வேற்றுவதாக வாக்குறுதியளித்து ராஜ் குமாரை நெடுமாறன் மீட்டு வந்துள்ள நிலையில் அதிரடிப்படையினர் ஏவிவிடப் பட்டிருப்பது நிலைமைகளைச் சீர்குலைப் பதாகவே இருக்கும். இன்னொரு

ரதன்

வகையில் சொல்வதானால், வீரப்பனின் கோரிக்கைகளுக்கான பதிலாக மாநில அர சுகள் படைநடவடிக்கையையே நாடியுள்ளன. இது அரசுகள் மீதான வீரப்பனின் நம்பிக்கையீனத்தை மேலும் அதிகரிக்கும். மற்றொரு கடத்தலை வீரப்பன் மேற் கொண்டால் நிலைமைகள் மோசமாகலாம். வீரப்பனின் கோரிக்கைகளுக்காக எந்தளவுக்கும் இறங்கிவரத் தயாராக இருந்த இரு மாநில அரசுகளையும் பொறுத்த வரையில் தமது "வீரத்தை"க் காட்டுவதற்கு இதுதான் பொருத்தமான தருணம் எனக் கருதுகின்றன. இது வீரப்பனைச் சீண்டிவிடக் கூடியது என்பதும் இவர்களுக்குத் தெரிந்தது தான்.

ஆனால் வீரப்பனும் அவனுக்குத் துணையாக உள்ள தமிழ்த் தேசியவாத அமைப்புக்களும் தமது கோரிக்கைகளில் உறுதியாகவுள்ளன. ராஜ்குமார் விடுவிக்கப் பட்ட போது, வீரப்பன் மற்றும் தமிழ்நாடு விடுதலைப் படை மாறன், தமிழ்த் தேச மீட்சிப் படை அமுதன் ஆகியோரால் கையொப்பமிடப்பட்டு வெளியிடப்பட்ட அறிக்கை இதனை உறுதிப்படுத்துகின்றது. இந்த அறிக்கையில் காணப்படும் விபரங்கள் தமிழக அரசியலில் இப்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. ராஜ்குமாரை தாம் "கைது" செய்தமைக் கான காரணத்தை அவர்கள் அதில் விளக்கியுள் ளார்கள்.

"... தமிழ் மக்களின் பண்பாட்டையும் மொழியையும் மண்ணையும் மாற்றான் கொள்ளையிட்டு சீரழித்துக் கொண்டிருப் பதைத் தெரிந்திருந்தும் தமிழகத்தை மாறிமாறி ஆட்சி செய்து கொண்டிருக்கும் தமிழக அரசுகள் கண்டுகொண்டதே இல்லை. இதனைத் தடுத்து நிறுத்தும் முகமாக பல்வேறு தமிழ் சார்பு அமைப்புக்களும் ஜனநாயக ரீதியில் நின்று போராடினாலும் அதனை இவ்வரசு இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குவதோடு, இச்செய்தி மக்களிடம் பரவாமலிருக்க நெருக்கடியை ஏற்படுத்தி மக்களின் உரிமைக்குரல் நீர்த்துப் போகச் செய்கின்றது.

இந்த நெருக்கடிகளுக்குப் பயந்தே தமிழர் தனக்கான மண்ணை ஆந்திர, கேரள, கன்னட வெறியர்களின் அபகரிப்புக்கு விட்டுக்கொடுத்தனர். இன்றும் தமிழர்களின் மொழியையும் பண்பாட்டையும் சிதைத்து, தமிழன் என்றொரு இனமே இல்லாத நிலையை ஏற்படுத்திவிட தமிழ்ப் பகைவர்கள் மறைமுகமாகச் செயற்படுகின் றனர். இவற்றிலிருந்து மீட்கும் நடவடிக்கையைத் தான் தமிழ்நாடு விடுதலைப் படையும், தமிழ்த் தேச மீட்புப் படையும் தங்களது போராட்டப் பயணமாக மேற்கொண்டுள்ளன" எனத் தெரிவித்துள்ள இவர்கள், இதற்காக மக்களது கவனத்தைக் கவரும் நோக்கத்துடனேயே ராஜ்குமார் "கைது" செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். இந்த அறிவிப்பு தமிழக மக்கள் மத்தியில் கடத்தலை நியாயப்படுத்து வதற்கு உதவக் கூடிய ஒரு தந்திரோபாயம்.

இந்த நிலையில் வீரப்பன் எடுத்துள்ள நிலைப்பாடும், அவன் அமைத்துள்ள கூட்டணியும் தமிழக கர்நாடக அரசுகளுக்கு மட்டுமன்றி மத்திய அரசுக்கும் கூட அபாய அறிவிப்பாகத்தான் உள்ளது. அதனால் தான் ராஜ்குமார் விடுதலையாகும் வரை பொறுத்திருந்த இவர்கள் இப்போது அதிரடிப்படையை ஏவியுள்ளார்கள். ஆனால், ஒன்று மட்டும் உண்மை. இது பிரச்சினை களைத் தீர்ப்பதற்குப் பதிலாக நிலைமைகளை மேலும் தீவிரப்படுத்துவதாகவே அமையும்!

சிறுகதை

புதையல்

நான் பேருந்து நிலையத்திற்கு விரைந்து வந்தேன். மிக அதிகமாக எனக்கு வியர்த்துக் கொட்டியது. புறப்படத் தயாராக நின்றிருந்த பேருந்தைக் கண்டதும் நிம்மதி பெருமூச்சு விட்டேன். அந்த சுட்டுப் பொசுக்கும் வெயிலும் கூட குளிர்ந்த காற்று வீசியதை உணர்ந்தேன்.

நான் ஐந்தாறு அடி தூரத்திலிருந்த படியே பேருந்தின் ஜன்னல் வழியாகத் தலையை நீட்டிக் கொண்டிருந்த ஒரு பயணியைப் பார்த்து, "கைதூன் செல்லும் பேருந்து தானே இது" என்று கேட்டேன். ஆம் என்று அவர் தலையை ஆட்டினார். பாதி திறந்திருந்த கதவின் கைப்பிடியை இடது கையால் பிடித்துக் கொண்டே எனது வலது கையால் என் மூட்டையை பேருந்தின் உள்ளே தள்ளினேன்.

பேருந்தின் முன்புறத்தில் நடத்துனர் பிரயாணச் சீட்டுகள் கொடுப்பதில் முனைந்திருந்தார். வாகனத்தை சுத்தம் செய்பவன், "கைத்தூன், கைத்தூன்" என்று கரகரத்த குரலில் கத்திக் கொண்டிருந்தான். இது அளவுக்கு மீறி பேருந்தில் ஆடுகளைப் பிடித்து உள்ளே தள்ளுவது போல் இருந்தது. ஒரு கொக்கு தண்ணீரில் நடப்பது போல அந்த பயணிகள் நெரிசலில் நீந்தி சென்று ஒற்றைக் காலில் நின்றேன்.

கைத்தூன் ஐந்து கிலோ மீட்டர் தூரமே தான். ஒரு மணிக்கு ஒரு பேருந்து இங்கிருந்து கிளம்புகிறது. அதே போல் கைத்துனிலிருந்தும் ஒரு மணிக்கு ஒரு பேரூந்து கிளம்பி இங்கு வருகிறது. இந்த தடத்தில் ஓடும் அனைத்து பேருந்துகளும் ஒரே ஒப்பந்தக்கார ருடையது தான். பயணிகளில் பாதி பேருக்கு பயணச் சீட்டுகள் வழங்கப்படுவதில்லை. ஆகவே இதில் வசூலாகும் தொகையை கஜானாவில் செலுத்த வேண்டியதில்லை. ஆகவே இந்த வகையில் வசூலாகும் தொகையை ஒப்பந்தக் காரார் ஓட்டுநர், நடத்துனர், சுத்தம் செய்பவர் ஆகியோர் பங்கிட்டுக் கொள்வர். இந்தப் பணம் அவர்கள் சாராயத்தை வாங்கி தங்கள் வயிற்றை நிரப்பிக் கொள்ளப் போதுமானது. பேருந்து நகரத் தொடங்கியதும் காற்றின் குளிர்ச்சியும் அத்துடன் பயணிகளின் வீண் பேச்சுக்களும் மிதந்து வந்தது. ஒரு வயோதிப மாதின் புலம்பும் குரலும் என் செவிகளில் விழுந்தது.

"நான் தண்ணீர் குடிக்கப் போனது சில வினாடிகள் தான், அதற்குள் பேருந்து கிளம்பி விட்டது, நான் கத்திக் கொண்டே பின்னால் ஓடினேன், வண்டி நிற்கவில்லை. என்னை விட்டுவிட்டுப் பேருந்து போய் விட்டது."

"அதற்காக இப்போது கத்துவதால் என்ன ஆகப் போகிறது? பையை பேருந்தில் வைத்து விட்டு நீ ஏன் வெளியே போனாய்?" அடுத்து இருக்கையில் அமர்ந்திருந்த பெண் இப்படிக் கேட்டாள்.

"அம்மா நான் பேருந்தை விட்டு இறங்கி இருக்கக் கூடாது தான். என் நாக்கு வறண்டு விட்டது. தாக விடாயை யாரால் தான் தாங்கி கொண்டிருக்க முடியும். இந்த சுட்டெரிக்கும் வெயிலில் தண்ணீர் குடிக்காமல் இருந்தால் நாம் செத்துப் போய் விடுவோம், நம்முடைய இருக்கையில் நமது சாமான் எதையாவது வைக்காமல் இருந்தால் அந்த இடம் நமக்கு இல்லாமல் போய் விடும். பிறகு நின்று கொண்டே பிரயாணம் செய்யும் படியாகி விடும்"

"அப்படி அந்தப் பையில் பொக்கிஷம் என்ன தான் வைத்திருந்தாயாம்? இன்னொரு பெண் கேட்டாள்.

"நாங்கள் ஏழைகள். எந்த சொத்தையும் பணத்தையும் வைத்திருக்கப் போகிறோம்? இரண்டு கிலோ மாம்பழம், நாலணாவுக்கு வாங்கிய பொம்மைகள், மூன்று கட்டு பீடிகள், இரண்டு நெருப்புப் பெட்டிகள் இவ்வளவு தான் பையில் வைத்திருந்தேன்."

"ப்பூ. இந்த அற்ப சாமான்களுக்காகத் தானா இவ்வளவு தடபுடலும் பரபரப்பும்?"

இது என் காதில் விழுந்த உடனேயே என்ன நடந்தது என்பதைப் புரிந்து கொண்டேன். ஒரு மணிக்கு முன்பு புறப்பட்டுச் சென்ற பேருந்தில் இந்தக் கிழவி ஏறி இருக்கிறாள். பஸ் புறப்பட சில வினாடிகளுக்கு முன்பு, தன் பையை இருக்கையில் வைத்து விட்டு, தண்ணீர் குடிக்க கீழே இறங்கிச் சென்றிருக்கிறாள். அவள் திரும்புவதற்குள் பேருந்து கிளம்பிப் போய் விட்டது. அவள் இல்லாமலேயே அவளது பை பிரயாணத்தை தொடங்கி விட்டது. அவள் கத்திக் கொண்டே பேருந்தின் பின்னால் ஓடி இருக்கிறாள். ஆனால் பேருந்து நிற்கவில்லை.

"அந்த பேருந்து திரும்பி வரும் போது பாதி வழியில் இந்தப் பேருந்தைக் கடக்கும். நாம் ஓட்டுனரிடம் சொல்லி அந்த பேருந்தை நிறுத்தி விசாரிப்போம். உன் பை எங்கும் போய் விடாது. இப்ப பேசாமலிரு" என்று ஒரு பயணி சொன்னார்.

யாரும் கேட்காமலேயே முன் இருக்கையில் இருந்த ஒருவர், "ஹே ஓட்டுநர் ஐயா, கைத் தூணிலிருந்து திரும்பி வரும் பேருந்தை நிறுத்தி அதில் கேட் பாரின்றி ஏதாவது பை ஒன்று கிடக்கிறதா என்று கேளுங்கள்" என்று சொன்னார்.

"என்ன நீங்கள் பேசுவது? தின்பண்டம் இருக்கும் பையாவது அப்படியே பத்திரமாக இருக்கிறதாவது?" என்று அழகாக உடை உடுத்தி இருந்த ஒரு பெண் சொன்னாள்.

கிழவியின் கண்களில் நீர் நிறைந்தது. வருத்தமும் பாசமும் நிறைந்த அவளது முகத்தில் அவ நம்பிக்கை படிந்தது.

"ஐயா ரொம்பவும் பாடுபட்டு எனது பேரன்கள் பேத்திகளுக்காக இந்த மாம்பழங்களையும் விளையாட்டு பொம்மைகளையும் வாங்கினேன்." இதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை.

இதைக் கேட்ட பிறகுதான் சில பேர்களுக்கு ஓரிரண்டு கிலோ மாம்பழங்கள் கூட விலை மதிப்பற்ற சொத்தாக இருக்கக் கூடும் என்பதை உணர்ந்தேன்.

வெள்ளை வெளேரென்ற வேஷ்டியும் குர்தாவும் உடுத்திக் கொண்டு பணக்காரரைப் போன்று தோற்றமளித்த, என்னைப் போல் ஒற்றைக் காலில் நின்று கொண்டிருந்த ஒருமனிதர், "இந்தக் கிழப்பிணம்! எட்டணா மாம்பழத்திற்காக இது படுத்துகிற பாடு சகிக்க முடியவில்லையே! பேருந்தில் நான் ஆயிரக்கணக்கில் ரூபாய்களை எத்தனையோ தடவை பறிகொடுத்திருக்கிறேன். இதை நான் யாரிடமும் சொல்லிக் கொண்டது கூட இல்லை" என்று நீட்டி முழக்கிக் கொண்டிருந்தார்.

இந்தப் பேச்சு என்னை சுருக்கென்று குத்தியது. ஆனால் கிழவி இதைப்பற்றி சுவலைப்பட வில்லை. அதே வருத்தம் தோய்ந்த முகத்துடன் அவள் சொன்னாள். "ஐயா பெரிய வங்களே எங்களுக்கு எட்டணா என்பது ஆயிரம் ரூபாய்."

இந்த இரண்டு மனிதப் பிறவிகளையும் ஒப்பு நோக்கிய போது எனது இதயத்தில் இரத்தம் கசிந்தது.

"ஐயா தயவு செய்து எதிரில் வரும் பேருந்தை நிறுத்தி ஓட்டுனரிடம் என் பையைப் பற்றி விசாரியுங்கள்" என்று ஏற்கனவே ஓட்டுநரிடம் சொல்லிய அந்த மனிதரிடம் கிழவி கேட்டுக் கொண்டாள்.

இதற்கு முன்பு நான் யாருடைய கண்களிலும் இப்படியான கெஞ்சும் பார்வையைப் பார்த்ததே இல்லை.

"அதைக் கண்டு பிடித்து விடலாம்" என்று சொல்லிவிட்டு அவர் சுவாரஸ்யமாக ஊர் கதை பேசுவதில் முனைந்து விட்டார். மற்ற பயணிகளும் அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர். ஒவ்வொருவரும் பேருந்தில் தங்கள் பொருள்களை இழந்ததைப் பற்றி கதையாக சொல்ல ஆரம்பித்தனர்.

"சென்ற மழைக் காலத்தில் சந்தையில் எருமைகளை விற்று விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தேன். எனது பையில் மூவாயிரத்து ஐநூறு ரூபாய் சுருட்டி வைக்கப்பட்ட கரன்ஸி நோட்டுகளாக இருந்தன. சிறுநீர் கழிக்க இறங்கிச் சென்றேன். பஸ் புறப்பட்டு விட்டது. பாதியில் எனது வேஷ்டி நனைய பரக்கப் பரக்க ஓடிவந்தேன். ஆனால் பேருந்து நிற்கவில்லை," என்றார் ஒருவர்.

"அப்புறம்?"

"அப்புறம் என்ன? பணம் போனது போனது தான்,"

ஒரு பெண் சொன்னாள் "ஒரு சமயம் நூற்று ஐம்பது ரூபாய் பெறுமானமுள்ள துணிமணிகள் அடங்கிய பையுடன் கைத்தானிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தேன். நானும் இப்படித்தான் இருக்கையில் வைத்திருந்து பறி கொடுத்தேன். இந்த பஸ்ஸில் தவறியது ஒரு நாளும் திரும்பக் கிடைத்ததில்லை."

மற்றொரு பிரயாணி "சுமார் இரண்டு மாதத்திற்கு முன்னாள் பத்து கிலோ ஜீனி வைத்திருந்த பையை பேருந்தில் விட்டு விட்டேன். அதைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை" என்றார்.

இந்த ஒவ்வொரு சம்பவமும் கிழவியின் நம்பிக்கையை சிதறடித்துக் கொண்டிருந்தன. அவளது கண்களில் வேதனை குமிழியிட்டு நெற்றியில் சுருக்கங்கள் நெளிந்தன. பாதிக்கும் மேற்பட்ட பயணிகள் மாம்பழங்கள் இருந்த பை பறிபோனதாகவே நிச்சயம் செய்து கொண்டனர். அவளுக்கு நம்பிக்கையூட்டிக் கொண்டிருந்தவர்கள் கிடைத்து விடும் என்ற உறுதியாக சொன்னார்கள். பேருந்து விரைந்து சென்று கொண்டிருந்தது. மூன்று நான்கு பயணிகள் நடத்துனரிடமும் திரும்பி வரும் பேருந்தை நிறுத்தி விசாரிக்கும்படி கேட்டுக் கொண்டே வந்தனர்.

ஒரு கிலோ மாம்பழம் எப்படி ஆயிரம் ரூபாய்க்கும் மேல் மதிப்பு பெறும் என்பதை இன்று தான் நான் அறிந்து கொண்டேன். மாம்பழத்தோடு அவளது அன்பும் பறிக்கப்பட்டு விட்டதை அவளது கண்களில் கண்ட எனக்கு அழுகை வரச் செய்து விட்டது. முற்றத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் பேரக் குழந்தைகள் தெருவில் வரும் கிழவியின் காலடி ஓசையைக் கேட்டதும், "பாட்டி வந்துட்டாங்க! பாட்டி வந்துட்டாங்க!" என்று மகிழ்ச்சியுடன் குதித்தோடி வந்து, "இன்றைக்கு பாட்டி என்ன வாங்கி வந்திருக்காங்க" என்று பாட்டியின் கிழிந்து தைத்த புடவையின் மடியை ஆராய்வார்கள். அவள் தோளில் தொங்கியபடி. "எனக்கு மாம்பழம்" "எனக்கு பொம்மை" என்று கொஞ்சுவார்கள். முற்றத்தில் பேரக் குழந்தைகளால் சூழப்பட்ட கிழவியின் வேதனை அப்பிய முகத்தைத்தான் என்னால் பார்க்க முடிந்தது. தன் பையைத் தவறவிட்டதால் அவள் உலகத்தையே பறிகொடுத்தது போன்று பட்ட பெருந்துயரத்திற்கு, அவளது நெற்றிக் கோடுகள் கன்னத்தின் சுருக்கங்கள், சிகப்பேறிய கண்கள் மற்றும் உதட்டின் கீறல்கள் ஆகியவை" கண்கண்ட சாட்சியங்களாக விளங்கின. அந்தக் குழந்தைகள் அவளது நைந்த புடவை மடியை ஆராய்ந்து கொண்டே, "பாட்டி என்ன வாங்கி வந்தே! என்ன வாங்கி வந்தே?" என்று சொல்லி அழுவதையும் என்னால் கேட்க முடியும். திடீரென எங்கள் பேருந்து சத்தமிட்டபடி குலுங்கி நின்றது. எங்கள் பேருந்துக்கு அருகாக எதிரில் மற்றொரு பேருந்து வந்து நின்றது.

"ஹே, ஐயா! தயவு செய்து அந்த ஓட்டுனரை கேளுங்கள்" என்று கிழவி துள்ளி எழுந்தாள். அவள் மாத்திரம் ஜன்னல் ஓரமாக அமர்ந்திருந்தாளானால் அந்தக் கனமே கீழே குதித்திருப்பாள்.

எங்கள் ஓட்டுநர் எதிர் நின்ற வண்டியின் ஓட்டுநரை நோக்கி, "அண்ணாச்சி உங்கள் வண்டியில் சின்ன பை ஒன்று இருந்ததைப் பார்த்தீர்களா? என்று கேட்டார்.

அப்போது எங்கள் பேருந்தில் வாழ்வா சாவா என்று கேள்விக்கு விடையை எதிர் பார்த்திருப்பது போன்று பூர்ண அமைதி நிலவியது.

எதிரில் நின்ற பேருந்தின் ஓட்டுநர் என்ன சொன்னார் என்பது எங்கள் செவிகளில் விழவில்லை. ஆனால் ஒரு ஆள் அந்தப் பேருந்திலிருந்து இறங்கி அழுக்கேறிய ஒரு சிறு பையை உயர்த்தித் தூக்கியபடி, "இது யாருடைய பொக்கிஷம்?" என்று கேட்டுக் கொண்டே வந்தார்.

"என்னுடையது தான் ஐயா!" என்று அந்தப் பையைப் பற்றிக் கொள்ள பரபரப்புடன் தன் கையை வெளியே நீட்டினாள் கிழவி.

மூல ஆசிரியர்- பிரேம்ஜி பிரேம்
ஆங்கில மொழியாக்கம்- நீடா பானர்ஜி
ஆங்கில வழி தமிழாக்கம்-
திருவைகாவூர் கோ. பிச்சை
நன்றி ; சாரதர்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் தென்னிலங்கைத் தலைமைத்துவமும்

எம்.வை.எம் சித்தீக்
லண்டன் பல்கலைக்கழகம்

சென்ற வாரத் தொடர்ச்சி...

இவ்வாறு, ஆட்சியமைப் பதற்கும் வேறு சில தமது குறிக் கோள்களையும் நிறைவு செய்வ தற்கும் பேரினக்கட்சிகள் முஸ்லிம் தலைவர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் பயன்படுத்தி வந்தன. சுருக்கமாகக் கூறப் போனால் அவர்கள் கறிவேப்பிலையாகப் பயன்படுத்தப்பட்டார்களே யொழிய முஸ்லிம் சமூகம் பெரிதாகக் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய பயன் எதனையும் அடையவில்லை.

மறைந்த ஜனாப் அஷ்ரப்பின் தெற்குத் தலைமைத்துவத் திற்கெதிரான கோஷம் பின்னர் முஸ்லிம்களின் தனித்துவத்திற் கெதிரான கோஷமாக வளர்ச்சியடைந்து, முஸ்லிம்களுக்கான தனிக்கட்சி யொன்றின் மூலம் முஸ்லிம்களின் தலைமைத்துவத்தை கிழக்கு மாகாணத்திற்கு மாற்றியமைக்க இவை சில பின்னணிக்காரணி களாகும். 1994ம் ஆண்டு, எந்தப்பேரினக் கட்சி ஆட்சியமைக்க வேண்டும் என்பதைத்தீர்மாணிப்பதன் மூலம் இலங்கை முஸ்லிம்களின் பேரம் பேசும் ஆற்றலை உச்சப்படுத்தி இலங்கை முஸ்லிம்களின் தனித்துவத்தை நிலைநாட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முயன்றது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளிக்கும் பேரினக் கட்சிதான்

மாகாணத்தில் மட்டும்தான் உள்ளது. வேறு எந்தப்பிர தேசத்திலும் கிடையாது. இதுவே யதார்த்தமாகும்.

கிழக்கில் இருந்துதான் முஸ்லிம்களின் தலைமைத்துவம் உருவாவேண்டும் என்ற நிலைப்பாட்டை ஒரு பிர தேசவாதமாகக் கொண்டால் அது தவறாகும். ஏனெனில் தனித்து முஸ்லிம்களின் வாக்குகளினால் மட்டும் பல பார ாளுமன்றப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யக் கூடிய முஸ்லிம் பெரும்பான்மையுடன் கூடிய செறிவு கிழக்கு மாகாணத்தில் மட்டுமே உண்டு என்பதைக் கடந்த காலப்பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டியுள்ளன. எனவே எந்தப்பிரதேசத்தைச் சேர்ந்த இலங்கை முஸ்லிம்களுக்கு பேரின ஆளும் சமூகத்தினரால் ஏதும் அநியாயங்கள் நடைபெறும்போது அதனைத்தட்டிக் கேட்டுப் போர ாடக்கூடிய தைரியம் கிழக்கிலிருந்து உருவாகும் ஒரு தலைமைக்கே ஏற்பட முடியும். தெற்கில் இருந்து முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டாலும் அவர்கள் பேரின சமூகத்தவர்களினதும் வாக்குகளிலும் தங்கியிருப்பதனால், அவ்வாறான தொரு தைரியம் அப்பகுதிகளில் இருந்து உருவாகும் தலைமைத்துவத்திற்கு ஏற்படாது.

எனவே இலங்கை முஸ்லிம்கள் அனைவரதும் உரிமைகள் பாதுகாப்பப்பட வேண்டுமானால் பூரணமாக முஸ்லிம்களினால் தெரிவுசெய்யப்பட்ட தலைமை கிழக்கில் இருந்து உருவாதல் வேண்டும். அல்லாவிட்டால் இலங்கை முஸ்லிம்களின் இன அடையாளமே அழியாளமே அழியக்கூடிய ஆபத்தும், பயங்கர மும் ஏற்படலாம்.

இன்னொரு விடயத்தையும் இக்கட்டுரையில் சுட்டிக்காட்டலாம் என்று நினைக்கின்றேன். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக் கப்பட்ட ஆரம்பாகலங்களில் 1989ம் ஆண்டு வரை, கிழக்கு மாகாணத்தில் இருந்து எந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினரும் முழு அமைச்சராக நியமிக்கப்படவில்லை. மேலும் இலங்கை முஸ்லிம்களின் தலைமைத்துவம் முஸ்லிம் அமைச்சர் ஒருவரை நாடியே செல்வதும் இலங்கை அரசியலின் வரலாறாக இருந்து வந்துள்ளது. இந்த வகையில், முஸ்லிம்களின் தலைமைத்துவம் கிழக்கில் இருந்தே உருவாக வேண்டும் என்ற கோரிக்கையுடன் கிழக்கு மாகாணத்தில் இருந்தே முஸ்லிம் அமைச்சர் ஒருவரும் உருவாகவேண்டும் என்ற கோரிக்கையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தலைவரின் கோரிக்கையாக இருந்தது. இதற்கு கிழக்கு மாகாணம் பின் தங்கிய ஒரு பிர தேசமாக இருப்பதனால் அபிவிருத்திக்காரணியும் இக்கோரிக்கையினுள் அடங்கியிருந்தது.

மொத்தமாக நோக்கினால் இன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை வளர்த்தெடுத்த மூன்று பிரதான அம்சங்களும் அழிந்து விட்டன எனலாம். அதாவது கடந்த பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணியின் சின்னத்திலும் தேசிய ஐக்கிய முன்னணியின் பேரிலும் போட்டியிட்டதன் மூலம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விரும்பிய முஸ்லிம்களின் தனித்துவம் அழிந்து விட்டது எனலாம். இன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து தெரிவு செய்யப்பட்ட எந்தப்பிரதி நிதியும் பாராளுமன்றத்தில் கிடையாது. மக்கள் ஐக்கிய முன்னணியின் சின்னத்தில் போட்டியிட்டதன் மூலம் முஸ்லிம்களின் பேரம் பேசும் சக்தி வலுவிழந்து காணப் படுகிறது.

இரண்டாவது முஸ்லிம் காங்கிரஸ் விரும்பிய தலைமைத்துவம் கிழக்கில் இருந்து நழுவிச் சென்று விட்டது. மூன்றாவது 1989ம் ஆண்டில் இருந்து கிழக்கு மாகாணத்தில் இருந்து வந்த முஸ்லிம் அமைச்சர் பதவியும் இன்று கிடையாது. அதுவும் தெற்கை நோக்கிச் சென்று விட்டது. எனவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது அடிப்படைக் கொள்கைகளிலிருந்தும் விலகிச் செல்கின்றதா என்று வினாவத் தோன்றுகின்றது. இது கட்சியினதும் முஸ்லிம் சமூகத்தினதும் நல்ல எதிர்காலத்திற்கான அறிகுறியாகத் தென்படவில்லை.

முஸ்லிம் சமூகம் இன்னும் விழிப்புணர்வு பெறாமல் இருப்பது மிகவும் கவலைக்குரியதாகும். முஸ்லிம் சமூகம் விழிப்புற்று தீர்க்கதரிசனமற்ற முறையில் முஸ்லிம்களை ஏமாற்றி அவர்களின் வாக்குகளைச் சூறையாடி சமூகத்தைவிற்று சுய இலாபம் சம்பாதித்து வரும் முஸ்லிம் அரசியல் வியாபாரிகளை இனங்கண்டு அவர்களைப் பூரணமாக ஒதுக்குவதற்கு முஸ்லிம் சமூகம் தயாராக வேண்டும். முஸ்லிம் சமூகம் ஒரு தெளிவான அரசியல் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ஊரோடி

★ கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் வாக்களிப்பு நிலையங்களினுள் சட்டவிரோதமாக நுழைந்து தேர்தல் மோசடி வன்முறைகளில் ஈடுபட்டது பற்றிய விளக்கங்கள் கேட்டு 4 அமைச்சர்கள், 15 பிரதி அமைச்சர்கள், 53 உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்றுக்குழு கடிதம் அனுப்பி உள்ளதாம். இவர்கள் குற்ற வாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டால் வீட்டுக்குப் போவார்களா பதவி உயர்வு பெறுகிறார்களா என மக்கள் கேட்கிறார்கள்.

★ யாழ்ப்பாண மாநகரசபை அதிகாரிகளோ, ஊழியர்களோ பத்திரிகையாளர்களுக்குச் செய்திகள் எதுவும் கொடுக்கக்கூடாது என்று நிர்வாகத்தினர் இவர்களுக்கு சுற்று நிரூபம் அனுப்பியிருக் கிறார்களாம் இந்தக் கட்டளை எதற்காக?

★ குடியேற்ற நாட்டு நிலையில் இலங்கை இருந்த போது ஆங்கிலப் பள்ளிக் கூடங்களில் படித்த தமிழ் மாணவர்கள், தங்களுக்கிடையே தவறிப்போய் ஒரு தமிழ் வார்த்தையைப் பேசி விட்டால் அதற்கு ஒரு சொல்லுக்கு ஐந்து சதம் குற்றம் அடிக்கப்பட்டதாம். இது போல பல்கலைக்கழக மாணவர்கள் தமிழில் தமக்குள்ளே கதைத்தால் ஒரு சொல்லுக்கு ஐந்து ரூபா வீதம் தண்டம் விதிக்கலாமா என யாழ். நிர்வாகக் கூட்டத்தில் பேராசிரியர் ஒருவர் ஆலோசனை கூற, அரசர் பாலரின் முகத்தில் சந்தோஷம் பெருகியது. பேராசியருக்கு விரைவில் "ஸ்கொர்ஷப்" கிடைக்குமென முற்றத்துள்ளே கதையடிப்படுகிறதாம்.

★ இந்தியப் பத்திரிக்கைகளின் குப்பைத் தொட்டியாக மாறும் இலங்கை, பணக் கொள்ளையடித்தலுக்கும் உரியதாகிவிட்டதா? தீபாவளிமலர் வாங்கப் போன இளைஞர் ஒருவர் விலை கேட்டாராம். கடைக்காரர் நாலரை மடங்காய் இலங்கை விலையை முரட்டுத்தனமாகச் சொன்னாராம். அதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட இளைஞன் "பளார் பளார் அடியாம். இப்போது இருவரும் விசாரணையிலாம். ஏன் இந்தக் கொள்ளை?

★ புதிய அமைச்சர்கள் இருக்க இடம் தேடி அலைவதும் அவர்களின் பின்னால் "கொன்சொல்டென்ற்" சொகுசுப்பதவிக்கு பென்ஷன் காறர் அலைவதும், எம்.பி.மார் "கோட்டா"வைப் பெற பணக்கட்டுகளோடு பிள்ளை குட்டிக்காரர் அலைவதும் ஒரு புறத்தில் நடக்க, மறுபக்கத்தில் இடைக்கால நிர்வாக சபையில் நுழைய அலைவதும், அவர்களோடு இன்னும் பலர் அலைவதும் ஆளை ஆள் அடையாளந் தெரியாமல் ஒருவரோடு மற்றவர் முறுகவும் காரணமாகிவிட்டதாம். இந்த முறுகல் எப்போ உச்சம் பெறுமோ?

2

தொடர்நாவல் கமலா

செ.யோகநாதன்

எந்த நேரத்திலும் வந்து விடுவேன் என்று பயமுறுத்திக் கொண்டிருந்தது மழை. வானம் அடர்ந்து கறுத்திருந்தது. குளிர்காற்று குருத்தெலும்புகள் வரை சென்று அழுத்தினாற் போல உடம்பு நடுக்கத்திற் குள்ளாகிற்று. பஸ் தரிப்பு நிலையத்தில் நின்ற கமலா, அருகிலே நின்ற ருக்மணியைப் பார்த்தாள்.

"மழை வரமுன் பஸ் வரவேணும்..."

கவலையோடு சொன்னாள் ருக்மணி.

"வந்திடும்"

"இன்றைக்கு ஒரே சனக்கூட்டம்"

சலிப்போடு தனக்குத்தானே கூறிக்கொள்வது போல முணுமுணுத்தாள் ருக்மணி.

"நாளைக்கு போயா. பிறகு சனி ஞாயிறு. பிற ஊரிலை இருந்து இங்கு வந்து வேலை செய்கிற வர்கள் வீட்டுக்குப் போவதற்காக வந்து நிற்கலாம்..."

"அதிர்ஷ்டசாலிகள்..."

பெரு மூச்சு விட்டாள்.

"ருக்கு..."

கனிவோடு ருக்மணியைப் பார்த்தாள் கமலா. அந்த வார்த்தைகள் தன்னை அன்போடு தொட்டாற்போல உணர்ந்து அவளைப் பார்த்தாள். பெரிய கண்களில் இனந் தெரியாத நிம்மதிமெல்ல அரும்பிற்று. வார்த்தைகள் நிறைந்த பார்வை.

"எதுக்கு சலிச்சுக் கொள்ளுறீர்.... ஞாயிற்றுக் கிழமை "ஓவர்ரைம்" வேலையோ?"

"இல்லை..."

"பிறகென்ன... லீவிலை பிள்ளைகளோடை சந்தோஷமாகப் பொழுதைக் களிக்கலாந்தானே..."

வெறுமையாகச் சிரித்தாள்.

"அப்படி ஒரு காலம் இருந்தது..."

"இப்போ?"

பெரு மூச்சு விட்டாள் ருக்மணி. அவளது மெலிந்த உடலைப் பார்த்தபடி, தோளில் தொட்டாள் கமலா. முகத்தில் எப்போதாவது தான் ருக்மணிக்கு புன்னகை துலங்கும். சட்டென்று அணைகின்ற வெளிச்சம் போன்ற புன்னகை. முகத்தில் பெருகியுள்ள சோகத்தை சட்டென்று கிழித் தெறிந்தாற் போன்ற புன்னகை.

மௌனமாக கமலாவைப் பார்த்தாள்.

"இப்போ என்ன?"

பெருவிரலால் நெற்றியை மெல்லக் கீறினாள்.

"வாழ்க்கையிலை என்ன இருக்குது?"

"எதுக்கு இப்படிச் சலிப்பு..."

"காலையிலை நாலுமணிக்கு தொடங்கிற வேலை, இரவு பன்னிரெண்டு மணிவரை போகும். மாமியார் படுத்த படுக்கையிலை. இவர் துரும்பைக் கூடத்தூக்கிப் போடமாட்டார். சாப்பிட்ட கோப்பையை நான்தான் கழுவி வைக்க வேணுமென்று சொல்லுவார். இரண்டும் நல்லி பிள்ளைகள். அதுகளை வெளியிலை கூட்டிக்கொண்டு போக விருப்பம். ஆனால் முடிகிற தில்லை லீவு நாளிலை என்றால் இரண்டு மடங்கு வேலை. துணி தோய்க்க வேணும். வீடெல்லாம் துப்பரவாக்க வேணும்..."

சில கணங்கள் மௌனமாகி விட்டுத் தொடர்ந்தாள்.

"உலகந் தலைகீழாகப் புரண்டாலும் சனிக்கிழமை இவருக்கு கோழிக் கறி வேணும். அதோடை முடியிறதில்லை. என்ன உடல் வருத்தமிருந்தாலும் அவருடைய விருப்பப்படி நடக்க வேணும். என்னுடைய விருப்பு வெறுப்புப் பற்றி ஒரு வார்த்தையும் கேட்கிற தில்லை. நான் மரம் போலை ஆகிவிட்டன்.."

பின்னாலே சட்டென்று திருப்பினாள் ருக்மணி. கியூவரிசையில் இரண்டு கிழவிகள் நின்றனர். கமலாவின் மனதில் ரவியின் முகம் தெரிந்தது.

"உண்மையிலை சொன்னால் எனக்கு லீவென்றாலே பிடிக்கிற தில்லை. அவ்வளவு எரிச்சல். இந்தப் பிள்ளைகளுக்காகப்

பார்க்கிறன். அல்லாவிட்டால் எங்கையாவது மடத்திலை போய்ச் சேர்ந்து சாமியாகிவிடுவன்...."

மௌனமாக அவளைப் பார்த்த கமலாவுக்கு எதுவுமே சொல்லத் தோன்றவில்லை. ருக்மணிக்கு முப்பதுவயதுக்கு உள்ளே தான் இருக்கும். யாருடனும் அதிகம் பேசமாட்டாள். வேலைக்கு வந்து இரண்டு ஆண்டுகள் தான்.

"ருக்கு...."

"சொல்லுங்க...."

"இரண்டாவது குழந்தை பிறந்ததும் "ஒப்பிறேஷன்" செய்திட்டன். இரண்டே போதுமென்றில்லை. அவ்வளவு கஷ்டப்பட்டன். பிள்ளை பெறுகிறதுக்கு முதல் நாள் வரை என்னை ஒரு மிருகம் மாதிரி நடத்தினவர்... மிருகம் அப்படியெல்லாம் நடக்குமோ தெரியாது..."

திடுக்கிட்டுப் போனாள் கமலா.

"ஒப்றேஷனுக்கு அவர் சம்மதிக்கேல்லை. இன்னும் ஒரு ஆண் பிள்ளையைப் பெற்று விட்டுப் பிறகு பார்க்கலாம் என்றார்... நான் மறுத்துவிட்டேன். நான்தான் பிள்ளைபெறுகிறனான். அதை நான் தான் தீர்மானிக்க வேணும் என்றிட்டன்..."

சொன்னவளின் முகத்திலே வேதனை. உடலினுள் ஏதோ முறுகுகிறாற் போன்ற வேதனையை முகத்தின் சங்கடம் சொல்லிற்று. கணப் பொழுதுகள் இடுப்பை அழுத்தினாள்.

"ருக்கு... என்ன?"

"ஒப்பிறேசனுக்குப் பிறகு இப்படித்தான். வயிற்றுவலி. இடுப்பு வலி. கால்வலி..."

"டொக்டரிட்டைப் போகலாந்தானே..."

"போனால் என்ன... டொக்டர் மருந்து எழுதித் தாறார். நல்லாஓய்வு எடுக்கச் சொல்லுகிறார். எதைப்பற்றியும் யோசித்துக் கவலைப் படக்கூடாதென்று சொல்லுறார்..."

தன்னையறியாமலே புன்னகை செய்தாள் ருக்மணி. மறுகணமே கருகிப் போயிற்று அந்த இளஞ்சிரிப்பு.

எதிரே ஒருவன் அப்பிள் கூடையோடு வந்தான்.

கமலா இரண்டு பழங்களை வாங்கிக் கொண்டாள். பஸ் வந்தது. பின் இருக்கையில் இருந்து கொண்டனர்.

"சாப்பிடும்..."

ஒரு அப்பிளை அவளின் கையிலே கொடுத்தாள் கமலா.

"என்னவோ தெரியல்லை... உங்களோடை இன்றைக்கு கதைச்சது மனதுக்கு ஆறுதலாக இருக்குது..."

பழத்தை துடைத்தவாறு சொன்னாள் ருக்மணி.

"நீங்கள் "சுப்பவைசர்" என்றதாலை கம்பனியிலை கதைக்க முடியிறதில்லை... முதல் நாள் உங்களை நான் கண்டபோது "மெடம்" என்று கம்பனியிலை சொல்லுறது போலக் கூப்பிட்டனான். அது உங்களுக்கு பிடிக் கேல்லை... அப்படி வெளியாலை ஒரு நாளும் கதைக்க கூடாதென்று சொன்னனீங்கள்... அதிலை இருந்து உங்களிலை எனக்கு நல்ல விருப்பம். அடிக்கடி சந்திக்க முடியாதது மனதுக்கு சரியான கஷ்டம்..."

"அப்பிளைச் சாப்பிடும்..."

கடித்தவாறு, "நல்ல ருசி" என்றாள்.

"ருக்கு..."

"ம்ம்..."

"ஒவ்வொரு நாளும் ஒருஅப்பிளாவது சாப்பிடுகிறது உம்முடைய உடம்புக்கு நல்லது..."

பரிதாபமாக அவளைப் பார்த்தாள் ருக்மணி. அவளைப் பார்க்க இரக்கம் வந்தது.

"என்ன?"

குரலில் அன்பும் கருணையும். அவளது கையைத் தொட்டாள்.

"எடுக்கிற சம்பளம் அதுக்கு இடங்கொடுக்குமோ? என்ரை பிள்ளைகளுக்கு பழங்கள் என்றால் சரியான விருப்பம்.... கேட்கிறவை. ஆனால் மாதத்திலை ஒரு தரந்தான் வாங்கிக் கொடுக்க முடியுது..."

"தகப்பனிட்டைக் கேட்கமாட்டினமோ?"

விரக்தியோடு கமலாவை ஏறிட்டாள் ருக்மணி.

"அவர் தன்னைத் தவிர எதையும் யோசிக்க மாட்டார்..."

கமலா ரவியை நினைத்துக் கொண்டாள்.

பஸ், தரிப்பில் நின்று புறப்பட்டது. உள்ளே வந்த ஒருவன் ருக்மணிக்கு அருகே வந்து இடித்துக் கொண்டு உட்கார்ந்தான். அவள் தன்னுடைய கைப்பையைத் திறந்து எதையோ தேடினாள்.

"என்ன தேடுகிறீர்?" என்றாள் கமலா.

ஊசியொன்றை எடுத்து அவளுக்கு காட்டி விட்டுச் சொன்னாள் ருக்மணி.

"பஸ்லில் பெண்களுக்கு அருகாக இருக்கிற நேரத்திலை தான் சில ஆண்களுக்கு நித்திரை வரும்... மூலைப்பக்கமாக இடம் என்னவென்று பார்க்கிற அவதி வந்து பெண்களை இடிப்பினை... தற்செயலாகப்படுகிற மாதிரி பின்னாலை தொடுவினை.. அப்போ இது பயன்படும்.. ஒரு சின்னக் குத்துக் குத்தினால். உடனை எல்லாம் சரிவந்திடும்..."

கமலா தன்னை மறந்து சிரித்தாள்.

ருக்மணிக்கு அருகில் இடித்துக் கொண்டிருந்தவன் இப்போது ஒதுங்கி அமர்ந்து, தலையைக் குனிந்தபடியே இருந்தான்.

"நானும் இனி ஊசி ஒன்று கொண்டு வரவேணும்" என்றாள் கமலா புன்னகையோடு.

வெளியே மழை கொட்டத் தொடங்கிற்று.

தொடரும்...

நலித் மக்களின் 12ம் பக்கத் தொடர்ச்சி

மொத்தத்தில் பொதுவான சமூக ஏற்றத் தாழ்வு நிலைமைகளும், அதில் அடித்தள மக்களின் துயர் நிறைந்த வாழ்வியலும் உணர்வுகளும் உண்மையின் அக்கம் நின்று வெளிக் கொணரப்படுகின்றது. பாலசிங்கத்தின் குடும்ப சூழல் அமைப்பில் என்ற பல வர்க்கங்களினதும், சாதியினதும், புறவியல்புகளையும், உளவியல் புகளையும், நாவலாசிரியர் மிகத் தெளிவாக உணர்ந்ததிருந்தமையாலேயே இத்தகைய யதார்த்தப் பின்னணியோடு, இந்நாவலினை எழுத முடிந்துள்ளது எனலாம்.

மொத்தத்தில் பொதுவான சமூக ஏற்றத் தாழ்வு நிலைமைகளும், அதில் அடித்தள மக்களின் துயர் நிறைந்த வாழ்வியல் உணர்வுகளும் உண்மையில் அக்கம் நின்று வெளிக் கொணரப்படுகின்றது. பாலசிங்கத்தின் குடும்ப சூழல் மூலமாக தாழ்த்தப்பட்ட வறுமைக்குட்பட்ட மக்களின் வாழ்க்கையம்சங்களும், அமலா, மகேஸ்வரன் முதலானோரின் குடும்ப சூழல் மூலமாக உயர்குல செல்வந்த வாழ்க்கை முறைகளும் சித்தரிக்கப்பட்டுள்ளன. இவற்றினூடாக எழும் மனோபாவங்கள், செயல், வர்க்க முரண்பாடுகள், பெறுமதிகள் என்பன நுண்ணயத்துடன் தீட்டப்பட்டுள்ளன.

சமூகத்தின் இத்தகைய முரண்களை நியாயப்படுத்தவோ, சமரசம் செய்யவோ நோக்கில்லாத செ. யோகநாதன் இந்நாவல் இம் முரண்களின் தாற்பரியத்தை தோலுரித்துக் காட்டுகின்றது எனலாம். சமூகப் புன்மைகள், சமூக முரண்பாடுகள் ஆகியவற்றை தனிமனிதர்களை உதாரணங்களாக்கி, புறவாழ்க்கையை அவர்களது வளர்ச்சியில் படைப்பாக்கப்பட்டுள்ளது. அதன் பின்னணியில் உள்ளமர்ந்து செயற்படும் சமூக இயக்க விதிகள் வெளிக் கொணரப் படுகின்றன. இவ்வம்சம் கோட்பாடாக விவரிக்கப்படாமல், மனிதவுறவுகளில் அடிப்படையில் சித்திரிக்கப்படுகின்றது.

முடிவாக நோக்குகின்ற போது பொதுவில் சராசரி புத்தி ஜீவிகளின் அரசியலில் கடமையான சமூக அசிங்கங்களை மூடி மறைத்தல், அழகுப்படுத்தல் சமரசம் செய்தல், எனும் புன்மைகளை தாண்டி தனக்கே உரித்தான தன்னம்பிக்கையுடனும், "மாத்திரமல்லாமல்- கூடவே கர்வத்துடன், சொற் செறிவுடனும் "காவியத்தின் மறுப்பக்கம் நாவலை படைத்திருப்பது வரவேற்க தக்க ஓர் முயற்சியாகும். நாவலின் முடிவு சோகத்தை இசைத்தாலும் அவைக் கூட சமூக அசைவியக்கத்தை நோக்கியதாக அமைந்திருக்கின்றது.

ஆன்மீக ஜனநாயகத்தினை 12ம் பக்கத் தொடர்ச்சி...

உள்ள குருநகர், பாசையூர் மீனவ மக்களின் நலன்களுக்காக உழைத்தார். "பெரிய கோவில் வாத்தியார்" என்றே மீனவ மக்கள் அவரை அழைப்பது வழக்கமாக இருந்தது.

நாவலர் மரபைச் சேர்ந்தவர்களோடு அவருக்கு நல்ல உறவு இருந்தது. நாவலருடைய பல பணிகளை அவர் பாராட்டியிருந்தார். பல விடயங்களில் நாவலர் மரபினரோடு உடன்பாடு இல்லாவிட்டாலும் அவர்களுடன் மோதுவதில்லை என்ற நிலையினையே அவர் கொண்டிருந்தார்.

1920-1922 காலப் பகுதியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராக இருந்த இவர் திடீரென தனது அதிபர் பதவியை இராஜினாமாச் செய்து விட்டு தமிழகம் சென்று மயிலாப்பூரில் உள்ள இராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்தார்.

யாழ்ப்பாண வாழ்வின் அனுபவம் மூலம் சமஸ்கிருத மயமாக்கலின் கொடுமைத்தன்மையையும், சாதிப்பாகுப்பாட்டினையும் அவர் நேரடியாக உணர்ந்ததன் நிமித்தமே சமூக சமத்துவத்தை உயர்த்திப் பிடிக்கின்ற வேதாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட இராமகிருஷ்ண மிஷனில் அவர் சேர்ந்திருக்க வேண்டும்.

1924இல் துறவியாக விபுலானந்தர் பெயருடன் வெளி வந்த இவர் கிழக்கில் இராமகிருஷ்ணமிஷன் பாடசாலைகளைப் பொறுப்பேற்று நடாத்தினார். 1931இல் மிஷனின் அனுமதியுடன் அண்ணாமலைப் பல்கலைக்கழக முதல் தமிழ்ப் பேராசிரியராகவும், தொடர்ந்து 1943முதல் பேராதனைப் பல்கலைக்கழக முதல் தமிழ்ப் பேராசிரியராகவும் கடமையாற்றினார்.

சுவாமி விபுலானந்தர் இராமகிருஷ்ணமிஷன் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டார் என்பதைவிட தமிழ்ப் பண்பாட்டு வேரில் நின்று கொண்டு வேதாந்தம் கூறுகின்ற ஆன்மீக ஜனநாயகக் கூறுகளையும், மேலைத்தேச சிந்தனைகளிலிருந்து வந்த தாராண்மைக் கூறுகளையும் இணைத்து தமிழ்ச் சூழலுக்கேயுரிய புதிய ஆன்மீக தாராண்மை ஜனநாயக சிந்தனையை உருவாக்கினார் என்றே கூற வேண்டும்.

அவருடைய எழுத்துக்கள் பலவற்றில் இவற்றை தெளிவாக அடையாளம் காணலாம். குறிப்பாக செந்தமிழ்ச் செல்வி" சஞ்சிகையில் வெளிவந்த தென்னாட்டில் ஊற்றெடுத்த அன்புப் பெருக்கு வடநாட்டில் பரவிய வன்முறை", "கலைச் சொல்லாக்கம்" போன்ற கட்டுரைகளும் இயலிசை நாடகம், மேற்றிசைச் செல்வம், சோழமண்டலத் தமிழும் ஈழமண்டலத் தமிழும் போன்ற கட்டுரைகளும், "யாழ்நூல்" என்ற ஆராய்ச்சி நூலும் இதனை தெளிவாக காட்டுகின்றன.

தாராண்மைவாதக் கருத்துக்களை தமிழ்ச் சூழலுக்கு அறிமுகப்படுத்திய யாழ்ப்பாண வாலிப காங்கிரசின் தலைவராகவும் இவர் ஒருவருடம் பணி யாற்றியுள்ளார் எனினும் அரசியற் களத்தில் இவரது சிந்தனைகளின் தாக்கத்தை பரிசீலித்து பார்க்கக் கூடிய நிலை தமிழ்ச் சூழலில் இருக்கவில்லை.

இவர் ஒரு துறவியாக இருந்ததால் பல கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகியிருக்க வேண்டியநிலையும் தமிழ்ச் சமூகத்தின் அரசியற் தல்லமை யாழ் சைவ வேளாளரின் ஆதிக்கத்தில் இருந்தமையும் இதற்கு காரணமாக இருக்கலாம்.

எனினும் இவரது சிந்தனைகளில் இன்றைய சூழலில் முக்கியமான அம்சம் நமது வேரில் நின்று கொண்டு சமூகமாற்றத்திற்கான சிந்தனையை முன்வைத்தமையாகும். தமிழ்ச் சூழலீல் சமூக மாற்றத்திற்கான அமைப்புக்கள் தோல்வியில் முடிந்தமைக்கு "வேரில் நின்று கொண்டு அச்சிந்தனையை முன்வைக்காமை பிரதான காரணம் என்றே நான் நினைக்கின்றேன்.

வேரில் நின்று கொண்டு சமூக மாற்றத்திற்கான சிந்தனையை முன்வைத்தில் சுவாமி விபுலானந்தருக்கு பிறகு மு.தளையசிங்கம் முக்கியமான வராக விளங்குகின்றார். அவர் விபுலானந்தரிலும் பார்க்க ஒரு படி மேலே சென்று ஆன்மீக தளத்தில் நின்று கொண்டு மார்க்சிய காந்தீய சிந்தனைகளையும் உள்வாங்கி இணைத்து தனது சிந்தனையை முன் வைத்திருந்தார்.

சுவாமி விபுலானந்தர், மு.தளையசிங்கம் ஆகியோரின் சிந்தனைகளை மறு வாசிப்பு செய்ய வேண்டிய கட்டாயத்தினை இன்றைய காலம் உருவாக்கியிருக்கின்றது.

இந்த இதழுக்கான உசாத்துணைகள்

1. கா. சிவத்தம்பி - "சுவாமி விபுலானந்தரின் சிந்தனை நெறிகள்"
2. கொழும்பு தமிழ்ச் சங்க வெளியீடு- விபுலானந்தர்
3. விபுலானந்தர்- "இலக்கியக் கட்டுரைகள்"
4. பேரா[illegible]யர் கா. சிவத்தம்பியுடன் நேரடியாக உரையாடியவை.

ஞாபகார்த்தக் கூட்டம்



நந்தன மாரசிங்கா ஞாபகார்த்த அமைப்பின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள நந்தன மாரசிங்கா 13ம் வருட ஞாபகார்த்த கலந்துரையாடலில் இம்முறைக்கான தலையங்கம் வன்முறையை எதிர் கொள்வது எவ்வாறு? என்பதாகும்.

எதிர்வரும் டிசம்பர் 13ம் திகதி மாலை 3.00 மணிக்கு கொழும்பு தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற வுள்ள இந்த ஞாபகார்த்த விழாவில் சம்பத் சூரியசேனாவின் 1980ம் அண்டு சிங்கள இளைஞர்கள் கிளர்ச்சியின் வன்முறைகளுக்கான பின்னணி எனும் நூலும் திம்பிரியாகம பண்டாரவின் எப்பாவலை பொஸ்பேட்..... "நாகரீக புதைகுழியினை தோன்டுதல்" என்ற நூலினதும் வெளியீட்டு வைபவமும் இடம் பெறும்.

இந்தக் கருத்தரங்கின்போது நன்னெறிகளுடன் கூடிய சமுதாயமொன்றிற்காக வன்முறைகளைத் தோற்கடிப்பதாக எதிர்கொள்ளும் சவால்கள் எனும் தலையங்கத்தின் கீழ் ராவய ஆசிரியர் விக்டர் ஐவன் அவர்களும் பொஸ்பேட் பாரை "பாதுகாப்பின் போது எதிர் நோக்கும் சவால்கள்" என்ற தலையங்கத்தின் கீழ் மகானன் கடவல பியரத்ன தேரரும் உரையாற்றவுள்ளனர். இந்தக் கருத்தரங்கின்போது மேற்கூறப்பட்ட இரண்டு புத்தகங்களையும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடிவதோடு அந்த அமைப்பிற்கான அங்கத்துவத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

பதினைந்தாவது ஆண்டு நினைவு

தோழர் சந்ததியார்

தோழர் சந்ததியார் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவர். தமிழ் இளைஞர் பேரவை, புதிய தமிழ் புலிகள், தமிழீழ விடுதலை புலிகள், தமிழீழ மக்கள் விடுதலை கழகம், தீப்பொறி என இவரது அரசியல் வாழ்வு விரிவானது. தமிழீழ விடுதலைக் போராட்டத்தில் மக்கள் போராட்டத் திற்கு முன்னுரிமையளித்த மார்க்சியவாதி தாபன அகவாழ்வில் ஜனநாயகத்திற்காக என்றும் போராடி வந்தவர் போராட்டத்தின் ஆரம்பந்தொட்டே இந்திய ஆக்கிரமிப்பின் அச்சுறுத்தலை தீர்க்க தரிசனத்துடன் சுட்டிக்காட்டி வந்தவர் சோசலிச தமிழீழம் எனும் இலட்சியத்திற்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர். கழக தலைமையின் எதேச்சதிகாரத்தை எதிர்த்ததனால், உமாமகேஸ்வரன் பிரிவால் படுகொலைக்குள்ளானவர், ஜனநாயகத்திற்கான போராட்டத்தில் வீரமரணமடைந்த எம்மருந் தோழருக்கு எமது இதய அஞ்சலிகள்.

கலாநிதி
விக்ரமபாகு
கருணாரத்னா

பார்வையில்

தற்போது எழுந்துள்ள முக்கியமான பிரச்சினை சந்திரிகா பிரபாகரனோடு பேசுவாரா என்பதாகும். நிபந்தனைகள் பாரதூரமாக இல்லாதிருப்பின் ஏதோ ஒரு விதத்தில் பேச்சுவார்த்தைகள் நடக்கலாம் என்பது சந்திரிகாவின் நெருங்கியவர்களது அபிப்பிராயமாக உள்ளது. எவ்வாறாயினும் புலிகள் குறைந்தபட்ச நிபந்தனைகளையாவது முன்வைக்க இடமுண்டு. இருந்தாலும் இவ்வளவு காலமும் நிபந்தனைகளை இட்டது அரசாங்கமே. சந்திரிகா கூறியதும் ஆயுதங்களைக் கீழே வைக்குமட்டும் பேச்சு வார்த்தைகளுக்கு வருவதில்லை என்பதாகவே இருந்தது. பிரபாகரன் சொல்வதும் ஆயுதங்களை ஏந்திக் கொண்டு தமிழ் நிஜபூமியை ஆக்கிரமித்துள்ள சிங்கள இராணுவம் வெளியேறிச் செல்லும் வரையில் தனது கையிலுள்ள ஆயுதத்தை நிலத்தில் வைக்க நினைத்துப் பார்ப்பது கூட இல்லை என்பதாகவே இருக்கின்றது. இதன்படி பிரபாகரனின் நிபந்தனை சிங்கள இராணுவம் தமிழ் பூமியிலிருந்து வெளியேறும் வரையில் பேச்சு வார்த்தைகள் நடக்காது என்பதேயாகும் இருசாராரிடையே சண்டை இவ்வாறு முன் செல்கின்றது. இருந்தாலும் எந்தவொரு சிறுபிள்ளையினாலும் கண்டுகொள்ள முடிவது, விடுதலை அமைப் பொன்றிற்கு இன்னொரு பாதுகாப்புத்திட்டமொன்றைப் பற்றி சந்தேகம் இருப்பின் ஆயுதங்களை நிலத்தில் வைக்க மாட்டாகள் என்பதாகும். காரணம் அவ்வாறு நிலத்தில் வைத்தால் அவர்களுக்கு உரிமையாவது மரணம் ஒன்று மட்டும்தான் என அவர்கள் நியாயமாக யோசிக்கின்றனர்.

புலிகளோடு பேச்சவார்தைகளுக்கு செல்வது பற்றி தமது உடன்பாடுகள் இல்லையென ஈ.பி.டி.பி கட்சி கூறியிருந்தது. புலிகளை விட்டு மற்றைய அமைப்புக்களுடன் பேசுவது சிறந்ததெனவும் கூறியிருந்தனர். டக்ளஸ் அவ்வாறு கூறுவது அவரது கருத்துப்படி புலிகள் அமைப்பு பாஸிஸ அமைப்பொன்றென்ற அவரது கணிப்பின்படியாக இருக்க வேண்டும் இருந்தாலும் சிங்கள அரசாங்கத்தின் உதவியோடு உண்டு. உடுத்து பாதுகாப்போடு இருக்கும் அமைப்புக்களோடு பேசி தமிழ் தேசிய பிரச்சினைக்குத் தீர்வுதேட முடிவதென்பது சர்வதேச அளவில் கேலிக்குரிய விடயமாகும். உண்மையாகவே டக்ளஸ் இன்று அமைச்சர் பதவியை வகிப்பதும் பிரபாகரனுக்கு நன்மை கிடைக்கவே பிரபாகரன் இல்லாவிட்டால் சிங்களப் பணக்கார வகுப்பினர் எவரும் டக்ளஸை எந்த வகையிலும் மதிக்க மாட்டார்கள். டக்ளஸ் பிரபாகரனின் அவதாரமென சிலர் கூறுகின்றனர். அதிலும் அர்த்தம் உண்டு. காரணம் பிரபாகரன் இருக்காவிட்டால் டக்ளஸ் எந்தவகையிலும் இருக்க மாட்டார்.

இருந்தாலும் டக்ளஸ் கூறும் கதைகளில் ஒரு உண்மையும் உண்டு. சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களின் நிஜ பூமிக்கான உரிமையை ஏற்று சமாதானம், சமத்துவம் சுய நிர்ணய உரிமை என்ற முன்றினதும் அடிப்படையில் தமிழ் தேசிய பிரச்சினைகளுக்கு தீர்வு தேடுவார்களேயாயின் பிரபாகரனுக்கு அடிமையாக எந்தவிதமான காரணமும் இல்லை. காரணம் அதுபோன்ற தொரு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஆயத்தமாக தலைவர்களின் முன்னே பிரபாகரனும் கூட தமிழ் ஈழம் தேவையில்லை என்று கூறக்கூட கால நேரம் இல்லாமலிருக்கும். தமிழ் ஈழத்தைக் கேட்கக் காரணம் அனைவருக்கும் ஒற்றுமையாக இருப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்காததின் காரணத்தினாலேயேயாகும். அவ்வாறன்றி "ஈழம்" என்ற ஒரு காய்ச்சல் நோய் பரவியதினாலல்ல. சரிநிகரான சமுதாயத்தில் எவரும் பிரிந்து செல்ல முயலுவதில்லை. ஒன்றாக இருக்கும் போது அதிக இலாபத்தை அனைவரும் பெறுகின்றனர்

1994ம் ஆண்டு சந்திரிகா பதவிக்கு வரும்போது சந்திரிகா தமக்கு சுயநிர்ணய உரிமையைப் பெற்றுத் தருவாரென்ற நம்பிக்கை தமிழ் மக்களுக்கு இருந்தது. அதனால் அவர்கள் புலிகளின் கட்டுப்பாடுகளையும் உடைத்தெறிந்து விட்டு சந்திரிகாவிற்காக வீதிகளில் ஊர்வலம் சென்றனர். உண்மையாகவே புலிகள் அப்போது பேச்சு வார்த்தைகளுக்கு வந்தது தமிழ் மக்களின் தாக்கங்களின் காரணமாகவே. இருந்தாலும் சந்திரிகா அன்று பேச்சு வார்த்தைகளுக்காக பிரதிநிதிகளை அனுப்பியது எந்த விதமான அரசியல் தீர்வுகளையும் மனதில் வைத்துக் கொண்டல்ல. அதனால்தான் எந்தவொரு அரசியல்வாதியையும் எந்தப்பேச்சுவார்த்தைகளில் பங்கு கொள்ள வைக்கிறது. இன்னும் கூட சந்திரிகா பேச்சுவார்த்தைகளுக்காக அழைப்பது எந்தவிதமான கருத்துக்களை முன்வைத்துக் கொண்டு? சென்ற கால அரசியல் அமைப்பின் படியேயாயின் அதில் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. காரணம் அதன் மூலம் வழங்கப்படும் சுயநிர்ணய உரிமை 13வது ஷரத்தின் சுயநிர்ணய உரிமையும் விட குறைவானதொன்றாகும். அதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியும் இணங்கவில்லை. டக்ளஸ் உடன்பட்டதும் முனுமுனுப்புடன்தான் இதன்படி பிரபாகரன் பேச்சுவார்த்தைக்கு வருவாரா என்ற கேள்வியில் பிரயோசனம் இருக்குமா?

சிந்திக்க முல்லாவின் கதைகள்

உடை விழுந்த சப்தம்

முல்லா மாடியில் இருந்தார். மனைவி கீழே இருந்தாள். மாடிப்படியில் ஏதோ பெரிய பொருள் விழுந்த சப்தம் கேட்டது.

அவருடைய மனைவி, "அங்கே ஏதோ விழுந்ததே அது என்ன?" என்று குரல் கொடுத்தாள்.

"விழுந்தது என் உடை" என்றார் முல்லா.

"உடை விழுந்ததாலா இவ்வளவு சப்தம்?"

"ஆம்! அந்த உடைக்குள் நான் இருந்தேனே".

யானைக்கு கல்யாணம்

அரசரின் யானை எல்லா ஊர்களிலும் பயிர், மரங்கள், தோப்புக்களை அழித்து நாசம் செய்து கொண்டிருந்தது. அதனால் மக்கள் பெருந்துன்பத் துக்குள்ளானார்கள். இந்த யானையின் அழிவுச் செயலை, மன்னரிடம் முறையிட எண்ணினார்கள்.

முல்லா, மன்னரிடம் மிகுந்த செல்வாக்கு உள்ளவர் என்பதால் முல்லாவிடம் சென்று, முல்லா நீங்கள் தான் மன்னரைக் காணப்போகும் குழுவிற்குத் தலைமை ஏற்க வேண்டும், மன்னரிடம் யானையின் அழிவுச் செயலைப் பற்றி எடுத்துக் கூறவும் வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

முல்லா, அதற்குச் சம்மதம் தெரிவித்து தன்னோடு பத்து நபர்களையும் அழைத்துக் கொண்டு மன்னரைக் காணச் சென்றார்.

மன்னர் அன்று மிகுந்த கோபத்தோடு எல்லாம் எரிந்து விழுந்தார். முல்லாவின் முறையும் வந்தது மன்னர் முல்லா என்ன விஷயம்? என்று கோபமாகவே கேட்டார்.

ஒன்றுமில்லை அரசே! எங்கள் ஊரில் உங்கள் யானை தனிமையில் சுற்றித் திரிவதால், மரம் தோப்புக்கள் சரிவரச் சுத்தமாகவில்லை. அதனால் உங்கள் யானைக்குக் கல்யாணம் செய்து துணையோடு அனுப்பி வைக்க வேண்டும் என முறையிடவே வந்தோம் என முல்லா சாமர்த்தியமாகக் கூறினார்.

தன் குரலை எவ்வளவு தூரம் கேட்கலாம்

தொழுகை நடத்த பள்ளி வாசலுக்குச் சென்றார் முல்லா. மண்டியிட்டு உரத்த குரலில் பிரார்த்தனை செய்தார். பிரார்த்தனை முடிந்ததும் வேகமாக எழுந்து ஓடினார்.

அதைக்கண்ட நண்பர் ஒருவர் முல்லாவைப் பார்த்து எங்கு வேகமாக ஓடுகிறீர்கள்? எனக் கேட்டார்.

நான் இன்று மிக உரத்த குரலில் பிரார்த்தனை செய்தேன். அந்தக் குரலை எவ்வளவு தூரம்வரைகேட்க முடியும் என்பதை அறிந்து கொள்ள ஓடுகிறேன் என்று பதில் சொல்லிவிட்டு ஓடிச்கொண்டிருந்தார் முல்லா.

கழுதையும் தாடியும் (உவமானம்)

ஓர் ஊரில் மூன்று அறிஞர்கள் இருந்தார்கள். அவர்கள் வாதத்திலும் கேள்வியிலும் வல்லவர்கள். கல்வியில் பண்டிதர்கள். அவர்கள் மூவரும் சேர்ந்தே எங்கும் போவார்கள், வருவார்கள். ஊர் ஊராகப் போய், அங்குள்ள அறிஞர்களிடம் தங்கள் திறமைகளைக் காட்டி, அவர்களை வென்று புகழும் பொருளும் பெற்று வந்தனர்.

இந்த மூன்று அறிஞர்களிடமும் தோற்றவர்கள் தங்கள் விருதுகளைக் காணிக்கையாகக் கொடுத்துவிட வேண்டும். அந்த ஊராரும் இம்மூன்று அறிஞர்களே அறிவில் சிறந்தவர்கள் என்று அறிவித்துப் பொன்னும் பொருளும் கொடுத்து கௌரவித்து அனுப்ப வேண்டும்.

இப்படி பல ஊர்களுக்கும் சென்று அங்குள்ள அறிஞர்களை வென்று பல பரிசுகளையும் புகழையும் பெற்று வந்தனர்.

அவர்கள் ஒரு நாள் முல்லா வாழ்ந்த ஊருக்கும் வந்தனர். தங்கள் வந்திருப்பதன் காரணத்தை, அவ்வூர்த் தலைவரிடம் அறிவித்தார்கள்.

ஊர்த்தலைவர் முல்லாவை வரவழைத்தார். முல்லா, இந்த ஊரின் பேரறிஞரான நீங்கள், இங்கு வந்து தங்கியுள்ள மூன்று அறிஞர்களோடும் போட்டியிட்டு வெற்றி பெற வேண்டும். நம் ஊரின் புகழைக் காப் பாற்ற வேண்டும் என்று சொன்னார். அதற்கு முல்லாவும் சம்மதித்தார்.

போட்டியைக் காண மக்கள் கூட்டம் திரண்டிருந்தது. மூன்று பேரறிஞர்களும் ஒரு பக்கமும், முல்லா மட்டும் மறு பக்கமும் நிற்க போட்டி தொடங்கியது.

முதல் பேரறிஞர் முல்லாவிடம் கேள்வி கேட்டார்.

இந்த உலகத்தில் நடுப்பகுதி எது?

இக்கேள்வியைக் கண்டு முல்லா சற்றும் யோசிக்கவில்லை உடனடியாகப் பதில் சொன்னார். என் கழுதை நிற்கும் இடம்தான் உலகின் நடுப்பகுதி.

முதல் அறிஞர் அதை உண்மை என்று நிரூபியுங்கள் பார்க்கலாம் என்றார்.

உடனே முல்லா, நான் கூறியது தவறு என்று நீங்கள் நிரூபியுங்கள் உலகை இப்போதே அளந்து பாருங்கள் என் கழுதை நிற்கும் இடமே உலகின் நடுப்பகுதி என்பதை அறிய முடியும் என்றார்.

முதல் அறிஞர் பேசாமல் உட்கார்ந்து விட்டார். இரண்டாம் அறிஞர் எழுந்தார். அவர் முல்லாவைப் பார்த்து ஆகாயத்தில் உள்ள நட்சத்திரங்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு? என்று கேட்டார்.

தொடர்ச்சி அடுத்த வாரம்

பாரதியின் வரலாறு



வ.வே.ஸு.ஐயர்

வ.ரா.



நெல்லையப்பர்

பாரதிதாசன்

பாரதி, ஐயர், ஸ்ரீநிவாஸாச்சாரி இவர்களை பிரிட்டிஷ் எல்லைக்குள் கொண்டு வந்து ஒப்புவித்தால் தலைக்கு ஆயிரம் ரூபாய் பரிசு தருவதாக நோட்டீஸ் ஒட்டினார்கள். புதுவை நகரிலும், சென்னைப் போலீஸின் ஒற்றர்கள் ஏராளமான பேர் உலவினார்கள். பாரதி முதலியவர்கள் எங்கே சென்றாலும் இவர்கள் தொடர்ந்தார்கள்.

ஒற்றர்கள் பல மாறு வேடங்களில் பாரதியின் வீட்டுக்கு வந்து அவரிடம் பேச்சுக்கொடுத்து அவர் மனதை ஆழம் பார்த்தார்கள். அவர் ஏதாவது வெடிகுண்டு, துப்பாக்கிச் சதிகளில் ஈடுபட்டிருக்கிறாரா என்று அறிய முயன்றார்கள்.

பாரதிக்குப் பலாத்கார வெடிகுண்டு, துப்பாக்கி முயற்சிகளில் நம்பிக்கை கிடையாது. அவைகளை அவர் கண்டித்துமிருக் கிறார். இருந்தாலும் போலீஸார் அவரைத் தொல்லைக்குள்ளாக்கினார்கள்.

ஒரு சமயம் ஒரு போலீஸ் ஒற்றன் ரத்தின வியாபாரி போல பாரதியிடம் வந்தான். அவனைக் கண்டுகொண்ட பாரதி, "ஓய்! என்னிடம் கொஞ்சம் (இலக்கிய) ரத்தினங்கள் இருக் கின்றன. அவை விலை போக உங்கள் சர்க்காரிடம் சிபாரிசு செய்யுங்கள்! உங்களிடம் போலீஸ் டயரி இருக்கிற தல்லவா?" என்றார்.

அவன் வரும் சமயம், "நாயும் பிழைக்குமிந்தப் பிழைப்பு!" என்று கும்பிடு போட்டு நழுவிவிட்டான் ஒற்றன்.

மற்றொரு சமயம், மொட்டைத் தலையுடன் துறவி போல் உடையணிந்த ஒருவன் தான் இலக்கியப் பிரியன் என்றும், பாரதி பாட்டைக் கேட்கப் போலீஸ் கண்ணில் படாதபடி வருவதாகவும் வந்தான். அவனும் ஒற்ற னென்று ஊகித்த பாரதி, பாடினார். வந்தவன் கும்பிட்டான். பாரதி நகைத்தார். கிரகஸ்தன் கும்பிட வேண்டும், சந்நியாசி ஆசீர்வதிக்க வேண்டும். இதுகூடத் தெரியாத வேஷதாரியே, உயர்வாக வாழும் மட்டத்தில் ஆசை வைக்க வேண்டாம் என்று சொல்லி அனுப்பினார்.

வேறொரு சமயம், வ.வே.ஸு. ஐயர் வீட்டுக் கொல்லையில் இருந்த கிணற்றில் ஒரு மூடிய ஜாடி அகப்பட்டது. அதை யாரோ போட்டிருந்தார்கள். ஐயர், பாரதி முதலியவர்கள் அதை அதிகாரிகளிடம் எடுத்துப் போய், அவர்கள் முன் உடைத்தார்கள். அந்த ஜாடியில் சில காகிதங்கள் இருந்தன. ஐயர், பாரதி, நீலகண்ட பிரம்மச்சாரி முதலிய தேசபக்தர்கள் வெள்ளையர்களையெல்லாம் கொல்லத் திட்டமிட்டிருப்பது போல அச்சடித்த சில நோட்டீஸ்கள் இருந்தன.

இது சென்னைப் போலீஸாரின் கையாட்கள் வேலை என்று ஐயரும் பாரதியும் நிரூபித்தார்கள்.

இம்மாதிரி சில்லறைத் தொல்லைகள் பலிக்காமற் போகவே, பிரெஞ்சிந்திய அதிகாரிகள் மூலம் சில தந்திரங்களைச் சென்னைப் போலீஸார் கையாண்டார்கள். ஒரு குறித்த நாளுக்குள் புதுச் சேரியிலுள்ள அந்நியர் அனைவரும் ஐந்து மாஜிஸ்ட்ரேட்டுகளின் கையெழுத்து வாங்கிவந்தால்தான் புதுவையில் இருக்கலாம் என்று ஒரு சட்டம் வரச் செய்தார்கள். பாரதி முதலியவர்களுக்கு மாஜிஸ்ட்ரேட்டுகள் கையெழுத்துப் போடமாட்டார்கள் என்று சென்னைப் போலீஸ் ஆட்கள் நினைத்தனர். இந்த கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகள் கையெழுத்து வாங்குவது எப்படி என்று எல்லோரும் தவித்த சமயம், பாரதி, கலவை சங்கர செட்டியார் என்ற புதுவைப் பிரமுகரிடம் போனார்.

"செட்டியாள்வார், நீங்களெல்லாம் இருக்கும்போது நாங்கள் புதுவையை விட்டுப் போக வேண்டுமா?" என்றார்.

விஷயமறிந்த சங்கர செட்டியார், "இவ்வளவு தானே? நானே ஒரு கௌரவ மாஜிஸ்டிரேட். இன்று சாயந்திரத்துக்குள் மற்றும் நான்கு மாஜிஸ்டிரேட்டுகள் கையெழுத்தை நான் வாங்கித் தருகிறேன். கவலைவேண்டாம்" என்றார். மலை போல் வந்த வினை பனி போல் நீங்கியது.

தொடரும்...

நூல் அறிமுகமும் விமர்சனமும்

மன ஓசை

வீ. சுந்தரலிங்கம் (சுந்தா)
7, பரடைஸ் பிளேஸ்
சென்ற்கிளைவ்
என்.எஸ்.டபிள்யூ 2759
அவுஸ்திரேலியா.

ஒலிபரப்பாளனாக அரை நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக அரூபமாய் ஒலிவடிவில் உங்களுடன் உறவாடிய என் மனப் பதிவுகளே இங்கு வரிவடிவம் காண்கின்றன.

இலங்கை வானொலி அறிவிப்பாளனாகத் தொடங்கிய என் ஒலி பரப்புக்கலைப்பயணம், உங்கள் அன்பின் பி. பி. சி சுந்தா சுந்தரலிங்கமாக இன்றும் தொடர்கிறது. மக்கள் தொடர்பியலின் பல்வேறு களங்களிடையேயும் என் அனுபவங்கள் பரந்துள்ளன. ஒலிபரப்புக்கலை, ஒளிப்படக்கலை, மேடைநாடகம், மேடைநிர்வாகம், மொழிபெயர்ப்பு, விளம்பரக்கலை எனப் பல துறைகளிலும் எனது குரல் கேட்கும்.

தமிழ் கூறும் நல்லுலகில் பரவலாகவே அறியப்பட்ட மேன்மையான மனிதர் சுந்தா. உற்காகமும் முக மலர்வும் செறிந்த முகமே அவரை நினைக்கின்ற போது கண்களில் வருவது. சக்கரநாற்காலிக்குள் அமர நிர்ப்பந்திக்கப்பட்ட அந்தக் கலைஞனின், காற்றில் கலை எழுதும் படைப்பாளியின் நினைவுப் பதிவே இந்த (மனஓசை) மேலேயுள்ள வரிகளில் தன் ஆளுமையின் பிம்பத்தை மனதைத்தொடும் விதத்தில் உணர்த்துகின்றார் சுந்தா, இவை அவரின் சொற்கள், அதை மௌனகுருவின் மாணவன் இன்பமோகன் பாராட்டத்தக்க விதத்தில் எழுத்து வடிவிற்குக் கொண்டு வந்திருக்கிறார்.

தனது மனப்பதிவினை சிறுபராயத்திலிருந்தே நினைவு கூருகின்றார் சுந்தா. ஆற்றலுள்ள கலைஞனாய் கடந்த காலத்தை கண்முன்னே சித்திரமாக்குகிறார்.

" நான் பிறந்தது சாவகச்சேரி என்னும் ஒரு கிராமத்தில். இது யாழ்ப்பாணத்திலிருந்து தெற்குப் பக்கமாகப் பத்து மைல் தொலைவில் உள்ளது. 67 வருடங்களுக்கு முன்னர்அது கிராமமாக இருந்தது. இப்போது நகரமாக மாறிக் கொண்டு வருகின்றது.

சாவகச்சேரி புகையிரத நிலையத்தில் புகையிரதம் வந்து நிற்க மறுபுறம் பார்த்தால் அழகிய மணற்பிட்டி தெரியும். சோழக்காற்று பரந்த வயல் வெளிகளைத் தாண்டி சிறு கட்டிடங்களைத் தொடும்போது நல்ல புழுதியையும் அள்ளிக் கொண்டு வந்து கொட்டிவிடும். எதிர்க்காற்று இல்லாததால் அந்த மணல் அங்கேயே தங்குகிறது. காலஞ்செல்லச்செல்ல இந்த மணல் குவிந்து "மணல் பிட்டி" யாகி விட்டது. ஊருக்கு இது ஒரு அடையாளம்.

புகையிரத நிலையத்தைக் கடந்து பார்த்தால் பரந்த வயல் வெளிகளம், குளமும் - குளக்கரையில் அடர்ந்து பரந்த இத்தி மரமும், அதன் அடியில் லிங்கமும் - இத்தியடியான் அருகிலேயே வாரிவனநாதர் கோயில், பக்கத்திலே சிவன் கோவில் இன்னும் சற்றுத் தொலைவில் வீரபத்திரர் கோவில், முருகன் கோவில், மாரியம்மன் கோவில், விறுமர்கோவில் என இப்படியே தொடராகப் பலகோவில்கள். எனது தாயார் கோவிலிலே சித்திரபுத்திரனார் [illegible] படிக்கும் பொழுது நானும் சிறுவனாக அவரோடு உட்கார்ந்து இருந்த ஞாபகம் இனிமையான நாட்கள்!

பக்கத்திலேயுள்ள மட்டுவில், சர சாலை, மீசாலை போன்ற இடங்களிலிருந்து உடன்பறித்த காய்கறி- முருங்கை, பாகல், கத்தரி, கீரை, பாகற்காய் என்று பல - மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம் போன்ற பழங்கள், நாட்டுக் கோழி முட்டை ஆகியன சந்தைக்கு விற்பனைக்கு வரும். சாவகச்சேரியில் செவ்வாய், வியாழ[illegible] சனிக்கிழமைகளில் நத்தை கூடும். அருகேயுள்ள கடலிருந்து மணல் திட்டுக்களால் பிரிக்கப்பட்ட ஏரி போன்ற உப்புநீர் தேக்கம். இதில் மீன், இறால், கணவாய், திருக்கை முதலாய சுவைபக கடலுணவு வகைகளும் தாராளமாகக் கிடைக்கின்றன. [illegible]குந்த மனத்திருப்தியுடன் எப்பொழுதும் இன்பமாக இதாக வாழும் பழக்கமுடைய மக்கள் விருந்தோம்பலும் போதுமென்ற மனத் திருப்தியுடனும் அங்கு வாழ்கிறார்கள். இவைதான் சாவகசேரியின் அமைப்பு செழிபான ஊர் என்ற படியல் போலும் சாவச்சேரியை "குழைக்காடு" என்றும் செல்லமாக அழைப்பார்கள்.

காவில் குடியிருப்பு என்ற பகுயில்தான் நான் பிறந்தேன். முருகன் கோவில் ஒன்றைச் சுற்றியுள்ள குடியிருப்புக்கள் யாவும் எங்கள் உள்ளூர் உறவினர். இன்றும் எத்தனையோ இடர்களுகு மத்தியிலும் எனது சகோதரியோகவதியும் அவரது மகள் வசந்தியும் சாவகச்சேரியில் வாழ்கின்றார்கள். அவர்கள் அங்கே இருக்கத்தான் விரும்புகிறார்கள். நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்துப் பல வருடங்கள் அகிவிட்டன. இன்று நாம் எல்லோரும் ஒவ்வொரு பக்கமாகச் சிதறிப் போனோமே!

நாடகம், இசை ஆகியவற்றில் பெரிதும் ஈடுபாடுடைய அந்த மக்கள், கோவில்களை முன் வைத்தே ஆடல், பாடல் நிகழ்ச்சிகளையும், திருவிழாக்களையும் நடத்துவார்கள். சின்ன மேளம், பெரிய மேளம், அரிச்சந்திரன் கூத்து, காத்தவராயன் கூத்து என்று ஊரே அமர்க்களப்படும். இப்படியான சூழ்நிலையில் வளர்ந்தவன்தான் நான்.

சாவகச்சேரியில் அரசாங்கக் கடமைக்கென்று வரும் உத்தியோகத்தர்களும் ஆசிரியர் முதலியோரும் கடமைக்காலம் முடிவடைந்த பின்னரும் தமது குடும்பங்களை அங்கே குடியமர்த்தி, பிள்ளைகளைப் படிப்பிப்பதற்கு பாடசாலைகளிற் சேர்த்துவிட்டுப் போவார்கள். இதனால் அங்கே "வந்தேறு" குடிகளும் பல.

நான் பிறந்த காலத்திலேயே இருந்து அங்கே நாடகம், பாட்டுக் கச்சேரி போன்ற நிகழ்ச்சிகள் தான் பொழுது போக்குக்காக இருந்தன. பின்னர் சினிமாவும் வந்து விட்டது. அங்கே பெரும் கொட்டகைகள் இருக்கவில்லை. கூடாரம் அடித்து அவ்வப்போது படம் காட்டுகிற கொம்பனிகள்தான் வந்து போயின. டூரிங் டாக்கீஸ் என்று சொல்வார்கள்".

சிறந்த கலைஞனின் மனப்பதிவென்பது காலத்தால் அழியாத சித்திரமாகிவிடும் என்ற கூற்றுக்கு மேற்கூறிய வார்த்தை களைவிட உறுதியான சான்றுதான் என்ன?

பல் குழல் பீரங்கிகளால் வனப்பிழந்து சிதைந்த சாவகச்சேரியை இந்த அடையாளத்தோடு இனிவரும் தலைமுறை ஒப்பிட்டுப் பார்க்கும்.

தனது வானொலி அனுபவம், நண்பர் வாழ்வு, ஆளுமை பற்றிய சுந்தாவின் வாக்குமூலம், ஊடகத்துறை பண்பாட்டு வரலாறாகவும் விரிகின்றது. வானொலித் துறை இளந்தலைமுறை சுந்தாவிடம் நிறையவே கற்றறிய வேண்டும், இந்தநூலின் மூலமாக.

தன் நண்பர் சுந்தாபற்றி நெகிழ்வோடு பேராசிரியர் சிவத்தம்பி எழுதியுள்ள முன்னுரை வாசகர்மனதை வசப்படுத்தி தளும்பவைக்கும். நட்பின் இறுக்கம் சொற்களில் உயிர்பெற்றுக் கேட்கிறது. ட்ராஸ்கி மருதுஷின் அழகான ஓவியமும் நூலமைப்பும் மிகத்தரமாக உள்ளன.

செ.யோ

புதிய சகத்திரப் புலர்வின் முன்

சிறுகதைகள்
புலோலியூர்
ஆ. இரத்தினவேலோன்
மீரா பதிப்பகம்
191/ 23 ஹைலெவல் வீதி
கிருலப்பனை
கொழும்பு - 06,
விலை ரூபா 125.00

தமிழில் வெளிவரும் நூல்களின் முன், பின் பக்கங்களைத் தட்டிப் பார்த்து விட்டு அதைப் பற்றி நீண்ட ஆய்வுகள் எழுதும் பேராசிரியர் களிடையே, அர்ப்பணிப்போடும் ஆழ்ந்த வாசிப்போடும் நூல் அறிமுகம் செய்பவர்களை ஒற்றைக் கைவிர லினுள் அடக்கி விடலாம். அவர்களில் இரத்தி னவேலோன் ஒருவர்.

ஒரு படைப்பாளியின் நூலை முழுமையாகப் படித்து, அவனைப் பற்றிய தரவுகளையும் சேகரித்து இவற்றின் இணைப்பாக நூலறிமுகம் செய்யும்ஆசிரியர், படைப்புலகத்திற்கு அறியப்பட வேண்டிய விபரங்களைக் கொடுக்கிறார். வாசகர்களை படைப்பாளியின் கைதொட்டு நெருக்கம் கொள்ளச் செய்கின்றார்.

இருபத்தைந்து நூல்களை இத்தொகுதியில் வேலோன் அறிமுகம் செய்கிறார். இணைப்பாக 1995-99 கால சிறு கதைவளர்ச்சிப் போக்கையும் மேலோட்டமாகத் தொட்டுக்காட்டுகிறார். இத்தொகுதிகள் யாவும் சமதர முள்ளன அல்ல. ஏனெனில் ஆசிரியர், வாசக உலகிற்கு நூலறிமுகம் மட்டுமே செய்ய விழைகின்றார். இத்தகைய பத்தி எழுத்து இன்றைய நிலையில் அவசியமானது.

கே.எஸ். சிவகுமாரன் கூறுவதுபோல, படைக்கும் ஆற்றலுடன் படைப்பு நுட்பங்களையும் அறிந்து வைத்திருக்கிறார். இதனாலேயே திறனாய்வு சார்ந்த பத்தி எழுத்துக்கள் அவர் கை வண்ணத்தில் மெருகும், ஆழமும் எழுத்து நேர்த்தியும் கொண்டு காணப்படுகின்றன?

தமிழில் அரிதான இந்த முயற்சியை இரத்தினவேலோன் சோர்வின்றி மேற்கொள்வது தமிழுக்கு வளம் சேர்க்கும்.

வருகை

செடிவிட்ட வேர்கள்
கும்மல் துறை,
எம். றிஸ்வான்
கவிதைகள்
டி.எம்.சி.எஸ். கணனி நிலையம்
137/ 2/ 1 பள்ளிவீதி,
பெரியமுல்லை,
நீர்கொழும்பு.
விலை ரூபா 100.00

மரபு வழித்திறனாய்வும் ஈழத்துத் தமிழ் இலக்கியமும்
கே.எஸ் சிவகுமாரன்
திறனாய்வு
மீரா பதிப்பகம்
191/ 23, ஹைலெவல் வீதி,
கிருலப்பனை,
கொழும்பு 06.
விலை ரூபா 125.00

தமிழ் இலக்கிய வரலாறு
டாக்டர் மு.வரதராசன்
இலக்கிய வரலாறு
சாகித்ய அகாடமி வெளியீடு
இலங்கையில் ;
எம்.டி.குணசேன
217 ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு -11.
விலை ரூபா 195.00
(இலங்கை விலை)

நீதிபதியின் மகன்
அழகு சுப்பிரமணியம்
தமிழில் ராஜஸ்ரீகாந்தன்
76/ 35, பரமானந்த மாவத்தை,
கொழும்பு - 13.
விலை ரூபா 100.00

வரண்டு போன மேகங்கள்
திக்குவல்லை கமால்
சிறுகதைகள்
பேசும் பேனா வெளியீடு
191/ பி, அட்டுலகம,
பண்டாரகம.
விலை ரூபா. 75.00

நூல் விமர்சனத்திற்கு இரண்டு பிரதிகளை தவறாது அனுப்பி வைக்கவும்

இந்தியாவைத் தேடி... 1900

ஐரோப்பியப் பேரரசுகள் நாடுகளைப் பிடித்த சரித்திரத்தைவிடப் புதிய நாடுகளைத் தண்டுபிடித்த வரலாறு விறுவிறுப்பானது

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம் உலகுக்குத் தேவைப்படும் பொருட்களைத் தயார்செய்யும் வொர்க்ஷாப் என்று வர்ணிக்கும் அளவுக்குத் தொழில்துறையிலும் வர்த்தகத்திலும் இங்கிலாந்து முன்னணியில் இருந்தது!

உலக நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி அப்போது இங்கிலாந்தின் ஆதிக்கத்தில் இருந்தது. இங்கிலாந்துக்குச் சரிசமமாக என்று சொல்ல முடியாவிட்டாலும்... ஆப்பிரிக்காவிலும் இந்தோ சீனாவிலும் பெரும்பாலான பகுதிகளை பிரான்ஸ் பிடித்து வைத்திருந்தது.

ஏறத்தாழ 1450ம் ஆண்டு வரை உலகின் ஒரு பகுதியில் இருப்பவர்களுக்கு அடுத்த பகுதியில் என்ன நடக்கிறது என்று தெரியாமல் அறியாமையில்இருந்த காலம்! சுட்டெரிக்கும் சஹாரா பாலைவனம் குறுக்கே இருந்ததால், ஐரோப்பியரும் குதிரைகள் ஆகியவற்றைக் கொடுத்துவிட்டு அவற்றுக்கு ஈடாக அரேபியர்கள் இந்தியாவின் வண்ணவண்ணப்பருத்தி ஆடைகள்... மிளகு, கராம்பு போன்ற வாசனைப் பொருட்கள்... பட்டு, பவழம், கோமேதகம் போன்றவற்றை வாங்கி ஒட்டகங்களின் முதுகில் ஏற்றிக் கொண்டு சீனா வழியாக இத்தாலி நாட்டின் வெனீஸ் நகருக்குக் கொண்டுபோய்த் தங்கத்துக்கு விற்று விடுவார்கள்! மிளகு, கராம்பு மாதிரியான வாசனைப் பொருட்களுக்கு ஐரோப்பிய நாடுகளில் அப்போது பெரும் கிராக்கி! காரணம் குளிர் காலங்களில் அவர்களால் வீட்டைவிட்டு வெளியே வரமுடியாது. பனிமழை பொழியும் இந்தப் பருவத்தில் மாமிசத்தைப் பதப்படுத்திவைக்க உப்பை மட்டும் நம்பினால் போதாது. அதனால் மிளகு கராம்பு மாதிரியான வாசனைப் பொருட்கள் அத்தியாவசியமாகத் தேவைப்பட்டன!



ஆசியர்களும் ஆப்பிரிக்காவின் உள்ளேகூட அடியெடுத்து வைக்காமல் வெளியிலேயே நின்றனர்! பூமிப் பந்தில் அமெரிக்கா ஆஸ்திரேலியா போன்ற கண்டங்கள் இருப்பதேகூட யாருக்கும் தெரியாது!

அந்த நேரத்தில் மலேஷியா ஆசியாவின் வர்த்தக மையமாக இருந்தது. இந்தியா சீனா இந்தோனேஷியா மற்றும் மத்திய தரைக் கடல் நாடுகளைச் சோர்ந்த அரேபியர்கள் இங்கே கூடுவார்கள்! தரை விரிப்புகள், பேரீச்சம்பழம், அரேபிக் மத்திய தரைக்கடல் நாடுகளில் அரேபிய வியாபாரிகளுக்குத் தங்கத்தைக் கொட்டிக் கொடுத்து எத்தனை நாட்களுக்குத்தான் வாசனைப் பொருட்களை வாங்குவது இந்தியாவுக்குச் செல்லும் கடல் மார்க்கத்தை நாமே கண்டுபிடித்து விட்டால்..? இந்த ஆசை ஐரோப் பியர்களைத் தூக்கம் இழக்கச் செய்தது! ஆனால், நிஜம் வேறு மாதிரியிருந்தது! அந்தக் காலத்தில் சுயஸ் கால்வாய் இல்லை. ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு வரவேண்டுமானால்,

அதுவரை யாரும் பயணிக்காத அட்லாண்டிக் கடலில் ஆப்பிரிக்கக் கண்டத்தைச் சுற்றிக்கொண்டு வந்துதான் இந்தியாவைத் தேடவேண்டும். தவிர இந்தியா எங்கே இருக்கிறது என்றும் சரியாகத் தெரியாது. நிலத்தால் சூழப்பட்ட பால்டிக் கடலுக்குள் மட்டும் பாதுகாப்பாகப் பயணம் செய்து பழக்கப்பட்ட ஐரோப்பிய மாலுமிகளுக்கு, அட்லாண்டிக் சமுத்திரம் என்றால் பயம்! இறுதியில்... இந்தியா மீதிருந்த ஈர்ப்பு, பயத்தை வென்றது! இந்தோனேஷியாவையும் இந்தியாவையும் தேடிப் பல பாரசீகக் கப்பல்களும் டச்சு



நாட்டுக் கப்பல்களும் ஒன்றன்பின் ஒன்றாக அட்லாண்டிக் கடலில் இறங்கி! புதிய சரித்திரம் ஆரம்பித்தது!

இந்தியாவைத் தேடிப்புறப்பட்ட போதுதான் உலகின் அகல, நீளமே மனித குலத்துக்குத் தெரிய ஆரம்பித்தது! கியூபா, பகாமாஸ், மேற்கிந்தியத் தீவுகள், சிலி, பிலிப்பைன்ஸ், மொசாம்பிக், பசுபிக் பெருங்கடல் என்று வரிசையாகப் பல புதிய



கடல்வழித்தடங்களையும் கண்டுபிடித்தார்கள்! எல்லாவற்றுக்கும் உச்சகட்டமாக, இந்தியாவைத் தேடிப் பயணம் மேற்கொண்ட போதுதான் கிறிஸ்டோஃபர் கொலம்பஸ் அமெரிக்காவையே கண்டுபிடித்தார். இது நடந்தது 1492ல்.

பூமியின் பல பிரதேசங்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவர உதவிய இந்தியா, கடைசியாக 1498ம் ஆண்டு வாஸ்கொடகாமாவால் கண்டுபிடிக்கப்பட்டது!

கற்பனைக் கண்டத்தைத் தேடி டச்சு நாட்டவரான வில்லியம் ஜென்சூன், இந்தோனேஷியாவில் இருந்து நியூகினி தீவுகளுக்குப் பயணம் மேற்கொண்ட போது மர்ம முடிச்சு திடீரென்று அவிழ்ந்தது! ஆம்... ஆஸ்திரேலியா கண்டுபிடிக்கப்பட்டது! ஆசியா அளவுக்கு ஒரு கண்டத்தை எதிர்பார்த்த ஐரோப்பி யர்களால், ஆஸ்திரே லியாவைத் தாங்கள் கற்பனை செய்த கண்டமாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை! 1776ம் ஆண்டு இங்கிலாந்து நாட்டைச் சோர்ந்த ஜேம்ஸ் குக் புதிய கண்டத்தைக் கண்டுபிடிக்க பசிபிக் பெருங்கடலை பல ஆண்டுகள் சலைக்காமல் சலித்தெடுத்தார். அப்போது நியூசிலாந்து, தஹித்தி என்று பல நாடுகளை பிரிட்டிஷ் கொடியின் கீழ் அவர் கொண்டு வந்தார்.

சந்தேகத்துக்கு இடம் இல்லாத உலகின் புதிய வரைபடம் மனித இனத்துக்குக் கிடைத்தது!

● உலகம் 1900ம் ஆண்டுக்குள் அடி எடுத்து வைத்தது! அப்போதே அச்சு இயந்திரத்துக்கு வயது 400 என்பதால், அவை உலகின் பெரிய நகரங்களில் புழக்கத்துக்கு வந்துவிட்டன! புத்தகங்கள் படிக்கும் பழக்கம் கணிசமான அளவுக்கு மக்களிடையே பரவ ஆரம்பித்திருந்தது! ரயில் போக்குவரத்தும் புழக்கத்துக்கு வந்துவிட்டது. மோட்டார் கார்கள் கூட வீதிகளுக்கு வந்துவிட்டன என்றாலும், உலகின் பெரும்பாலான நாடுகளில் குதிரை வண்டிகளும் மாட்டு வண்டிகளுமே வீதிகளில் தென்பட்டன! ரேடியோ, டி.வி. என்று எல்லாமே ஆராய்ச்சிக் கட்டத்திலேயே இருந்ததால், மக்களுக்கு நாடகத்தையும் இசையையும் விட்டால் வேறு பொழுது போக்குகள் கிடையாது!

● போர்!

இந்த ஆண்டு சீனாவில் பாக்ஸர் போரும் தென் ஆப்பிரிக்காவில் போயர் யுத்தமும் நடந்தன.

● ஏன் இந்த கனவு?

ஆஸ்திரியாவைச் சேர்ந்த சிக்மண்ட் ஃப்ராய்டு என்ற மனோதத்துவ நிபுணரின் கண்டுபிடிப்பு தூக்கத்தில் தோன்றும் கனவுகள் பற்றி மனிதனுக்கு இருந்த பல சந்தேகங்களுக்கு விடை சொன்னது! மூட நம்பிக்கைகளுக்கும் தேவையில்லாத பயத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்தது. மனிதனின் ஆசை அல்லது பயம் இவைதான் அவன் தூங்கும் போது கனவாக வெளிப்படுகிறது என்பது இவரின் கண்டுபிடிப்பு. இதுதான் மனோ தத்துவ இயல்பு பற்றி பிறகு எழுதப்

படவிருந்த அத்தனை உண்மை களுக்கும் முன்னுடை அடிப் படை..ஆணிவேர்..எனலாம்!